FIAT LUX

# வழி...

மலர் 05

2008



SOCIAL SCIENCE UNION - 2008

J/HARTLEY COLLEGE

POINT PEDRO.

# வழி

## மலர் 05 2008

FIAT LUX

இதழாசிரியர்கள்

ஜெ. துசந்தன்

ம. மணிமாறன்

**சமூக விஞ்ஞான மன்றம்**

யா/ ஹாட்லிக் கல்லூரி

பருத்தித்துறை

## MOTO - FIAT LUX
## "LET THERE BE LIGHT"

### OUR VISION

"TO BE THE LEADING SCHOOL IN SRI LANKA, SAVING ALL PUPILS THROUGH OUR STRENGTH AND COMMITMENT TO ACADEMIC EXCELLENCE"

### OUR MISSION

#### FOR OUR STUDENTS

WE WILL SUFFICE STUDENTS' EXPECTATIONS BY PROVIDING A COMPREHENSIVE, COMPETITIVE AND INNOVATIVE EDUCATION THROUGH A FRIENDLY, COMPETENT AND MOTIVATED ACADEMIC STAFF.

#### FOR OUR TEACHERS

WE WILL TREAT OUR STAFF AS PARTNERS, WHO ENDEAVOUR TOWARD THE INSTITUTIONAL BETTERMENT PERSUADING THEM TO ACHIEVE THE GOAL BY FOSTERING A CULTURE THAT PROMOTES TEAMWORK, AND OFFERING OPPORTUNITIES TO IMPROVE THEIR PERSONAL DEVELOPMENT WHILST RECOGNIZING AND REWARDING THOSE DELIVERING THE HIGHEST LEVEL OF ACADEMIC SERVICE

#### FOR OUR SOCIETY

WE WILL BE A PARTNER FOR, AND CONTRIBUTE TO THE CULTURE, EDUCATIONAL, ECOLOGICAL, ECONOMIC AND SOCIAL DEVELOPMENT OF THE AREA.

# உள்ளே!



| | பக்கம் |
|---|---|
| அதிபரின் ஆசிச்செய்தி | I |
| பிரதி அதிபரின் ஆசிச்செய்தி | II |
| பிரிவுத்தலைவரின் ஆசிச்செய்தி | III |
| மன்றப் பொறுப்பாசிரியரின் ஆசிச்செய்தி | IV |
| மன்றத் தலைவரின் செய்தி | V |
| இதழாசிரியரின் எண்ணத்திலிருந்து | VI |
| சமூக விஞ்ஞான மன்ற நிர்வாகக்குழு | VII |
| 01. உலகியல் அன்பும் தெய்வீக அன்பும் | 1 |
| 02. எதிர் யதார்த்த அரங்கு (Anti Realistic Theatre) | 4 |
| 03. மகாகவி பாரதியாரின் வாழ்க்கை குறிப்புகள் | 10 |
| 04. இலங்கையின் பொருளாதாரத்தில் எண்ணெய் விலை அதிகரிப்பின் தாக்கங்கள் | 12 |
| 05. சமுதாயம் மாறவேண்டும் | 15 |
| 06. திருவடி சூட்டுப்படலத்தில் இலக்குமணன் சூளுரை | 21 |
| 07. தமிழ்மொழியின் தனித்துவம் | 23 |
| 08. கிராமியக் கலைகள் ஒரு ஆய்வு | 25 |
| 09. உலகமயமாதல் | 28 |
| 10. விக்கிரக ஆராதனை | 36 |
| 11. அறிவியலும் கலையும் | 38 |
| 12. அளவை இயலில் உடன் அனுமானம் | 39 |
| 13. புதிய கம்பனிச்சட்டமும் பிரதான மாற்றங்களும் | 48 |
| 14. மறக்கமுடியவில்லை | 51 |
| 15. வரலாறு சொல்லும் நம் நினைவுகளை | 52 |
| 16. நாயக்கர்கால பொதுமக்கள் சார்பான இலக்கிய போக்கு | 57 |
| 17. பாடசாலைக் கல்வியின் மகத்துவம் மீண்டும் நிலைநிறுத்தப்படவேண்டும் | 60 |
| 18. இலக்கியத்தினூடே மக்கள் வாழ்க்கை | 61 |
| 19. சூழல் மாசடைதல் | 64 |
| 20. பௌர்ணமி | 65 |
| 21. சிந்தையில் இருந்து வாழ்வின்படியே | 70 |
| 22. திறனாய்வாளனின் பார்வையில் இன்றைய கல்வி | 73 |
| 23. Air Pollution | 76 |
| 24. இன்றைய பணம் | 78 |
| 25. வலியோடு வா (வலி தாண்டிவா) | 80 |
| நன்றியுரை | |
| பாடசாலைக் கீதம் | |

# அதிபரின் ஆசிச்செய்தி

மாணவரின் ஆக்கத்திறன் வெளிப்பாட்டுக்கு "வழி" சஞ்சிகை ஓர் சிறந்த களமாக அமைகிறது. சமூக விஞ்ஞான மன்றம் ஆளுமை வளர்ச்சி, சிறந்த மனப்பாங்கை உருவாக்கல், சமூகத்துடன் இயைந்து வாழல், இணைந்து பணியாற்றல் போன்ற பண்புகளை மாணவரிடத்தே வளர்க்க உதவுகின்றது. ஒரு மன்றம் தனது செயற்பாட்டின்மூலம் சாதித்தவற்றை பட்டியற்படுத்துவது அதன் வளர்ச்சிக்கு உதவியாக அமையும். அத்தோடு அணுகுமுறையில் புத்தாக்கமும் பயன்தரு தன்மையும் வெளிக்காட்டப்படவேண்டும்.

ஆக்கங்கள் பயனுள்ளதாகவும், கற்றல் செயற்பாட்டுக்கு உதவுவதாகவும் புதிய விடயங்களை உள்ளடக்கியதாகவும் வாசகர் மனதைக் கவரக்கூடியதாகவும் இடம்பெறுவது வரவேற்பிற்குரியது. மன்ற நடவடிக்கைகளில் அதன் எல்லா உறுப்பினர்களினதும் பங்குபற்றுதல் மிக அவசியமானது. இச் சஞ்சிகையின் உருவாக்கமானது இணைந்து பணிபுரியும் தன்மை, கூட்டுப் பொறுப்பு என்பவற்றை வெளிக்காட்டி நிற்கிறது. இதற்காக பாடுபட்ட மாணவர்கள் ஆசிரியர்களையிட்டு பெருமைப்படுவதோடு பொருளுதவி செய்த அனைத்து உள்ளங்களையும் நன்றியுடன் நினைவுகூருகிறோம். மன்றம் மென்மேலும் மெருகுபெற்று வளர்ச்சிபெற மனமார்ந்த வாழ்த்துக்கள்.

ந. தெய்வேந்திரராஜா
அதிபர்



# பிரதிஅதிபரின் ஆசிச்செய்தி

இன்று ஏற்படும் அறிவின் மாற்றங்களுக்கும், தொழில்நுட்ப வளர்ச்சிக்கும் இணைந்து செயற்பட மாணவன் தன்னைத் தயாராக்கிக் கொள்ளவேண்டுமெனின் அவன் சுயசிந்தையுடன் கூடிய ஆக்கமுயற்சிகளில் ஈடுபடவேண்டும். சஞ்சிகையாக்கம் இவ்வாறான முயற்சிகளில் ஒன்றாகும். இது மாணவனின் ஆளுமையை விருத்திசெய்யப் பெரிதும் உதவுகிறது.

எமது கல்லூரியில் சமூகமன்ற மாணவர்களால் வெளியிடப்படும் வழி சஞ்சிகை தொடர்ந்து வெளிவந்து தன் இலக்கை அடையவேண்டும் என வாழ்த்துகிறோம்.

மா. இராஜஸ்காந்தன்
பிரதிஅதிபர்



# வாழ்த்துரை

"வழி" சஞ்சிகையின் வரவு நல்வரவாகட்டும். இது மொழி வளர்ச்சி; மனிதப் பண்பாட்டு வளர்ச்சியின் மூலவேர் என்ற உண்மையினை உணர்த்தல் வேண்டும். மேலும் விழுமியங்களையறிதல், எண்ணங்களையும், ஆற்றல்களையும் வெளிப்படுமாறு கையாளும் திறனைப் பெறல், கலைத்திறன், ஆக்கத்திறன் என்பவற்றை புகழோடு செய்யும் வல்லமை, உண்மை, அழகு, நன்மை ஆகியவற்றை தெய்வங்களில் வெளிப்படுத்தும் திறன் என்பனவும், ஒளிமிக்க எதிர்காலத்தைத் திறந்துகாட்ட வழி சமைக்க "வழி" உதவவேண்டும் என்றும் வாழ்த்துகின்றேன்.

மாணவர்களின் நடத்தைக்கோலங்களை உன்னிப்பாக அவதானிக்கும் ஆசிரியர் அவர்களுக்குப் பிரச்சனை ஏற்படுவதற்கு முன்னர் உணர்ந்து நடக்கவேண்டும். மேலும் சிறப்புத்திறன், ஆற்றல், உயர்கல்வித் தகைமை, மற்றையோரின் உதவியின்றி ஒரு செயலைத் தொடங்கும் ஆற்றல், அறிவைக் கையளித்தல், சடங்குகள், மரபுகள், கலைகள், சமயம் என்பவற்றுடன் உலகியல் நிலைகளுக்கேற்ப இசைவுபடும் நல்ல சமூகத்தை உருவாக்க எதிர்காலத்தில் சிறந்த வழிகாட்ட இந்த வழி சஞ்சிகை மிளிரவேண்டும் என்று வாழ்த்துக்கூறி அதனை வெளியிடும் சமூக விஞ்ஞான மன்றத்தினற்கும், பொறுப்பாசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் எமது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

"வழி" சஞ்சிகை நல்ல விழிபெற்று ஹாட்லியின் இருதய ஒளியையும் வெளிக்காட்டும் என்றும் வாழ்த்துக் கூறுகின்றேன்.

K. அருளானந்தம்
பிரிவுத் தலைவர்



# மன்றப் பொறுப்பாசிரியரின் உள்ளத்திலிருந்து....

இன்னல்கள் மிகுந்த இச்சூழலிலே எமது கல்லூரியின் சமூக விஞ்ஞான மன்றத்தினால் வருடாந்தம் வெளியிடப்படும் "வழி" சஞ்சிகையின் ஐந்தாவது மலர் வெளிவருவதுகண்டு பெருமையும் மகிழ்ச்சியுமடைகின்றேன்.

2006இல் வெளியிட்ட வழியின் பின் 2007இல் வெளியிடப்படவேண்டிய வழி சஞ்சிகை அசாதாரண சூழல் காரணங்களினால் காலந்தாழ்த்தி வெளிவரினும் விடாமுயற்சியுடன் தன்னலமற்ற செயற்திறனை வெளிப்படுத்தியவர்கள் பாராட்டுக்குரியவர்கள்.

''கல்வி என்பது பயனுள்ள சிந்தனைப்போக்குக்கு அல்லது செயற்பாட்டுக்குப் பயிற்சியளிப்பதாகும்'' என்றதற்கமைய சிந்தனைச் சிதறல்களை விதைத்திருக்கின்றனர். வசதிகள் வாய்ப்புக்களுடன் வழிகாட்டலும் ஒருங்கிணையும்போது சாதனைகளைப் படைக்கும் திறன்மிக்கவர் எம்மாணவர்கள். அவர்களது முயற்சி ஹாட்லி தாயின் வழியாக "வழி சஞ்சிகையாக" தன்னகத்தே கொண்டு மிளிர்கின்றது.

எமது மன்றம் சஞ்சிகை வெளியீடு மட்டுமன்றி குறு வினாவிடைப் போட்டியை நடாத்தி பரிசு வழங்கி கௌரவிப்பதுடன் 2008 ஆகஸ்டில் எடுக்கும் மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கை நடாத்தவும் திட்டமிட்டுள்ளது. அத்துடன் வணிகமன்றத்தின் நிதியை சமூக விஞ்ஞான மன்றத்திற்கு மாற்றி நிதிக்கு வளமூட்டியது என்பதையும் மனமகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இச்சஞ்சிகை அழகுடனும் பொலிவுடனும் வெளிவருவதற்கு ஆக்கமும் ஊக்கமும் தந்த அதிபர், பிரதிஅதிபர், உதவிப் பொறுப்பாசிரியர் அவர்களுக்கும் பயன்தரு ஆலோசனைகளை வழங்கியவர்களுக்கும் ஆக்கங்களைத் தந்துதவிய ஆய்வாளர்களுக்கும் பக்கபலமாக நின்றுதவிய ஏனைய வர்த்தக, கலை ஆசிரியர்களுக்கும் முன் அட்டைப் படத்திற்கு உதவிசெய்த திரு. பொ. அரவிந்தன், திரு. தி. ஜெயதீபன் ஆகிய ஆசிரியர்களுக்கும், சஞ்சிகை சிறப்புற அமைய அச்சுப்பதிவு செய்த தமிழ்ப்பூங்கா அச்சகத்தினரும் பாராட்டப்பட வேண்டியவர்களாவர்.

இந்தவகையில் வழி சஞ்சிகை சிறப்புற அமைய ஒத்துழைப்பு நல்கிய அனைவரையும் வாழ்த்தி தொடர்ந்தும் இவ்வெளியீடு வளம்பெற்று பேருற்றாக தொடர்ந்து புதியபுதிய வழியாக உருவாகி மலர இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

இ. நித்தியகுமார்
பொறுப்பாசிரியர்

# தலைவரின் வாழ்த்துச்செய்தி

யா/ ஹாட்லிக் கல்லூரியின் சமூக விஞ்ஞான மன்றம் வெளியிடும் "வழி" சஞ்சிகையின் (2008) தலைவர் என்றரீதியில் இவ் வாழ்த்துச் செய்தியை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

கணனி மயப்பட்ட தொழில்நுட்ப யுகத்திலே வாசிப்புப் பழக்கம் அருகிக்கொண்டே போகின்றது. ஆனால் அது ஏற்படுத்தும் பாதிப்பு சொல்லில் அடங்காது. ஏனெனில் வாசிப்பு மனிதனைப் பூரணமாக்குகிறது. வாசிப்புப் பழக்கம் கிரகித்தல் பயிற்சிக்கு வழிவகுக்கிறது. இந்நிலையை உணர்ந்த கல்வியுலகம் வாசிப்பை ஊக்குவிக்கப் பல உத்திகளைக் கையாளுகின்றது. நூலகங்களால் "வாசிப்பு வாரம்" அனுஷ்டிக்கப்படுகிறது. இந்தவகையில் எமது பாடசாலைச் சமூக விஞ்ஞான மன்றம் "வழி" சஞ்சிகையை வெளியிடுகிறது. இதில் புனைகதைகள், கவிதைகள், கட்டுரைகள் எனப் பல்வேறு மாணவர்களின் ஆக்கங்கள் வெளிவருவது கண்டு மகிழ்ச்சியடைகிறேன். மாணவர்களதும், ஆசிரியர்களினதும் ஒத்துழைப்பாலும், வழிகாட்டலாலும் நூலுருப்பெற்று "வழி" சஞ்சிகை மலர்வது கண்டு அகமும் முகமும் மலர்ந்து வாழ்த்துகிறேன்.

**ந. ரட்ணவேணு**
தலைவர்



# இதழாசிரியர் எண்ணத்திலிருந்து

மனித வளத்தின் பிரதான கட்டம் கல்லூரிகளின் கைகளில்தான் இருக்கின்றது. கல்வியின் அனைத்து சிந்தனைகள்; தேவைசார் மன்றங்களிற்கூடாகவும், சங்கங்கள், இணைப்பாட விதானம் போன்றவற்றினூடாகத்தான் செயற்படுத்தமுடியும்.

எமது சமூக விஞ்ஞான மன்றத்தினால் வெளியிடப்படும் "வழி" சஞ்சிகையானது ஒருவன் நல்ல பாதையில் செல்வதற்கு ஆற்றுப்படுத்தும் என நம்புகின்றேன்.

நவீன கற்றல் முறைகளிலே எமது கல்விச் செயற்பாடு தொடர்கிறது. இவ் 'வழி' சஞ்சிகையானது மாணவர்களது அறிவுப்பசிக்கு உணவாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

"தொடர்ந்து முயற்சித்தால் நிலவையும் முத்தமிடலாம்" இதற்கு எமது "வழி" சஞ்சிகை ஏணிப்படியாக இருக்கும்.

எதிர்காலத்தில் வழி சஞ்சிகைக்கு மாணவர்கள் அனைவரும் தமது ஆக்கங்களை நல்கி சகலவிதத்திலும் ஒத்துழைக்க வேண்டுகிறேன்.

இவ் "வழி"யின் வாய்ப்பைச் சரியாக பயன்படுத்தினால் எல்லோரும் சூரியனைப் போல் பிரகாசிக்கமுடியும்.

**ஜெயசிங்கம் வசந்தன்**
**இதழாசிரியர்**



# சமூக விஞ்ஞான மன்ற அதிபர், ஆசிரியர் குழாம்



முதலாவது வரிசையில் : செல்வி. N. கல்யாணி (உதவிப்பொறுப்பாசிரியர்), திரு. V. கருணாமூர்த்தி (பகுதித்தலைவர்), திரு. T. கலைச்செல்வன் (பகுதித்தலைவர்), திரு. M. இராஜஸ்காந்தன் (உப அதிபர்), திரு. N. தெய்வேந்திரராஜா (அதிபர்), திரு. K.. அருளானந்தம் (பகுதித்தலைவர்), திரு. R. நித்தியகுமார் (மன்றப்பொறுப்பாசிரியர்)

இரண்டாவது வரிசையில் :— திரு. T. மகிந்தன், திரு. K. கிருஸ்ணகுமார், திரு. K. கிருஸ்ணஜோதி, திரு. N. சுந்தரமூர்த்தி, திரு. B. இரகுவரன்



சமூக விஞ்ஞான மன்ற நிர்வாகக் குழு

# சமூக விஞ்ஞான மன்ற நிர்வாகக்குழு

| | |
|---|---|
| காப்பாளர் : | திரு. நடராசா தெய்வேந்திரராஜா (அதிபர்) |
| துணைக் காப்பாளர் : | திரு. மாசிலாமணி இராஜஸ்காந்தன் (உபஅதிபர்) |
| | திரு. K. அருளானந்தம் (பகுதித்தலைவர்) |
| | திரு. T. கலைச்செல்வன் (பகுதித்தலைவர்) |
| | திரு. N. சர்வானந்தா (பகுதித்தலைவர்) |
| | திரு. R. பாலேந்திரன் (பகுதித்தலைவர்) |
| மன்றப் பொறுப்பாசிரியர் : | திரு. R. நித்தியகுமார் |
| உதவிப் பொறுப்பாசிரியர் : | செல்வி N. கல்யாணி |
| மன்ற இணையாசிரியர்கள் : | திரு. B. இரகுவரன் |
| | திரு. T. சோமாஸ்கந்தராஜாக்குருக்கள் |
| | திரு. V. கருணாமூர்த்தி |
| | திரு. K. கிருஸ்ணகுமார் |
| | திரு. K. கிருஸ்ணஜோதி |
| | திரு. N. சுந்தரமூர்த்தி |
| | திரு. T. மகிந்தன் |
| தலைவர் : | செல்வன் ந. ரட்ணவேணு |
| செயலாளர் : | செல்வன் சா. அ. ரதீஸ்கரன் |
| பொருளாளர் : | செல்வன் தி. சுபராம் |
| உபதலைவர் : | செல்வன் யோ. துஷ்யந்தன் |
| உபசெயலாளர் : | செல்வன் அ. ஜோன்சன் |
| இதழாசிரியர்கள் : | செல்வன் ஜெ. துசந்தன் |
| | செல்வன் ம. மணிமாறன் |
| மன்ற நிர்வாக உறுப்பினர்கள் : | செல்வன் யோ. சத்தியசீலன் |
| | செல்வன் யோ. வசீகரன் |
| | செல்வன் ச. கபில்குமார் |
| | செல்வன் எஸ். சுதர்ஸ்மன் |
| | செல்வன் கு. ஜனார்த்தனன் |

# ஹாட்லி புகழ் பாடுவோம்

வங்கக்கடல் இதன்
வாசலில் மோதும்
வாடைக்காற்று வகுப்பறையில்
பாடம் கேட்கும்
கட்டிடச் சுவர்கள் எல்லாம்
கணிதம் செய்யும்
வளர்ந்து நிற்கும் வாகை மரங்களெல்லாம்
விஞ்ஞானம் போதிக்கும்
துரும்புகள் கூட துடுப்படிக்கும்
புல்லுகள் கூட புட்போல் அடிக்கும்
சித்திரம் என்ன சிறுகதை என்ன
பாட்டென்ன பல்லவியென்ன
அத்தனையும் இங்கு அத்துப்படி
ஹாட்லியே உன் புகழை
வானமே அண்ணார்ந்து பார்க்கிறது...

படைப்பு
ஹாட்லி சமூக விஞ்ஞான மன்றம்
2008



# உலகியல் அன்பும் தெய்வீக அன்பும்

மனிதனாக இருப்பதுவும் மற்றவர்களோடு இசைவுடன் வாழ்வதுவும் உலகியல் அன்பு எனலாம். தனிமனிதனுக்கும் தெய்வத்துக்கும் இடையிலான இணைப்புப் பாலமாக அமைவது தெய்வீக அன்பு எனலாம். மற்றவர்களுக்கு சேவை செய்தல், மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளல், மற்றவர்களில் அக்கறைகொள்ளல், மனிதர்களில் உன்னத மேன்மையான பரவசமான நிலையை ஏற்படுத்துவதன் மூலம் எல்லோரும் ஒன்றே என்ற தத்துவத்தை வெளிப்படுத்துகின்றது. இத்தகைய உலகியல் அன்பினால் இருதய விரிவாக்கம் நிகழ்கின்றது. அது நான், எனது என்ற உணர்வை நிர்மூலமாக்குகிறது. ஆணவத்தை முற்றாக அழித்து சரணாகதி நிலையை ஏற்படுத்துகிறது. இந்த சரணாகதி நிலையில் தெய்வீக அன்பு உருவாகிறது.

விபுலானந்த அடிகள் அன்பு பற்றிக் கூறிய மணிமொழி ஒன்று வருமாறு. "தன்னிடத்திலுஞ் சரி, ஆசிரியரிடத்திலுஞ் சரி, தமையனிடத்திலுஞ் சரி, எந்த உயிரிடத்திலாயினும் சரி நீதியோடு நிகழ்கின்ற இரக்கமே உண்மை அன்பு. காரணந் தெரியாமலே பனையிலும், பற்றையிலும், ஏழை நாயிலும், சாரைப் பாம்பிலும், வழிப்போக்கனிடத்திலும் உள்ளம் ஓடித்தழுவி இரக்கத்தையோ இன்பத்தையோ அடையக் கூடுமானால் அதுதான் அன்பு வாழ்வு" என்றார்.

அன்பின் வழி தெய்வீகமாகுதல். அன்பே தெய்வம். இறைவன் அன்பே வடிவானவர். இதனை உணர்த்தும் பாடல் ஒன்று உள.

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"

இன்றைய உலகில் மனிதன் தன் உடல் மூலமாகவும், இவ்வுலகின் மூலமாகவும் உயர்நிலையை அடையவேண்டும் என்று முயற்சி செய்கிறான். அவனது முயற்சி கைகூடுவதற்கு பேச்சில் தூய்மை இருக்கவேண்டும். ஒவ்வொரு மனிதனும் அவன் கூறும் சொற்களைப் பொறுத்தே பெறுபேறுகளை அடைகிறான். ஒவ்வொருவருடைய வாக்கும் உண்மையாகவும், பிரியமுள்ளதாகவும், ஆறுதல் உள்ளதாகவும் இருக்கவேண்டும் என்பதை கிருஷ்ண பகவான் கீதையில் கூறியுள்ளார். ஆதலால் அன்போடும் இனிமையோடும் நாம் பேசக் கற்றுக்கொள்ளவேண்டும்.

மனிதனின் சுதந்திரம் இன்று எல்லை மீறிவிட்டது. அதனால் மனிதத்தன்மை கீழே சரிந்து கொண்டிருக்கிறது. இன்று அறியாமையிலேயே மனிதன் உழல்கிறான். நல்ல நூல்களை மனிதன் படிக்கவேண்டும். படித்ததன் பொருளை உணர்ந்து அவற்றை இதயத்திலே இருத்திக்கொள்ள வேண்டும். இதயத்தில் இருத்தி

வாழ்க்கையில் கடைப்பிடிக்கவும் வேண்டும். அதனால் மனிதன் தானும் உயர்ந்து சுற்றம், சூழல்களையும் உயர்த்துகிறான். சுக, துக்கங்களை சமமாக ஏற்றுக்கொள்ள மனிதன் பழகிக்கொண்டு தோல்வியை வெறுப்பது உண்மையான சுதந்திரமல்ல. "வெற்றியும் தோல்வியும் வீரனுக்கழகு" என்பது முதுமொழி. ஆதலால் மனிதன் கீர்த்தி, அபகீர்த்தி இரண்டையுமே ஏற்றுக்கொள்ளப் பழகுதல் வேண்டும். இறைவன் திருவுளத்தால் கிடைப்பது அனைத்தையுமே நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஒருவனுக்கு வெற்றி கிடைக்கும் போது மனம் துள்ளுகிறது. தோல்வியடையும்போது மனம் துவள்கிறது. மனிதத்தன்மை என்பது ஒருமைத் தன்மையே தவிர பல்வகைத் தன்மையல்ல. மனிதனின் மனம் சந்திரன் எனவும், கண் சூரியன் எனவும் அனைத்துப் புலன்களும் இந்திரன் எனவும் கூறப்படுகின்றது. இந்திரியங்களை வெல்பவனே இந்திரன் ஆவான். மனதினாலேயே இந்திரியங்களை கட்டுப்படுத்த இயலும். மனம், புலன்கள் என்பவற்றை கடந்தவனே "ருத்திரன்" எனக் கூறப்படுகிறது. ஐந்து கர்மேந்திரியங்கள், ஐந்து ஞானேந்திரியங்கள் என்பவற்றை கொண்டது எதுவோ, அதுவே "ருத்திரன்" என அழைக்கப்படுகிறது. இவற்றுடன் மனிதனின் உடல் முழுவதும் வியாபித்துள்ள அந்த ஜோதியையும் இணைத்தால் அவன் பரஞ்சோதியைக் காணலாம். மனிதன் இன்று பரஞ்சோதியைக் காணமுடியாது தவிக்கிறான். அதற்குக் காரணம் முக்குணங்களான ராஜோ குணம், தமோ குணம், சத்வ குணம் என்பனவாகும். அதாவது மனிதனுள் இக்குணங்கள் இருக்கும்வரை அவனால் தன்னைத்தானே பார்த்துக்கொள்ள முடியாது. இம்மூன்று குணங்களையும் உடைத்தெறிய வேண்டும். அவனுள் இருக்கும் மமகாரமும் அகங்காரமும் அழிந்தொழிய வேண்டும். அப்பொழுதே அவன் ஆத்ம விசாரணையில் ஈடுபடுவான்.

மனிதன் தன்னிடமுள்ள மாயையை விலக்குவதற்கு இறைவனின் மலர்ப் பாதங்களைப் பற்றிக்கொள்ள வேண்டும். உலகியலில் பற்று வைக்கக்கூடாது. இன்று மனிதனின் பற்று முழுவதும் எங்கே இருக்கிறது? பொன், பொருள், பூமி, மனைவி, மக்கள், சுற்றம் இவைகள் மீதுதான் இருக்கிறது. உலக சுகங்கள் யாவும் அநித்தியம் என்பதை மனிதன் உணர்ந்திலன். தன் மகிமை அறிந்திலன். ஊனக் கண்களால் மனிதன் உலக சுகங்களையே பார்க்கிறான். ஞானக்கண்களை திறக்க முடியாது குழம்புகிறான். ஆதலால் மனிதன் என்ன செய்யவேண்டும் என்பதை சிறிது நோக்குவோம்.

உலகியல் அன்பு குறுகிய அன்பு; தெய்வீக அன்பு விரிந்த அன்பு. மனிதன் அன்பை விரிவாக்கி பரந்த மனப்பாங்குடன் சமூகத்திற்கு சேவை செய்ய முன்வரவேண்டும். எப்பொழுதும் மற்றவர்களுக்கு உதவியாயிருத்தல் வேண்டும். ஒருவருக்கும் துன்பம் செய்யாதிருத்தல் வேண்டும். [Help ever,

Heart never]. பிறரைத் துன்புறுத்தினால் அவர்கள் உன்னைத் துன்புறுத்து வார்கள். நீ உதவி செய் உலகமே உனக்கு உதவிசெய்யும். மனதை தெய்வீகத் தன்மைக்கு இட்டுச்செல்; அப்பொழுது எல்லோரிடமும் உறைபவன் ஒரே ஆத்மன் என்பதை உணர்வாய். சுயநலம், சுயலாபத்தை அழித்துவிடு. பிரேம தத்துவத்தின் மூலம் விசாலமான இதயத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். நீயும் நானும் ஒன்றே என்னும் ஒருமைத் தத்துவத்தை காண்பாய். மனிதத் தன்மை உன்னிடம் தானாகவே வந்து சேர்ந்துவிடும். மனம் நினைப்பதை வாக்கால் கூறி அதை செயற்படுத்தினால் மனிதன் உயர்ந்தவனாகிறான்.

இன்று மனிதன் பற்பல சாதனைகளைச் செய்யலாம். அநேக போதனைகளை அவன் கேட்கலாம். ஆயின் பிரேமையை (அன்பை) வளர்க்காவிட்டால் எதுவும் பயன்படாது போய்விடும். இதற்கு பொய்யாமொழிப் புலவர், தெய்வப் பெருந்தகையின் குறள் ஒன்றை எடுத்து நோக்கலாம்.

"அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை [வன்பாற் கண்
வற்றல் மரம்தளிர்த் தற்று"

அன்பு நிறைந்தால் வெறுப்புக்கு இடமில்லை. அனைவரும் நண்பர்களாகிறார்கள். இதற்கும் குறள் ஒன்றை எடுத்துநோக்கலாம்.

"அன்பீனும் ஆர்வ முடைமை அதுஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு"

இறையன்பே எல்லாவற்றிலும் மேலானது. அதுவே தெய்வ தத்துவம். அதுவே பக்தி. ஆனால் அன்பே கடவுள். அன்பினால் இவ்வுலகை கட்டியாள்வோம். அன்பினால் சாந்தி, சமாதானம் என்பவற்றை நிலைநிறுத்துவோம். அன்புடனே வாழ்வோம். தெய்வீகத்தை அடைவோம்.

"உலகியல் அன்பு வரையறைக்கு உட்பட்டது. தெய்வீக அன்பு வரையறையற்றது. மனித மேம்பாடுகள் பிரபஞ்ச இயக்கநிலை அனைத்துக்கும் அடிப்படை தெய்வீக அன்பே.

S. நிரோசன்

## கல்வியின் தூண்கள் நான்கு

| | | |
|---|---|---|
| 1. | அறிவதற்காகக் கற்றல் | Learning to know |
| 2. | ஆற்றுவதற்காகக் கற்றல் | Learning to do |
| 3. | வாழ்வதற்காகக் கற்றல் | Learning to be |
| 4. | சேர்ந்து வாழ்வதற்காகக் கற்றல் | Learning to live together |

# எதிர் யதார்த்தவாத அரங்கு [Anti Realistic Theatre]

19ம் நூற்றாண்டு வரை உலகில் நிலை கொண்டிருந்தது மோடிப்படுத்தப் பட்ட நாடக முறையே ஆகும். இவ்வேளை கைத்தொழில் புரட்சி நெப்போலியன் வீழ்ச்சி, டார்வின் கூர்ப்புக் கொள்கை, அகஸ்றி கெம்றி என்பவரின் உலகம் பற்றிய கருத்து போன்றவை உலகில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தி மனிதனை தம் வாழ்வு பற்றி உண்மையாக சிந்திக்க வைத்தது. இதனால் 19ம் நூற்றாண்டின் நடுக்கூறான 1850களில் இயற்பண்பு வாதம் தோன்றியது. இயற்பண்பு வாதத்தின் முக்கிய சிந்தனையாளராகவும் பேச்சாளராகவும் எமிலிசோலா விளங்கினாலும் ஸ்ரெனிஸ் லெவஸ்கி என்பவரினாலே இயற்பண்புவாத மரபை அதன் உச்சத்துக்கு வளர்த்து செல்லமுடியாது. இதன்படி இயற்பண்பு வாதமானது உள்ளதை உள்ளபடி வெளிப்படுத்தும்போது வாழ்விற்கும் அரங்கிற்கும் இடையிலான வேறுபாட்டை கவனிக்கத் தவறிவிட்டார்கள். இத்தகைய காரணத்தினால் 1850களில் தோற்றம்பெற்ற இயற்பண்பு வாதம் 1925 - 1930 காலப்பகுதிகளில் வீழ்ச்சி கண்டது.

இயற்பண்பு வாதத்தின் போதாமையினால் யதார்த்தவாதம் தோன்றியது. இது இயற்பண்பு வாதம் போல் வாழ்வின் ஒரு துண்டை அரங்கிற்கு கொண்டுவராமல் வாழ்க்கையின் நிகழ்வுகளை தெரிதல், தொகுத்தல், வியாக்கியானம் செய்தல் போன்றவற்றினூடாக நாடகத்தை வெளிப்படுத்தினர். மார்க்சிம் கார்க்கி, அன்ரன் செக்கோ, பேனாட்ஷ, கென்றிக் இப்சன் போன்றோர்கள் யதார்த்தவாத நாடக ஆசிரியராக இருந்தாலும் கூட நேர்வே நாட்டவரான கென்றிக் இப்சனாலேயே யதார்த்தவாதம் சிறப்புப் பெற்றது.

யதார்த்த வாதம் புதிய சமூகத்தின் பிரச்சனைகளை வெளிப்படுத்த போதுமானதாக இருக்கவில்லை. இதனால் எதிர்பார்த்ததை இதனுடன் சேர்த்துக்கெண்டது. இயற்பண்பு வாதம் யதார்த்தவாதம் என்பவற்றுக்கு எதிராகத் தோன்றியதாக எதிர் யதார்த்தவாதம் காணப்படுகின்றது. இதனை யதார்த்த விரோத அரங்கு எனவும் அழைப்பர்.

## பிறெச் - காவிய அரங்கு

1950 களில் செல்வாக்கு பெற்ற அரங்க முறைகளில் எதிர் யதார்த்தவாத அரங்கும் ஒன்றாகும். இயற்பண்பு, யதார்த்த வாதத்திற்கு எதிராக தோன்றிய எதிர் பதார்த்த மரபுகளில் காவிய அரங்கும் ஒன்றாகும். இவ் அரங்கு பேட்டோல் பிரக்ட்டினால் பிரபல்யமானது. இது பிரக்டின் அரங்காயினும் இதன் மூலகர்த்தா விஸ்காட்டர் மாா்ட்டின் என்பவராவாா். இவா் ஒருவகையில் பிரக்டின் குரு. தற்செயலாக பிஸ்காட்டாா் காவிய அரங்கை கண்டு பிடித்தாா் என்பா். பணமுடை காரணமாக அவரால் பழைய முறையிலமைந்த நாடகங்களை

மேடையிட முடியவில்லை. கட்டாயம் காரணமாக அவர் விளக்கல், செய்து காட்டல் முறைகளை நாடகத்தில் மேடையிற் கண்டார். பின்னாளில் இவை பிரக்டினால் நாடகப் பிரதிகள் என்று அழைக்கப்பட்டன.

பிரக்ட் பிஸ்காட்டரிலிருந்து தனது சொந்தக் காவிய அரங்கை கட்டியெழுப்பினார். காவிய அரங்கு என்ற கருத்துருவை உருவாக்குவதற்கு அவருக்கு கீழைத்தேய அரங்கு உதவியாக இருந்தது. பிரக்ட் சிறந்த கவிஞன், நாடக ஆசிரியர், நாடக நெறியாளர் போன்ற பல பணிகளை புரிந்தார். இவர் கிட்லரின் ஆட்சிக் காலத்தில் ஜேர்மனியை விட்டு வெளியேறி அவருடைய ஆட்சி முடிவடைந்ததும் மீண்டும் தாயகம் திரும்பி "பேர்லினன் ஒன் சாம்பிள்" என்பதை நிறுவினார். பிரக்ட் அரிஸ்ரோட்டிலின் கோட்பாட்டை எதிர்த்தார். அரிஸ்ரோட்டிலின் நாடகங்கள் பார்வையாளரிடத்து அச்சத்தையும் இரக்கத்தையும் தோற்றுவித்து அவனுடைய உணர்வுகளை தூய்மைப்படுத்தி அவனைப் புத்துணர்வு ஊட்ட மட்டும் உதவியது எனக் கருதினார்.

பிரக்ட் இத்தன்மையில் இருந்து பார்வையாளர்களை விடுவிக்கவேண்டும் எனக் கருதினார். இதனை தொலைப் படுத்தல் அல்லது தூரப்படுத்தல் அல்லது அன்னியப்படுத்தல், பராதீனப்படுத்தல் என்று அழைத்தார். இதன் ஜேர்மனிச் சொல் வேபிறங்டங். இவர் நடிப்பு என்பது உள்ளத்தை தூண்ட பயன்படவேண்டுமே அன்றி உணர்ச்சியை தூண்ட பயன்படக்கூடாது என்று கூறினார். பார்வையாளன் நாடக அரங்கில் இருந்தே நாடகத்தை மதிப்பீடு செய்யும் ஆற்றலைப் பெறவேண்டும் எனக் கூறினார். பிரக்டின் நாடகங்களுள் மிகவும் புகழ்பெற்றது வெண்கட்டி வட்டம். இதைவிட தாயின் தைரியம், திரிபென்னி ஒபேரா போன்றன குறிப்பிடலாம்.

## மேஜர் கோல்ட்

இவர் ரஷ்ய நாட்டைச் சேர்ந்தவர். ஸ்ரெனிஸ் லெவிஸ்கியுடன் பொஸ்கோ கலை அரங்கில் ஒன்றாகவே பணிபுரிந்த சிறந்த நடிகன். ஸ்ரெனிஸ்சின் கட்டுப்பாடுகள், பயிற்சிகள் போன்றன இவருக்கு விரக்தியை ஏற்படுத்தியது. இதனால் ஸ்ரெனிஸ்சினுடைய கோட்பாட்டை இவர் எதிர்த்தார். இதன்பின்பு உடல் பொறிமுறை என்கின்ற நடிப்பு முறையை அறிமுகம் செய்தார்.

ஸ்ரெனிஸ் குறிப்பிட்ட உணர்வை நடிகன் வெளிப்படுத்துகின்றபோது அவனுடைய ஆழ்மனதிலிருந்து உடலுக்குள்ளாக உணர்வை வெளிப்படுத்தவேண்டும். அதாவது உள்ளம் உள்ளத்தில் இருந்து புறத்தே எனக் கூறினார். ஆனால் மேயர்கோல்ட் உடலில் இருந்து உள்ளத்திற்கு உணர்வைச் செலுத்துகின்றார். இத்தகைய கோட்பாட்டை மேயர்கோல்ட் உருவாக்குவதற்கு பௌலோ என்கின்ற விஞ்ஞானியினுடைய கருத்து உதவிபுரிந்தது.

மேயர்கோல்ட் நடிகனுடைய உடலான சாதனத்திலே அதிக கவனம் செலுத்தினார். அதாவது ஒரு

மெசினுடைய முழுநோக்கம் இயற்கையை உள்வாங்குவது என்பதே. இதனை நடிகர் மனதில் கொள்ளவேண்டும் என்றார். நடிகனுடைய உடலானது இயந்திரம்போல் இயங்கவேண்டுமென எதிர்பார்த்தார். இந்நடிப்பு முறையினாற் கவரப்பட்டு அதனைத் தமது நாடகங்களிற் பாவித்தவர்களாக ஆர்டாவுட், குறட்டாவஸ்கி, பீட்டர்புறூக் ஆகியோர் காணப்படுகின்றனர்.

## குறட்டோ வஸ்கி

இவர் போலந்து நாட்டில் தனது நாடகச் செயற்பாட்டை மேற்கொண்டார். ஸ்ரெனிஸ் லெவிஸ்கி அரங்கில் உண்மையைத் தேடினார். ஆனால் குறட்டோ வஸ்கி அரங்கின் உண்மையைத் தேடினார் எனலாம். இவர் குரல் வழியும் அசைவுகளின் வழியும் நடிகன் அர்த்தங்களை புலப்படுத்தவேண்டும் எனக் கூறுனார். இவர் தனது நடிப்பை உள உடலியல் அம்சங்களுடன் அணுகினார். இவர் தற்கால வளம்மிக்க அரங்கை நிராகரித்தார். இவர் தனது அரங்கை எளிமை அரங்கு என அழைத்தார். மூல வளத்தில் தான் இது எளிமையானது. ஆனால் அரங்கத் தன்மையில் செல்வம் மிக்கது இது. நாடகத்தில் நடிகனும் பார்வையாளனுமே மிகப் பிரதான அம்சம் என்பது இவர் கொள்கை. இவருடைய நடிகர் தூய்மையான தெய்வாம்சம் பொருந்திய நடிகர். அவர் தமது மனம், உடல், குரல் மூன்றையும் மட்டும் உபயோகித்தார்.

குறட்டோவஸ்கி மேற்கொண்ட செயற்பாடுகளில் இரண்டு மிகவும் முக்கியமானவை,

1. புனித நடிகனை உருவாக்கினார்.

இவர் முற்பட்ட காலத்தில் இருந்த நடிகர்களை பரத்தை நடிகர் என அழைத்தார். இவர்கள் கைதட்டலுக்கும், பாராட்டுக்கும், பணத்துக்கும் தங்களை விலைபேசுவதாக இருந்தார் எனக் கருதினார். இவ்வாறு இருக்காது நடிகனானவன் மதகுருவைப்போல பார்வையாளருக்காக அற்பணிப்பவனாகவும், தியாகம் செய்பவனாகவும் இருக்கவேண்டும் என எதிர்பார்த்தார். நடிகன் புனிதமானவனாக இருந்தாலே பார்வையாளர் அவருடைய நடிப்பை நம்பி தங்களிடத்து மாற்றத்தை ஏற்படுத்துவர்.

2. புனித அரங்கின் தோற்றம்

இவர் உருவாக்கிய புனித அரங்கு வறிய அரங்கு எனப்படும். இவர் அரங்க மூலகம் தொடக்கம் பார்வையாளர்கள் வரை அனைத்தையும் எளிமையாக்கினார். இவர் அரங்கை சடங்காக கருதியமையால் அதிகளவான பார்வையாளரை எதிர்பார்க்கவில்லை.

## அடோல் அப்பியா

இவர் ஒளியூட்டல் மூலம் அரங்கில் குறியீட்டு அம்சங்களைப் பயன்படுத்தினார். இவர் நாடகத்தினுடைய வன்மையை அதனுடைய சூழல் தீர்மானிக்கின்றது. நாடகத்தினுடைய உணர்வுகளை நாம் கண்ணால் பார்க்கத்தக்கதாக இருக்கவேண்டும் எனக்கூறினார். இவர் ஒளியின் வளங்கள் அனைத்தையும் பயன்படுத்தி ஒளி அமைப்பில் பல மாற்றங்களை ஏற்படுத்தினார். அடோல் அப்பியா அரங்கில் பொருட்களின் பயன்பாட்டைக் குறைத்து நடிகர்களுடைய

செயற்பாட்டை ஒளி அமைப்பின்மூலம் அழுத்திக் காட்டினார். மேடைக்காட்சி அமைப்பிலும் பல மாற்றங்களுக்கு வித்திட்டார். வேடமுகங்களையும் பயன்படுத்தினார். ஒளியும் நிழலும் தனது குறியீட்டு ஒளி அமைப்புக்கு பயன்படுத்தினார்.

## கோல்டன் கிறேய்க்

கோல்டன் கிறேய்க் மேடைக் காட்சி அமைப்பில் குறியீடுகளை கொண்டுவந்தார். கிறேய்க் அரங்கு அதிக சொற்களைக் கொண்ட ஒரு சாதனமாக இருக்கக்கூடாது எனவும் இத்தகைய அரங்கில் மனித உணர்வுகள் எல்லாவற்றையும் வெளிக்கொணரமுடியாது எனவும் இதிலிருந்து விடுபட்ட ஒரு முறைமைமூலம் அரங்கின் வலிமை கொண்டுவரப்பட வேண்டும் எனவும் கூறினார். கோல்டன் கிறேய்க் அசைகின்ற காட்சி அமைப்பு, அசையாத காட்சி அமைப்பு போன்றவற்றை அரங்கில் பயன்படுத்தினார்.

## குரூர அரங்கு

1950 ற்கு பின்னர் செல்வாக்குப் பெற்ற அரங்க வடிவமாக இவ் அரங்கு காணப்படுகிறது. இதனை பிரான்ஸ் நாட்டைச் சார்ந்த ஆட்வாட் என்பவரால் முன்மொழியப்பட்ட அரங்க மரபு ஆகும். இவர் பாரிஸ்சில் ஆடிய சடங்கு நடனங்களில் இருந்தே குரூர அரங்கை தோற்றுவித்தார்.

உடல்மொழி பார்வையாளர்களை திடுக்கிட வைத்தல், உளவியல் ரீதியான தாக்கத்தை ஏற்படுத்தல், சடங்குத் தன்மை போன்றன குரூர அரங்கின் முக்கியமான தன்மைகளாகக் காணப்பட்டன. ஆட்வாட் உணர்வுகளைப் புலப்படுத்த சொற்களை விட அபிநயங்களையும் குறியீடுகளையும் பயன்படுத்தினார். அத்துடன் நடிகர்களை அரங்கில் கத்தவேண்டும் எனவும் சத்தம் போடவேண்டும் எனவும் எதிர்பார்த்தார். இவர் உளவியலில் அதிக கவனம் செலுத்தியமையால் இவருடைய அரங்கே பின்னாளில் சிகிச்சைக்கான அரங்கு தோன்றுவதற்கு வழிவகுத்தது.

## பீற்றர் புறூக்

இவரை ஆரம்பத்தில் ஒருமைப்பாட்டு அரங்கக்காரராகக் காண்கின்றோம். அதாவது உலகம் முழுவதற்கும் ஏற்ற பொதுவான அழிக்கை முறையை இவர் தேடினார். உலகின் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள பாரம்பரிய நாடகமுறைகளை உள்வாங்கி தனது இலக்கை அடைந்தார். பல்வேறு உலக நாடகங்களின் கூறுகளை பயன் படுத்தினார். இவர் மகாபாரதத்தினை தொலைக்காட்சி நாடகமாகத் தயாரித்தபோது உலகப் புகழ் பெற்றார். இந்த நாடகமே இவரது நாடகக் கொள்கையை வெளிப்படுத்தும் அனைத்துப் பண்புகளையும் கொண்டுள்ளது. பீற்றர் புறூக் மொழியை நம்பி இருக்காமல் மொழிக்கு அப்பால் போகக்கூடியதாக இருக்கவேண்டும் எனக்கூறி ஓசைகளில் அதிகம் நம்பிக்கை வைத்து செயற்பட்டார்.

## ஒகஸ்ரா போவல்

இவர் பிறேசில் நாட்டைச் சேர்ந்தவர். இவர் தனது அரங்கினை ஒடுக்கப்பட்டோருக்கான அரங்கு என அழைத்தார். அதாவது இவ்வளவு காலமும் வாழ்ந்த நாடகக்காரர்கள் அனைவரும் பார்வையாளர்கள்மீது தங்களுடைய கருத்துக்களைத் திணித்தார்கள். இம்முறையை மாற்றப்படும் விதமாக உருவாக்கப் பட்டதே ஒடுக்கப்பட்டோருக்கான அரங்கு ஆகும். இவர் தனது நாடகத்தின் முடிவைக் கூறுவதில்லை எனத் தீர்மானித்தார். இதனால் இவருடைய நாடகத்தின் முடிவானது பார்வையாளர்களின் சிந்தனைக்கு ஏற்ப அவர்களால் உணர்ந்துகொள்ளப்படும்.

இவருடைய அரங்கினை 3 வகைப்படுத்துவர்.

1. படிம அரங்கு
2. விவாத அரங்கு or கலந்துரையாடல் அரங்கு
3. கட்புலனாகாத அரங்கு

## படிம அரங்கு

படிமம் என்பது பார்வையாளர்களது மனதில் தோன்றுகின்ற சிந்தனை ஆகும். அதாவது ஒன்றைப் பார்க்கின்றபோது பார்ப்பவரிடத்து இப்பொருளைப் பற்றி தோன்றுகின்ற மனப்பதிவே படிமமாகும். ஒகஸ்ரா போவலின் படிம அரங்கில் நடிகர்கள் தங்களுடைய உடல்மூலம் பல்வேறுபட்ட உருவங்களை உருவாக்குவார்கள். அவ் உருவங்களைப் பார்ப்பதன்மூலம் பார்வையாளரிடத்தே தோன்றுகின்ற எண்ணம் படிம அரங்கில் வெளிப்படுத்தப்படும். படிம அரங்கானது பார்வையாளர்களுடைய அக மனங்களை அறிந்துகொள்ளமுடியும். இவ் அரங்கில் உளவியல் சிகிச்சையாகவும் தொழிற்படலாம்.

## விவாத அரங்கு

இந்த அரங்கில் குறிப்பிட்ட பிரச்சினையை வைத்து நாடகக் காட்சிகள் நடந்துகொண்டிருக்கும். இந்த நாடகக் கதைக்கு முடிவு கிடையாது. ஒரு காட்சியை நடித்துக் காட்டுகின்றபோது அதை பார்த்துக் கொண்டிருப்பவர்கள் இந்தப் பாத்திரம் இப்படித்தான் இயங்கவேண்டும். நாடகம் இவ்வாறுதான் வளர்ந்து செல்லவேண்டும் என்பதை அந்தக் காட்சியில் வரும் ஒரு பாத்திரத்தை தான் ஏற்று நாடகத்தைக் கொண்டு செல்லவேண்டும். இங்கு நடிப்பு மூலமாக ஒரு குறிப்பிட்ட பிரச்சினை பற்றி பல்வேறு கருத்துக்களும் முன்வைக்கப்படும். இதனால் கலந்துரையாடல் அரங்கு எனப் பெயர் பெற்றது. இதனால் பார்த்துக் கொண்டிருப்பவர் ஒரு பிரச்சினை பற்றி பல்வேறு கருத்துக்களை அறிந்து பரந்த விளக்கம் பெறமுடிகின்றது.

## கட்புலனாகாத அரங்கு

குறிப்பிட்ட ஒரு விடயம் பற்றி மக்களுக்குத் தெரியாமல் திட்டமிட்டு உண்மையான விடயம் போல் செயற்படுதலே இவ் அரங்கின் பிரதான விடயமாய் உள்ளது. உதாரணமாக போலி மருந்துகளை விற்கும் வியாபார நிலையத்துக்குச் சென்று அது பற்றி சர்ச்சையைக் கிளப்பி பொது மக்களையும் உள்ளடக்கி அப்பிரச்சினை

பற்றிய விழிப்புணர்வை தீர்வைக் கூற இவ் அரங்கு முயற்சிக்கும். இது திட்டமிட்ட நாடகம் என்பதை அறியாமல் பலர் இதில் பங்குபற்றுவதால் கண்ணுக்குப் புலனாகாத அரங்கு எனப்படுகின்றது.

## றிச்சாட் ஷெக்னர்

இவர் குறட்டோ வங்கி, பீற்றர்புறூக் ஆகியோரைப் போல் நடிகர் பார்வையாளர் தொடர்பை வலுப்படுத்தச் செயற்பட்டார். நடிகர் பார்வையாளர் உறவு புரசீனிய அரங்கில் உருவாகும். 4வது சுவர் தடையாகவுள்ளது எனவும் இதைத்தகர்த்த படச்சட்ட மேடையையே நிராகரித்து திறந்தவெளியில் தமது நாடகச் செயற்பாடுகளை நிகழ்த்தினார். றிச்சாட் ஷெக்னரும் சிறு குழுவாகவே இயங்கினார். சுற்றுப்புறச் சூழலில் இயற்கையோடு ஒன்றியதாக இவரின் செயற்பாடுகள் அமைந்தது. மேலும் குறட்டோவஸ்கி, புறூக், றிச்சாட் போன்றோரின் அரங்குகள் சிறு குழுக்களாக இயங்கும்போது சில செயற்பாடுகளினால் பயனுண்டு என்ற நம்பிக்கை அனைவரிடமும் காணப்படும். இதனால் அவர்கள் குறித்த இலக்கை இலகுவாக அடையமுடிகிறது. இதனால் றிச்சாட் போன்ற அரங்கவியலாளர்கள் கீழைத்தேயத்தில் உள்ள சடங்கு நிகழ்வுகளை உள்வாங்கி தமது நாடகச் செயற்பாடுகளில் இணைத்துக் கொள்வர்.

## அபத்த அரங்கு/ அநர்த்த அரங்கு

அபத்த நாடகங்கள் 2ம் உலக மகாயுத்தத்தின் விளைவால் தோன்றின. இது 1950களில் மக்களிடையே பெரும் செல்வாக்குப் பெற்ற வடிவமாகும். யுத்தம் மனிதர்களின் கனவுகளை அழித்தது. கண்முன் காணப்பட்ட யதார்த்தங்கள் தவிடுபொடியாகின. இதனால் மக்கள் தங்களுடைய வாழ்க்கையில் நம்பிக்கை அற்றவர்களாகக் காணப்பட்டனர். அவர்களுடைய வாழ்க்கையின் மிஞ்சியதாக பயமும் விரக்தியும் காணப்பட்டது. இதுவே அபத்த நாடக தோற்றத்திற்கு காரணமாயிற்று.

அபத்த நாடகம் விளங்கிக் கொள்ள முடியாத நாடகம். ஆனால் விளங்கிக் கொண்டால் ஆழ்ந்த அர்த்தங்களை புலப்படுத்துவதாகக் காணப்படும். அபத்த நாடகத்தின் மொழியைக் கூட மிகவும் சிக்கனமாக குறைவாகப் பயன்படுத்தினார்கள். இதற்குரிய காரணம் யாதெனில் மனிதனிடம் வாழ்வதற்கு ஏதுவான அம்சங்கள் எதுவுமே இல்லை என்பதனை இது தெளிவுபடுத்தின. அபத்த நாடகங்களில் நாடகக் கட்டமைப்பினை காணமுடியாது. அதாவது ஆரம்பம், வளர்ச்சி முதலான அம்சங்களை பார்க்கமுடியாது. அபத்த நாடகத்தின் கதையிலோ அல்லது நடிப்பிலோ காரணகாரியத்தை கண்டுகொள்ள முடியாது. அபத்த நாடகத்தில் காட்சி அமைப்பும் வாழ்க்கை நிலையும் இல்லை என்பதனைத் தெளிவுபடுத்தின. அபத்த நாடகத்தில் நடிப்பது மிகவும் கடினமானது. இதனால் நடிகர்களுக்கு அதிகமான நடிப்புப் பயிற்சிகளை வழங்கினார்கள்.

**பா. லக்குமணன்**
**13E**

# மகாகவி பாரதியாரின் வாழ்க்கைக் குறிப்புக்கள்

நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த எட்டயபுரத்திலே 1882 டிசம்பர் 11ம் திகதி சின்னச்சாமிஐயர் இலக்குமி அம்மாள் தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார் பாரதி. இவருடைய இளமைப்பெயர் சுப்பிரமணியன்; செல்லப்பெயர் சுப்பையா என்பதாகும். 1887ம் ஆண்டு சுப்பிரமணியனுக்கு ஐந்து வயதில் தாயார் இலக்குமி அம்மாள் மரணம் அடைந்தார்.

1889ல் தந்தை சின்னச்சாமி ஐயர் மறுமணம் புரிந்துகொண்டார். அத்தோடு சுப்பிரமணியனுக்கு குல மரபுப்படி பூணூல் நிகழ்ச்சியும் இடம்பெற்றது. இளமையில் அருட்கவிகளைப் பொழிந்தார். சுமார் பதினொரு வயது இருக்கும் அச்சமயம் எட்டையபுர மன்னன் சமஸ்தானப் புலவர்கள் அவையில், பாலகனின் கவிதைத்திறனை வியந்து பாராட்டி 'பாரதி' என்ற பட்டத்தைச் சூட்டினார்.

1897ல் கல்வி கற்குங் காலத்திலேயே யூன் பதினைந்தாம் திகதி செல்லம்மாளைத் திருமணம் புரியும்போது பாரதிக்கு வயது பதினான்கரையும் சிறுமி செல்லம்மாவுக்கு ஏழு வயதும் இருந்தது. 1898ல் யூன் மாதம் தந்தை மரணமடைந்தார். இதனால் பெருந்துயர் சூழ்ந்தது. 1898 - 1902 வரையான காலப்பகுதிக்குள் பாரதி தம் அத்தையார் குப்பம்மாள் ஆதரவில் காசி வாசம்சென்று காசி இந்துக் கல்லூரியில் கல்வி பயின்று மெட்ரிகுலேஷன் தேர்வில் சித்திபெற்றார். இதன்பின் அலகாபாத் சர்வகலாசாலையில் புகுமுகத் தேர்வில் முதன்மையாகத் தேர்ச்சி அடைந்து வடமொழியோடு இந்தியும் பயின்றார்.

இவருடைய முதல் பாடலான 'தனிமை இரக்கம்' 1903ம் ஆண்டு மதுரையில் வெளிவந்த 'விவேகபாநு' என்ற ஏட்டில் அச்சேறியது. அரசியலில் தீவிர பிரவேசம் இருந்தது. தாதாபாய் நௌரோஜி தலைமையில் கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் மாகாசபைக் கூட்டத்தில் கலந்துகொண்டார். அச்சமயம் விவேகானந்தரின் சிஷ்யை நிவேதிகாதேவியைச் சந்தித்து அவரிடம் ஆசிபெற்று அவரையே ஞானகுருவாக ஏற்றுக்கொண்டார்.

தமிழகத்தின் தலைநகரான சென்னையில் 1907ல் ஏப்பிரல் மாதம் 'இந்தியா' என்ற வார ஏடு உதயமாகியது. இதன் ஆசிரியரானார் கவியரசர். 'பாலபாரதம்' என்ற ஆங்கில இதழையும் பொறுப்பேற்று நடத்தினார். 1908ல் தாம்பாடிய "சர்வதேச கீதங்கள்" என்ற பாடல் தொகுதியை வெளியிட்டார். அச்சு வடிவில் வெளிவந்த பாரதியின் முதல்நூல் இதுவேயாகும். நாட்டு விடுதலைக் கிளர்ச்சியில் ஊக்கமுடன் செயலாற்றுகிறார் கவிஞர். இவ்வேளை 'சுயராஜ்ய தினம்' நாடெங்கும் கொண்டாடத் திட்டம் வகுக்கப்பட்டது. சென்னையிலே கவிஞர் திலகமும், தூத்துக்குடியிலே வ.உ.சி, சுப்பிரமணியசிவா, சுதேசி பத்மநாப அய்யங்கார் ஆகியோராலும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மன்னவர் மூவர் அரசினால் கைது செய்யப்பட்டார்கள். சிவா, வ.உ.சி தண்டனை பெற்றுச் சிறைவாசம் சென்றார்கள். பாரதி கேலிச்சித்திரங்கள், வீரச்சுவை மிகுந்த பாடல்கள், கட்டுரைகள், தலையங்கங்கள் மூலமாக 'இந்தியா' பத்திரிகையில் அரசியல் பிரசாரத்தைத் தொடர்ந்து நடத்தினார். இதனால் 'இந்தியா' இதழின்மீது அரசின் பார்வை விழுந்தது.

அதன் சட்டபூர்வமான ஆசிரியர் கைதானார். பாரதி தப்பித்து புதுவைக்குச் சென்றுவிட்டார்.

'இந்தியா' பத்திரிகையை புதுச்சேரியில் இருந்தபடியே நடத்தினார். பிரெஞ்சு இந்திய எல்லையில் வாழ்ந்து கொண்டு பிரிட்டிஷ் அரசாங்கத்தின்மீது பாய்தல். பத்திரிகையின் செல்வாக்கு இதனால் அதிகரித்தது. கவிஞரின் போர் முரசுக்கு நாட்டில் ஆதரவு பெருகியது. இதனைக் கண்ட அரசு இதழை பிரிட்டிஷ் இந்தியாவில் படிக்கத் தடை செய்தனர். இதனால் பத்திரிகை வெளிவருவதும் நின்றது.

1909ல் கவிஞரின் கவிதைத் தொகுதி நூலாம் "ஜன்மபூமி" வெளியிடப்பட்டது. தினசரி ஏடான "விஜயா" வாரப் பதிப்பான "சூரியோதயம்" ஆங்கில வாரப் பதிப்பான "பால பாரதம்" ஆங்கில மாதப் பதிப்பான "கர்மயோகி" இவை யாவும் 1910ல் வெளிவரத் தடையாயின.

1910 நவம்பரில் 'கனவு' என்ற ஸ்வஸரிதை முதலிய கவிதைகள் அடங்கிய "மாதா மணி வாசகம்" என்ற நூல் வெளியிடப்பெற்றது. வீரவிளக்கு வா.வே.சு. ஐயர் புதுவை வந்தடைந்தார். அவ் அறிஞர்களின் கூட்டுறவினால் கவிஞர் அரசியல் துறையிலும் கலைத்துறையிலும் புதிய புரட்சிகரமான முறைகளில் பணியாற்றினார்.

1911ல் கலெக்டர் ஆஷ் மணியாச்சியில் சுட்டுக்கொலை செய்யப்பட்டார். இதன் எதிரொலியாகப் புதுவையில் வசிக்கும் தேச பக்தர்கள் மீது பொலிசாரின் கழுகுக்கண் பார்வைபட்டது. இதன் காரணமாக புதுவையினின்று தேசபக்தர்களை வெளியேற்ற முயற்சிகள் நடைபெற்றன. இதனாலெல்லாம் நாடெங்கும் பாரதியின் சிஷ்யர்கள் பெருகினர்.

1912ல் 'பகவத்கீதை'யை தமிழில் மொழிபெயர்த்தார். 'கண்ணன் பாட்டு', 'குயில்', 'பாஞ்சாலி சபதம் (முதற்பாகம்) போன்ற கவிதை நூல்களைப் பிரசுரம் செய்தார்.

பாரதி 1918 - 1920 காலப்பகுதியில் கடையத்தில் வசித்தார். அக்காலத்தில் வறுமையால் வாடினார். சொல்லொணாத் துன்பமடைந்தார். தம் நிலைமையை விபரித்து எட்டையபுர மன்னருக்குச் சீட்டுக் கவிகள் எழுதினார். ஆனால் எதிர்பார்த்த உதவி கிடைக்கவில்லை.

1919ல் மார்ச் மாதம் சென்னை வந்தார். மகாத்மாவை மகாகவி, மாமேதை ராஜாஜி வீட்டில் சந்தித்தார். 1920 டிசம்பரில் மீண்டும் 'மித்திரனில்' உதவி ஆசிரியராகப் பணியேற்றார்.

1921 ஜீலை - ஆகஸ்டு மாத இடைவெளிக்குள் திருவல்லிக்கேணி கோயில் யானையானது பாரதியாரை வெறிகொண்டு தாக்கியது. இதனால் அதிர்ச்சி தாங்காது நோய்வாய்ப்பட்டார் கவிஞர். 1921 செப்டம்பர் இவர் குணமடைந்தாலும் வயிற்றுக் கடுப்பு நோயினால் பீடிக்கப்பட்டார். இதே மாதம் 11ம் திகதி நோய் கடுமையாகியது.

12ம் திகதி அதிகாலை 1.30 மணிக்கு கவிஞர் பூத உடலை நீத்துப் புகழ் உடல் பெற்றார். 1948 செப்டம்பர் மாதம் பாரதிக்கு தம் காணிக்கை செலுத்த தமிழர்கள் எட்டயபுரத்தில் மணிமண்டபம் எழுப்பினார்கள். 1960 டிசம்பர் 11ம் திகதி கவிஞரின் தபால் தலையை இந்திய அரசு வெளிவிட்டது.

பாரதி என்றும் நம்மோடு வாழ்வார்
நம்மையும் வாழ்விப்பார்.

S. ஜெயந்திக்குமார்
13E

# இலங்கையின் பொருளாதாரத்தில் எண்ணெய் விலையதிகரிப்பின் தாக்கங்கள்

உலகப் பொருளாதாரத்தின் ஸ்திரத் தன்மையினை சீர்குலைக்கும் முக்கியமான காரணியாக எரிபொருள் விலை அதிகரிப்பை கூறலாம். கடந்த 05 வருட காலப்பகுதியில் உலகளாவிய ரீதியில் மசகு எண்ணெய்யின் தொடர்ச்சியான விலையேற்றமானது இலங்கையினை மட்டுமன்றி அனைத்து நாடுகளின் பொருளாதாரத்திலும் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்திவந்துள்ளது. பொருளாதார அறிக்கையின்படி உலகப் பொருளாதார வளர்ச்சி வீதமானது வீழ்ச்சியினை கடந்த காலங்களில் காட்டி வருகின்றமைக்கான பிரதான காரணங்களாக பின்வருவனவற்றை குறிப்பிடலாம்.

i. அமெரிக்காவின் சர்வதேச வர்த்தக மையம் மீதான பயங்கரவாதிகளின் தாக்கம்.
ii. மசகு எண்ணெய்யின் விலையில் ஏற்பட்ட தொடர்ச்சியானதும் சடுதி யானதுமான விலையேற்றம்.

2006 இல் கடுமையாக அதிகரிக்கத் தொடங்கிய மசகு எண்ணெய் விலையானது 2007 தொடக்கப்பகுதியில் வரலாறு காணாத அளவிற்கு உயர்ந்த பெறுமதியினை காட்டிவருகின்றது. அந்தவகையில் சர்வதேச ரீதியில் மசகு எண்ணெய் விலை உயர்விற்கு ஏதுவாக அமைந்த காரணிகளை இங்கு நோக்குவோமாயின் உலகளாவிய ரீதியில் மசகு எண்ணெய்யின் கேள்வி உயர்வடைந்து கொண்டு சென்றமை விலையேற்றத்திற்கு பொறுப்பாயிருந்த முதன்மையான காரணியாக அமைந்தது. அவ்வகையில் கடந்த 25 வருடங்களில் கைத்தொழில் நாடுகளில் மட்டுமன்றி சீனா, இந்தியா, யப்பான் போன்ற ஆசிய நாடுகளிலும் உயர்ந்தளவிலான கேள்வியினைப் பிரதிபலித்தது.

அதேபோல் எண்ணெய் நிரம்பல் பக்கத்திலேற்பட்ட வீழ்ச்சி சடுதியான விலை உயர்வுக்கு காரணமாக அமைந்தது. அந்தவகையில் உலகின் முக்கிய மசகு எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளாக மத்திய கிழக்கு நாடுகள் காணப்படுகின்றன. ஈராக், அமெரிக்காவில் யுத்தம் காரணமாக மசகு எண்ணெய் உற்பத்தி 30% - 17% மாக வீழ்ச்சியை காட்டியது. வெனிசுலா நைஜீரியா ஆகிய நாடுகளில் காணப்பட்ட பதட்டமான அரசியல் நிலமைகளும் மோசமான வானிலை நிலைமைகளும் எண்ணெய் வழங்கலின் தடைக்கு இடையூறாக அமைந்துள்ளது.

ஒபெக் (Opec) அமைப்பின் தன்னிச்சையான விலையேற்ற முடிவுகளும் பெற்றோலிய விலை உயர்விற்கு காரணமாக அமைந்தது. அத்துடன் எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகள் தமது நிதி நெருக்கடியை ஈடுசெய்யும் பொருட்டும் எண்ணெய் விலையினை தன்னிச்சையாக உயர்த்திவருகின்றன.

குறைந்துகொண்டுவரும் எண்ணெய் வளம், விலை உயர்வுக்கு மற்றொரு காரணியாக அமைகின்றது. அமெரிக்க பேராசிரியரான லக்ஸ்மன் குருசாமி

என்பவர் வெளியிட்ட ஆய்வில் இன்னும் 33 வருடங்களில் எண்ணெய் வளம் முழுமையாக மறைந்துவிடும் அபாயம் உள்ளதாக எச்சரிக்கை விடுத்துள்ளார். குறிப்பிட்ட வளம் உருவாக பல ஆயிரம் வருடங்கள் தேவையுள்ள நிலையில் இவ்வாறான அறிக்கைகள் எண்ணெய் வள நாடுகளின் எண்ணெய் உற்பத்தியை குறைத்து மறுபுறமாக விலையினை அதிகரிக்கச் செய்துள்ளது.

உலகளாவிய ரீதியில் மசகு எண்ணெய்யின் விலை ஏற்றமானது இலங்கை பொருளாதாரத்தில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்துமென்பதை நோக்குவோமானால், இலங்கை எண்ணெய் வள நாடுகளிலிருந்து ஏறத்தாழ 50%த்தினை மசகு எண்ணெய் வடிவத்திலும் மீதியினைப் பெற்றோல், டீசல் என்ற வடிவத்திலும் இறக்குமதி செய்கிறது. இலங்கையின் போக்குவரத்து துறை முக்கிய பெற்றோலிய நுகர்வாளராக விளங்குவதுடன் கைத்தொழில் மற்றும் குடியிருப்பாளர் துறைகள் இதனைப் பின்தொடர்ந்து காணப்படுகின்றன. இலங்கையில் ஊர்திப் பதிவுகளின் எண்ணிக்கை அதிகரித்தமையின் காரணமாக போக்குவரத்து துறையின் பெற்றோலிய நுகர்விற்கான கேள்வி வலுவாக உயர்வடைந்தது. இதுபோலவே மாற்று வழி மூலகங்கள் இலங்கையினைப் பொறுத்தவரையில் இல்லாமை, திட்டமிடப்பட்டுள்ள நிலக்கரி வலுவும் நீர்மின் வலு செயற்றிட்டங்களும் வினைத்திறனாகச் செயற்படாமையின் விளைவாக வெப்ப மின்வலுவின் பயன்பாடு அதிகரித்தமையின் காரணமாக வலு உருவாக்கத்தில் பெற்றோலிய உற்பத்திகளின் பயன்பாடும் விரைவாக அதிகரிக்கின்றது. இதனைப் பின்வரும் அட்டவணை மூலம் வெளிப்படுத்தலாம்.

இலங்கையின் மசகு எண்ணெய் இறக்குமதி 1998 - 2006

| காலம் | 1998 | 1999 | 2000 | 2001 | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அளவு (மெ.தொ.000) | 16 | 13 | 17 | 14 | 17 | 15 | 16 | 15 | 16 |

(மத்திய வங்கி ஆண்டறிக்கை 2006)

இலங்கை போன்ற எண்ணெய் இறக்குமதி அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் மீது எண்ணெய் விலை உயர்வின் காரணமாக ஏற்படும் பொருளாதார தாக்கமானது வெளிநாட்டுத் தாக்கங்களை எதிர்த்து நிற்கும் தன்மையிலும் தாக்கத்தினைத் தணிப்பதற்கு மேற்கொள்ளப்படும் கொள்கையிலுமே பெருமளவு தங்கியுள்ளது. பொருத்தமானதும் சரியானதுமான வழிமுறைகள் மிகவிரைவாக எடுக்கப்பட்டாலொழிய எண்ணெய் விலைகளின் உயர்வானது கடுமையாக வெளிநாட்டு உள்நாட்டுத் துறைகளில் உறுதியற்ற தன்மைக்கு வழிவகுக்கக்கூடும்.

எண்ணெய் விலைகளில் ஏற்படும் சடுதியான அதிகரிப்பு வர்த்தகச் சமநிலையினை விரிவாக்கி திரண்ட சென்மதி நிலுவை மோசமடைவதற்கும் நாட்டின் வெளிநாட்டு ஒதுக்குதல் குறைவதற்கும் வழிவகுத்துச் செலாவணி வீதத்தின்மீது அழுத்தத்தினை ஏற்படுத்தும்.

கடந்த காலங்களில் எண்ணெய் இறக்குமதிக்காக இலங்கையின் செலவினைப் பின்வரும் அட்டவணைமூலம் காட்டலாம்.

இலங்கையின் மசகு எண்ணெய் இறக்குமதிச் செலவு 1998 - 2006

| காலம் | 1998 | 1999 | 2000 | 2001 | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பெறுமதி (ஐ.அ.டொலர்.000) | 13902 | 18222 | 37697 | 31619 | 40404 | 41628 | 61434 | 77795 | 106626 |

இலங்கை தனது ஏற்றுமதி வருமானத்தில் பெரும் பங்கினை மசகுஎண்ணெய் இறக்குமதிக்கான செலவிற்காக பயன்படுத்துகின்றது.

உள்நாட்டு உறுதிப்பாடற்ற தன்மையானது உயர்ந்து எண்ணெய் விலைகளின் தாக்கமும் முழுமையாக உணரப்படுகின்றனவா என்பதைப் பொறுத்து அமைகின்றது. முழுமையான விலைஉயர்வு ஊடுகடத்தப்படும்போது அது பணவீக்க விளைவுகளை பொருளாதாரத்திலேற்படுத்தும். இதன் காரணமாக மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகரித்து வருமான ஏற்றத்தாழ்வுகளை உருவாக்கி நீண்டகாலப் பொருளாதார அபிவிருத்தியை பாதிப்படையச் செய்யும்.

எனவே இவ்வாறான தாக்கங்களிலிருந்து விடுபட வேண்டுமானால் எவ்வாறான நடவடிக்கை எடுக்கவேண்டுமென நோக்குவோமானால்....

- உற்பத்தி செய்யும் நாடுகள் தமது பெற்றோலிய உற்பத்தியை அதிகரித்தல். இதனூடாக விலையுயர்வை ஓரளவுக்குத் தடுக்கமுடியும்.
- மாற்று வளங்களை கண்டுபிடித்தல்.
- இயன்றவரை பெற்றோலிய வளத்தை சிக்கனமாகப் பயன்படுத்தவேண்டும்.

எனவே உயர்ந்த பன்னாட்டு எண்ணெய் விலைகள் தொடர்பாக உரிய நேரத்தில் சரியான வழிமுறைகளை எடுத்தாலொழிய இது நாட்டின் சென்மதி நிலுவையினை மோசமடைய செய்வதனூடாக கடுமையான பேரண்ட பொருளாதார தளம்பல்களுக்கும் இட்டுச்செல்லும்.

உசாத்துணை நூல்கள் :

மத்தியவங்கி ஆண்டறிக்கை (2003, 2004, 2006).

*C.A Ratheeskaran*
*A/L 2008*
*Commerce.*

# சமுதாயம் மாறவேண்டும்

பணத்திற்காக
குணத்தைக் கெடுத்து
பாவம் செய்யும்
பண்பற்ற இச்சமுதாயம்
மாற வேண்டும்

திட்டம் போட்டும்
சூழ்ச்சி செய்தும்
சிந்தனை கலைக்கும்
சீரழிந்த இச்சமுதாயம்
மாறவேண்டும்

உறவுகள் துன்புற
உணர்வுகளை மறந்து
சிரித்து வாழுகின்ற
இழிந்த இச்சமுதாயம்
மாற வேண்டும்

ஒன்றே குலம்
ஒன்றே ஜாதி என்ற
பாரதியின் வாக்கை
பழித்திடும் இச்சமுதாயம்
மாற வேண்டும்

கல்விதனை சிதைத்தும்
உரிமைகளை எரித்தும்
உண்மைகளை புதைத்திடும்
பாழ்பட்ட இச்சமுதாயம்
மாற வேண்டும்.

**வை. ஜெயராட்**
கலைப்பிரிவு 2009

## நல்ல பொதியமைப்பினால் ஏற்படும் அனுகூலம்

**PACKAGE**

| | | |
|---|---|---|
| P - | Protection | - பாதுகாப்பு |
| A - | Attracting attention | - கவனத்தை ஈர்த்தல் |
| C - | Convenience | - கொண்டுசெல்லல், களஞ்சியப்படுத்தல் பாவனை போன்ற கருமங்கள் |
| K - | Knowledge | - பொருள் தொடர்பான விபரம்/ அறிவு |
| A - | Afforable | - கிரயம் இழிவுபடுத்தப்படுதல் |
| G - | Greater Value | - கூடிய பெறுமதி திரட்டப்படுதல் |
| E - | Environment concern | - சூழல் பற்றி அக்கறை கொள்ளல் |

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

2007ம் ஆண்டு நடைபெற்ற கல்விப்பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் 03 A பெற்று தமது கல்விச்சாலைக்கும் பெற்றோருக்கும் சமூகத்திற்கும் மட்டற்ற பெருமையை தேடித்தந்த யா/ ஹாட்லிக் கல்லூரி மாணவர்களான

S. நிமலன் உயிரியல் பிரிவு
S. அட்ச்சன் உயிரியல் பிரிவு
V. றஜீபன் கணிதப் பிரிவு
S. சாரங்கன் கணிதப் பிரிவு
R. நிருபன் கலைப்பிரிவு
R. கௌசிகன் கலைப்பிரிவு
S. சங்கநாதன் கலைப்பிரிவு

ஆகியோரையும் மற்றும் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுள்ள ஏனைய மாணவர்களையும் அவர்களிற்கு வழிகாட்டிய கல்லூரி முதல்வர் உயர்திரு என். தெய்வேந்திரராஜா மற்றும் ஆசிரிய சமூகத்தினரையும் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர்கள் மேன்மேலும் எமது பிரதேசத்திற்கும் தாய்நாட்டிற்கும் சேவையாற்ற வேண்டுமென இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**வாழ்த்துவோர் :**

பொ. இராசதுரை - மஹாலக்சுமி ஸ்ரோர்ஸ், பருத்தித்துறை.
முகாமையாளரும் பணியாளரும் - ஜெயகணேசா ஸ்ரோர்ஸ், பருத்தித்துறை
முகாமையாளர் ராஜன் எலக்ரிக்கல், பருத்தித்துறை.
மா. சண்முகநாதன் - ராஜன் வெதுப்பகம், கதிரவேற்பிள்ளை வீதி, தம்பசிட்டி.
மா. தவராசா - புலோலி மத்தி, புலோலி.

"வழி" வருடம்தோறும் விழிவைத்துப் பார்த்திருக்க
மக்கள் வங்கியின் வாழ்த்துக்கள்

## மக்கள் வங்கியின்




பருத்தித்துறை கிளையில்!

- நாட்டின் 300 கிளைக்கு இணைக்கப்பட்ட துரித கணனி வலையமைப்பு!
- நீங்கள் செல்லுமிடமெல்லாம் பணம்பெற ஒரே ஒரு கணக்கு போதுமானது!
- 24 மணிநேரமும் இயங்கும் PET-ARM வசதி இப்பொழுது!
- கட்டணமின்றி வழங்கப்படும் PET-ARM அட்டை ஒரு வரப்பிரசாதம்!
- நகரத்தில் அதிநவீன வசதிகள் இன்றே உங்களுக்காக!
- மாணவர் மலர்ச்சி சேமிப்பு கணக்குகளிற்கு பெறுமதியான பரிசில்கள்! சாதனையாளர்களுக்கான விருதுகள்!
- **Yes future star accounts for al students!**

**PEOPLE'S BANK**
THE PULSE OF THE PEOPLE

---

"வழி" மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்

# குளோபல் தகவல் தொழில்நுட்பம்



உபயகதிர்காமம், புலோலி தெற்கு, புலோலி.

## கணனிக் கற்கைகளுக்கான சிறந்த மையம்

தற்போது

- O/L மாணவர்களுக்கான ICT
- A/L மாணவர்களுக்கான GIT மற்றும் MS Office, DCP, DIT
- அரச ஊழியர்களுக்கான விசேட கணனிப்பயிற்சி ஆகியன இடம் பெறுகின்றன.
- பதிவுகளை மேற்கொள்வதன் மூலம் நீங்களும் கணனி உலகத்தில் தடம்பதியுங்கள்.

அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும்

**T.P. No. : 021 226 4567, 021 226 4159**

"வழி" எனும் சஞ்சிகை மலர வாழ்த்துகின்றோம்!

சகலவிதமான லேஸ் வகைகள், பற்பல வர்ணங்களில்

நூல் வகைகள், கழிநூல் வகைகள்,

நவநாகரிக அழகுசாதனப் பொருட்கள் மற்றும்

பாடசாலை புத்தகப் பைகள், றைஸ் குக்கர்கள்,

அன்பளிப்புப் பொருட்கள் யாவற்றையும் நியாயமான விலையில்



வடமராட்சி நகரில் கொள்வனவு செய்ய

நீங்கள் நாடவேண்டிய இடம்



# நித்திய கல்யாணி அழகுமாடம்

பிரதான வீதி, பருத்தித்துறை.

---

"வழி" எனும் சஞ்சிகை வாழ எமது வாழ்த்துக்கள்!

தினசரி மற்றும் வாராந்த தமிழ், ஆங்கில நாளிதழ்களையும்,

பணப் பரிமாற்றம் செய்யவும்,

வெளிநாடுகளிலிருந்து குறுகிய காலத்தில்

உடன் பணம் பெறவும் நீங்கள் நாடவேண்டிய

ஒரே இடம்



# கவிதா ரேடேர்ஸ் &

# கணேஷா ஏஜென்சி

No, 27 பிரதான வீதி, பருத்தித்துறை.

"வழி" சஞ்சிகை வருடம்தோறும் வெளிவர
எமது வாழ்த்துக்கள்

திருமணவிழா மற்றும் பூப்புனித நீராட்டுவிழா அழைப்பிதழ்கள், ஆலய
விளம்பரங்கள், நினைவு மலர்கள், வாழ்த்துப்பாக்கள் போன்ற சகலவிதமான
அச்சுவேலைகளும் நவீனமுறையில் புதிய பாணியில்
அழகுவடிவத்தில் கணனியில் எழுத்துருவாக்கம் செய்யப்பட்டு



ஓவ்செற்றில் பிறிண்டிங் செய்துகொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்



# கலைமகள் ஓவ்(f)செற் பதிப்பகம்

கிராமக்கோட்டுச் சந்தி, பருத்தித்துறை.

---

ஹாட்லியின் சமூக விஞ்ஞான மன்றத்தினரின் வெளியீடான
"வழி" சஞ்சிகை வருடம்தோறும் வெளிவர
எமது வாழ்த்துக்கள்

சகலவிதமான மரக்கறி வகைகளையும் பழவகைகளையும்
மற்றும் பொருட்களையும் நியாயமான விலையில்







மொத்தமாகவும், சில்லறையாகவும்
உடனுக்குடன் பெற்றுக்கொள்ள
நீங்கள் தெரிவுசெய்ய வேண்டிய இடம்





# காந்தி பல்பொருள் வாணிபம்





மந்திகைச் சந்தி, மந்திகை.

## "வழி" சஞ்சிகைக்கு வாழ்த்து தெரிவிப்பதில் மகிழ்வடைகிறோம்

- சிறந்தமுறையில் பல் கட்டிக்கொள்ளவும்
- மிதப்புப் பற்களுக்கு கிளிப் செய்து கொள்ளவும்
- கணனிமூலம் கண் பரிசோதித்துக் கண்ணாடி பெற்றுக்கொள்ளவும்

நாடவேண்டிய சிறந்த இடம்



# RENNY DENTAL & OPTICAL SERVICE

**இல. 540, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்,**

**கிளை நிறுவனம் : பிரதான வீதி, பருத்தித்துறை.**
**(வேலாயுதம் பாடசாலைக்கு அருகாமை)**


---


## "வழி" சஞ்சிகை வருடம்தோறும் வெளிவர எமது வாழ்த்துக்கள்







- அப்பியாசப் புத்தகங்கள்
- காகிதாதிகள்
- பாடசாலை உபகரணங்கள்
- அலுவலக உபகரணங்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- அழகுசாதனப் பொருட்கள்
- விளையாட்டுப் பொருட்கள்
- பயிற்சிப் பாடநூல்கள் மற்றும் மாதிரி பரீட்சை வினாத்தாள்கள்

மற்றும் பலவற்றையும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

# செல்லாச்சி புத்தகசாலை

பிரதான வீதி, பருத்தித்துறை.

# திருவடி சூட்டு படலத்தில் இலக்குமணன் சூளுரை...

கூனி எனப்படும் மந்தரையின் சூழ்ச்சியினால் கேகயன் மகள் கைகேயி கேட்ட வரத்தினை கையறுநிலையில் நின்ற தசரதன் செய்வதற்கு யாதுமின்றி அளித்தான். இதன் விளைவே இராமன் காடாளுதல். இதனை அறிந்த தோன்றலாகிய பரதன் தன் சேனையோடு இராமனை அழைத்து வருவதற்காக வனம் வருகின்றான். தோன்றலின் வருகையினைத் தவறாகப் புரிந்துகொண்ட முன்கோபியான இலக்குமணன் பின்வருமாறு சூளுரை செய்தான். அதற்குமுன்....

உடைவாளை இடையில் கட்டிக்கொண்டு வீரக்கழலை காலில் அணிந்தான். பல அம்புகள் நிறைந்த அம்பறாத்தூணியை தோளிலே இட்டான். வீரக் கவசத்தை மார்பிலே தரித்தான். வரிந்து கட்டிய வில்லை எடுத்துக்கொண்டு பின்வருமாறு இராமனுக்கு முன் சூளுரைத்தான்.

இம்மை மறுமை ஆகிய இரண்டினது இன்பங்களையும் இழந்து பரதனது தோள்களின் பருப்பத்தினையும், அவனுக்கு உண்டாகிய படையின் பெருமைகளும் அழிவதனையும், உனக்குப் பின் பிறந்த தனியனான என்னுடைய ஒப்பற்ற ஆற்றலையும் இனி நீ கண்டு உள்ளம் மகிழ்வாய்.

துன்பங்கள் எல்லாம் உண்டாகும் வண்ணம் பருத்த யானைகளாகிய மேடுகளை உருட்டுவனவாயும், தேர்களை இழுத்துச் செல்வனவாயும், குடலை எல்லாம் உருவிச் சிதைத்துக் கொண்டு கடல்முழுவதும் பாய்ந்து சங்கமிக்கப் போகும் இரத்த ஆறுகளையும் காண்பாய். இந்த வரிகளை பின்வரும் செய்யுளிலே மிக அழகாகக் கையாண்டுள்ளார். இச் செய்யுள் இதோ

"படரெல்லாம் படப்படும் பருமயானையின்
இடரெலா முருட்டின தேரு மீர்த்தன
குடரெலாந் திரைத்த குருதியாறுகள்
கடரெலா மடுப்பன பலவும் காண்டியால்"

எனது ஒளிபொருந்திய கணைகள் பகைவரின் ஆயுதங்களையும் கைகளையும் கவசம்தரித்த மார்புகளையும் அவர்களின் உயிரோடு உருவிச் செல்லும். ஆனால் அவை செல்லும் வேகத்தால் அவற்றிலே இரத்தம் தோயாது. திக்கு யானைகளும் அஞ்சும் வண்ணம் வீரச் சாதனை நிகழ்த்துவேன் என்றான்.

தாவிச் செல்வனவாகிய குதிரைகள் அழிந்துபோகப்பெற்ற புதுமையான தேர்களின் பொன்னாலாகிய தேர்த்தட்டுக்களில் கேடயத்தோடு கூடிய பகைவரின் வலிய கைகள் விழ அவற்றைப் பேய்கள் தம் கைகளிலே எடுத்து தாளமிட்டு இசையோடு நடனமாடுவதை காண்பாய்.

அலங்காரம் மிக்க யானைகளோடு கூடிய பரதனின் சேனைகளின் தொகுதிகளை வேரறுத்து ஓர்

இமைப்பொழுதில் ஒளிக்கப்போவதால் வீர சுவர்க்கம் காரணமாக விண்ணுலகம் முழுவதும் இறந்தவரின் பாரம் தாங்காது முதுகு நெளிய பூமி முதுகை நிமிர்த்தி இளைப்பாறப் போகின்றது என்றான். இதனை,

"பண்முதிர் களிற்றொடு பரதன் சேனையி
னெண்முத லறுத்துநா னிமைப்பி னீக்கலால்
விண்முது குளுக்கவும் வேலை யாடையின்
மண்முது காற்றவுங் காண்டி வள்ளனீ.

என்ற செய்யுளிலே மிகச் சிறப்பாகக் கூறியுள்ளார்.

முகபடாம் அணிந்த கொடிய மதயானைகள், குதிரைக்கூட்டம், பெருமை பொருந்திய வலிய புயங்களை உடைய போர்வீரர்கள் யாவரும் இறந்தொழிய கடல்போன்ற இரத்த வெள்ளத்தில் கலக்கப்பட்டு ஏழு சமுத்திரங்களும் ஒன்றுகூடி ஒலிப்பது போல ஒலிக்கும்.

காலாற் படைவீரர்கள் அறுபட்டு வீழவும், அசைகின்ற தேர்கள் அழிந்துபோகவும், வீரர்களின் வாள் துண்டாகவும், வரிந்து கட்டிய வில் முறியவும், பெரிய யானைகள் குதிரைகளின் கால்கள் அறுபடவும், அவற்றிலே அமர்ந்த வீரர்களின் தோள்கள் அறுந்து வீழவும் அன்பு தொடுப்பேன்.

செழிப்பான பெரிய சிறகுகளை உடையனவும் அசைந்து ஒளிவிடும் பொன்னினால் அமைக்கப்பட்டதுமான சிறந்த எனது அம்புகள் பரதன், சத்துருக்கன் ஆகிய இருவரது மார்புகளிலும் புகுந்து தசையையும் கௌவிக்கொண்டு ஆகாயத்தில் செல்லும் கழுகு முதலிய பறவைகளையும் விருந்துண்ண அழைக்கும்.

ஆசை நாயகியான கைகேயியின் வார்த்தையினால் உலகம் முழுவதும் துன்பத்தில் இருப்பதற்குக் காரணமான தசரதன் கட்டளையை ஏற்று தான் பெற்ற பேரரசை ஏற்பதனை விடுத்து வந்த பரதன் இன்று என் கட்டளையை ஏற்று அரிய நரகத்தை ஆழ்வாய்.

நீ காடாளுவதால் வருந்திய உனது தாயான கோசலை வருந்தக் கண்டு மகிழ்ந்தவளான பழியின் மிக்கவளான கைகேயி பரதன் இறந்த சோகத்தால் தரையில் விழுந்து கதறுவாள்.

ஆயுதங்களைக் கூர்மைப்படுத்தும் அரம்போன்ற கருவியால் நெருப்பின் வெம்மையை மிகுதியாகப் பெறும் வேற்படையாலான மாலை தரித்தவனே விரைந்து ஒரு நொடிப்பொழுதில் ஒரு அம்பில் முழுச் சேனையையும் சுட்டெரித்த சிவபெருமான் போல எரிப்பேன் என்றெல்லாம் சூளுரைத்தான்.

**யோ. வசீகரன்**
**13E**

# தமிழ் மொழியின் தனித்துவம்

உலகில் சிறப்போடு விளங்கிய உயர்தனிச் செம்மொழிகளில் தமிழ்மொழியும் ஒன்றாகப் போற்றப்படுகின்றது. ஆனால் கிரேக்கம், சமஸ்கிருதம் போன்ற மொழிகள் எல்லாம் வழக்கு இழந்தோ அன்றி முற்றிலும் சிதைந்தோ ஒழியப் பழமைக்கும் பழமையாய் புதுமைக்கும் புதுமையாய் இருவழக்கும் பெற்று இலக்கிய வளமும் கொண்டு என்றும் குன்றாத சீரிளமைத் திறத்தோடு இன்றும் விளங்குவது தாயத்தாய் மூச்சு கன்னித்தமிழ் ஒன்றே ஆகும். அத்தகைய பழமையாம் வளமையாம் கொண்ட தமிழ்மொழியில் தோன்றிய இலக்கியங்கள் உலகச் சிறப்பு உடையனவாகும்.

உலகப் பேரிலக்கியங்களோடு ஒப்பிடத்தக்க உயர்வுபெற்றுத் திகழ்பவை தமிழ்மொழி, தமிழ்மொழியில் சிறப்பாக சங்க இலக்கியங்களில் அமைந்த அகத்துறைப் பாக்களை அறிஞர்கள் நவிலுகின்றனர்.

தமிழ்மொழியில் காணப்படும் அறத்துறை இலக்கியங்கள் போன்று உலகில் வேறு எங்ஙணும் இல்லையென்று மேனாட்டறிஞர்களாகிய பெஸ்கி, பொப் முதலியோர் வியந்து மொழிகின்றனர்.

மனித உள்ளத்தை புனிதப்படுத்தும் மாண்புமிக்க எண்ணற்ற பக்தி இலக்கியங்கள் தமிழ்மொழியில் சிறந்து காணப்படுவதுபோல வேறு எம்மொழியிலும் இல்லை. வணிகத்தின் மொழி - ஆங்கிலம் என்றால், தூதின் மொழி - பிரஞ்சு என்றால் காதலின் மொழி - இத்தாலியம் என்றால் தத்துவத்தின் மொழி - ஜேர்மனியம் என்றால் உலகிலே பக்தியின் மொழி - தமிழாகும் எனப் பறைசாற்றுகிறார் தமிழ்த்தூதுவர் தனிநாயகம் அடிகள்.

சைவர்களும், வைணவர்களும், சமணர்களும், பௌத்தர்களும், கிறிஸ்தவர்களும், முகமதியர்களுமாக தங்கள் தங்கள் இலக்கியங்களைப் படைத்து மகிழ்ந்த ஒரே உலக மொழி தமிழ்மொழி ஒன்றாகும். பழம் பெருமை வாய்ந்த லத்தீனுக்கோ, வடமொழிக்கோ இத்தகைய சிறப்பு அமைவதில்லை.

புத்தமதத்தின் தலைசிறந்த சமயக் காப்பியமான மணிமேகலை தமிழ்மொழியில் அமைந்திருப்பது தமிழினத்திற்கே பெருமை தருவன ஆகும்.

உலகியலறிவை உணர்த்தும் சிறப்பாய் திருக்குறளுக்கு ஒப்பான இலக்கியம் உலகிலே வேறு எதுவும் இல்லையென்று ஆர்பர்ட் ஷ்னவட்ஸர் என்னும் அறிஞர் ஆணித்தரமாக குறிப்பிடுகின்றார்.

தமிழ்மொழியில் உயர்திணையில் ஆண், பெண் அடிப்படையில்தான் பால் பாகுபாடு செய்வது வழக்கம். ஆனால் வடமொழியிலும் இன்னும் பல மேனாட்டு மொழிகளிலும் செயலை அடிப்படையாக வைத்தே பால், பாகுபாடு செய்வது விந்தையாக இருக்கும். அந்தப் பாகுபாடும் காலத்திற்குக் காலம் மாறிக்கொண்டேயிருக்கும். இவ்வாறு தமிழ்மொழியில் அறிவின் அடிப்படையில் அமைந்த திணை, பால் பாகுபாட்டை பேரறிஞர் கால்டுவெல் பெரிதாகப் பாராட்டுகிறார்.

"தமிழ்மொழியில் வரும் சுட்டுவினைப் பெயர்களின் ........ தத்துவார்த்தமான ஒழுங்குமுறை உலகில் வேறு எம்மொழியிலும் இல்லை. இவ்வொழுங்கு முறை செம்மையாக அமையப்பெற்ற

மொழி, தமிழ்மொழி ஒன்றே" எனவும் "ஏகார ஓகாரங்கள் வினைப்பொருளில் வருதல் திராவிட மொழிகளைத் தவிர வேறு எந்த மொழியிலும் இல்லை; அவை வடமொழிக்கே தெரியாதவை" எனவும் கால்டுவெல் வியந்துகூறுகின்றார்.

இத்தகைய சிறப்புக்களைக் கொண்ட தமிழ்மொழியின் தொன்மையை ஓரளவு காண்போம்.

தமிழ்மொழியினின்றும் தெலுங்கு மொழி சங்க காலத்திலேயே பிரிந்துவிடக் கன்னடமொழி கி.பி. 18ம் நூற்றாண்டில் பிரிந்திருத்தல்கூடும். ஏனென்றால் இந்நூற்றாண்டில் வாழ்ந்த ஜெயங்கொண்டார் தெலுங்கும் தமிழும் கலந்த மொழியே கன்னடமாகும் எனத் தெளிவாகக் கூறுகின்றார்.

"வடகலை, தென்கலை வடக்கு கன்னடம் ......... தோன்றின ராமனும்" என்று கூறிய கம்பர் மலையாள மொழியை குறிப்பிட்டமை அம்மொழி மிகப் பிற்காலத்தில் தோன்றியதென்ற உண்மையை எடுத்துரைப்பதாகும். இவ்வாறு பிரிந்த தென்னிந்திய மொழிகள் எல்லாம் வடமொழியோடு கலந்து தத்தம் இயல்பை அறவே இழக்க, இன்றுவரை தனித்தன்மை பெற்றுத் தாய்மையாகத் திகழும் இந்திய மொழி தமிழ்மொழி ஒன்றேயாகும். வடமொழியிலிருந்து சொற்கள் தமிழ்மொழியில் கலந்தாலும் அவை முற்றிலும் ....... மாறி தமிழோடு தமிழாகத் திரிந்துவிட்டன. 'உபகம்', 'ஐப்பசி', 'புரட்டாதி' போன்ற சில வடமொழிச் சொற்கள் இதற்கு உதாரணமாகும்.

தமிழ்மொழியின் தொன்மை குறித்து கால்டுவெல் சில சான்றுகள் காட்டுகின்றார். பழங்கன்னடம், மலையாளம், துளு, கொண்டு, துதம், கூ போன்ற பலமொழிகளும் பெரிதும் தமிழ்மொழியை ஒத்திருக்கின்றன. திராவிட மொழிகளில் வழங்கும் சொற்கள் பலவும், தமிழ்மொழியில் வழங்குகின்றன. கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளில் வழங்கும் நாடுகளில் மிகப் பழமையானவையாகக் கருதப்படும் கல்வெட்டுக்கள் யாவும் வடமொழியில் விளங்க தமிழ்நாட்டில் மட்டுமே பழங் கல்வெட்டுக்கள் தூய தமிழ்மொழியில் அமைந்துள்ளன. கி.பி. 7, 8 ஆம் நூற்றாண்டுகளில் எழுதப்பட்ட மலையாள மொழிக் கல்வெட்டுக்கள் தமிழ்மொழியின் இலக்கண இயல்பையும், மரபுச் சொற்களையும் தழுவி விளங்குவதை நோக்க, மலையாள நாட்டில் அப்பொழுது அரியாசன மொழி தமிழாகவும் பேச்சு வழக்கு மொழி, மலையாளமாகவும் வழங்கியிருத்தல் வேண்டுமெனக் கால்டுவெல் குறிப்பிடுகிறார். தொல்காப்பிய காலத்திலேயே "செந்தமிழ்" என்ற பாகுபாடு ஏற்பட்டமை தமிழ்மொழியின் தொன்மையை நன்கு வலியுறுத்துவதாகும்.

இத்தகைய தனித்துவம்மிக்க தமிழ்மொழியில் தோன்றிய இலக்கியங்களின் பழமை பற்றி கூற முனைந்த ஜெ. பிளாக் என்ற மேனாட்டறிஞர் "ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தெலுங்குமொழியில் இலக்கியம் இல்லை. பழங் கன்னடத்தில், இலக்கிய நூல்கள் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்புதான் தோன்றின. ஆனால் தமிழ்மொழியில் தோன்றிய இலக்கிய நூல்களோ மிகமிகப் பழமையானவைகளாகும்" என்று எடுத்துரைக்கின்றார்.

**க. சாரங்கன்**

**கலைப்பிரிவு 2008**

# கிராமியக் கலைகள் – ஒரு ஆய்வு

இந்துமதம்சார் வழிபாட்டு முறை ஆனது ஆகமம் சார்ந்த நெறி, ஆகமம் சாராநெறி என இருவகைப்படும். இவ் இரண்டு வழிபாட்டு முறைகளையும் இன்று காணமுடிகின்றது. கிராமியப் பிரதேசங்களில் ஆகமம் சாரா நெறி முறையே பெரும்பாலும் பின்பற்றப்படுகின்றது. ஆகமம் சாராநெறியில் கிராமியக்கலை அம்சங்கள், இடத்துக்கு இடம் மாறுபட்டு நிற்குமாற்றினை நாம் கண்டுகொள்ள முடிகின்றது. இக்கிராமிய மரபில் வெளிப்படுத்தப்படும் கலைகள் கிராமியக் கலைகள் என்று பொதுவாக அழைக்கப்படுகின்றது. வெவ்வேறு காலத்திற்கு ஏற்ப, வெவ்வேறு சூழ்நிலைக்கேற்ப கிராமியக் கலையின் தாக்கம் மாறுண்டு செல்வதும் கண்கூடு. எனவே இன்றைய நிலையிலே இக் கலைகளின் பங்களிப்பு எத்தகையது என்பதை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

மனிதனின் மன உணர்வை வெளிப்படுத்தும் சாதனம் கலை எனலாம். கலை கலைக்கானது அன்று. அது சமயத்திற்கானது. அச்சமயத்தில் சடங்காசாரத்தை பறைசாற்றி நிற்பது. இக் கலைகள் பல தரப்படும். ''கிராமத்துக்கே உரித்தானதாகக் கொள்ளப்படுவது, மண்வாசனை பொருந்தி நிற்பது கிராமியக் கலையே என்பதில் வியப்பில்லை''. அக்கலைகளில் நாட்டார் இசை, உடுக்கு, பறை, காவடிச்சிந்து, வசந்தன் பாடல்கள், கோலாட்டம், கரகம் முதலிய கலைவடிவங்கள் இன்றியமையாதன.

கிராமியக்கலை பற்றி பேராசிரியர் அ. சண்முகதாஸ் குறிப்பிடுவது இவ்விடத்தில் நோக்கத்தக்கது. "நமது கலைகள் என்றிருந்தவை காலகதியில் கிராமியக் கலைகள் என பேர்பெறலாயின. நகர உருவாக்கம் தனக்கென சில பண்பாட்டுக் கூறுகளைத் தோற்றுவித்துக்கொண்டது. நவீன விஞ்ஞான வளர்ச்சி நகரத்துக்கென பல புதிய விடயங்களை அறிமுகம் செய்தது. நகரங்களில் வாழத்தொடங்கிய தமிழர்கள் அந் நகரமயமான கலைகளிலே ஈடுபாடுகொண்டனர். நகரம் அல்லாத இடங்கள் கிராமங்கள் எனப்பட்டன. அப் பிரதேசத்தில் காணப்பட்ட கலைகள் கிராமியக் கலைகள் எனப்பட்டன.

சண்முகதாசின் கருத்துக்கள் கிராமியக் கலைகளுக்கான தளத்தினை விளக்கி நிற்கின்றன எனலாம்.

தமிழர் கலை மரபினிலே கலைகளை வேற்றியற் கலைகள், பொதுவியற் கலைகள் என இரண்டாகப் பாகுபடுத்திப் பார்க்கும் மரபு பண்டுதொட்டு இருந்துவந்துள்ளது. "ஒரு காலத்திலே வேந்தனுடைய அவையில் உயர் கலை அந்தஸ்தைப் பெற்றிருந்த கலைகள் பல்வேறு மாற்றங்களால் அந்தஸ்து நிலையில் இருந்து விடுபட்டு சாதாரண கிராமிய மட்டத்து மக்களிடையே சென்று வழங்கியிருக்க வேண்டும். இந்நிலையில் இவை கிராமிய என்ற அடையினைப் பெற்றிருக்கலாம்'' என பேராசிரியர் சி. மௌனகுரு கருதுகின்றார்.

கிராமியக் கலைகள் வெறும் பொழுதுபோக்கல்ல. அவை தெய்வ பக்தி, அழகுணர்ச்சி, நல்லொழுக்கம் முதலியவற்றை மக்களுக்கு புகட்டி வருவதோடு அக்கலைகள் மக்களை ஒற்றுமைப்படுத்தியும் ஊக்குவித்தும் வருபவை எனலாம். ஈழத்திலே விளங்கும் கிராமிய நாட்டார் கலைகளை நான்கு வகையாக பிரித்து நோக்குவார் கலாநிதி சி. பாலசுந்தரம்.

- அவைக்காற்றுக் கலை – கூத்து, நடனம், வில்லிசை.
- இலக்கியக் கலை – நாட்டார் பாடல், பழமொழி.....
- விளையாட்டு
- ஒப்பனை

கூத்தின் நவீன வளர்ச்சியே நாடகம் எனலாம். பழைய காலத்தில் வட்டக்களரி முறையில் ஆடப்பட்டுவந்த கூத்து, இன்று மூன்று பக்கமும் மூடிய அரங்கில் நிகழ்த்தப்படுகின்றது. அழிந்துபோகின்ற கூத்துக் கலையை ஊக்குவித்து மறுவாழ்வு கொடுத்தவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன். இவர் பல்கலைக்கழக மாணவர்களைக் கொண்டு புத்துயிர்பெற வழிகாட்டியவர். அவரைத் தொடர்ந்து பேராசிரியர் மௌனகுரு பேராசிரியர் அ. சண்முகதாஸ் போன்றோரும் நாடகத்துறைக்கு தங்களை அர்ப்பணித்தவர்கள். நடனக் கலையைப் பொறுத்தவரையில் கிராமிய வழிபாட்டுக் கலை வடிவங்களில் ஒன்றாகிய ஆடல் என்னும் மரபு அதாவது, 'கட்டுச் சொல்லி உரு ஆடல்'' இன்றும் நடனக்கலையின் அத்திவாரமாக கிராமிய மட்டத்திலே நின்று நிலவுகின்றது. கிராமிய நடனக் கலையானது காவடி, கரகம், கோலாட்டம் போன்ற பல்வேறு வடிவங்களைப் பெற்றிருக்கின்றது.

ஈழத்தமிழர் வாழ்வில் மிகுந்த செல்வாக்குடன் இன்றும் எழுச்சிபொங்கும் கலை வடிவம் வில்லிசை எனலாம். இக் கலை வடிவம் தமிழகத்திலேயே பயிற்றப்பட்டு வந்தது. பின் ஈழத்தில் அதனை அறிமுகம் செய்துவைத்தார் மாஸ்டர் சிவலிங்கம். இவரால் இக்கலையை சமுதாயத்திற்கு வெளிக்கொணர முடியவில்லை. இவரைத் தொடர்ந்து கலாவிநோதன் கணபதிப்பிள்ளை (சின்னமணி) அவர்களும் அவரைத் தொடர்ந்து சத்தியதாசன், சர்மா போன்றோரும் இத்துறையில் ஈடுபாடு காட்டி வருகின்றனர்.

பழமொழிகள்; முதுமொழிகள் எனவும் வழங்குகின்றன. நாட்டுப்புற கிராமிய மக்களிடையே இவை இன்றும் வழக்கொழியாமல் இருந்துவருகின்றன. நொடிகளை விடுகதைகள் என்றும் சொல்லலாம். விடுகதைகளில் ஏதாவது புதிர் ஒன்று மறைந்திருக்கும். விடுகதையைக் கூறியவுடன் நொடிப்பொழுதில் அதனைக் கண்டுபிடித்துவிடலாம். தொல்காப்பியம் இதனை ''பிசி'' என்கிறது. ஈழத்தமிழரிடையே வெவ்வேறு விடுகதைகள் பழமொழிகள் வழக்கத்தில் இருந்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது. ஆலயங்களோடு இணைந்து ஆடல் சார்ந்த கலையாகப் போற்றப்படுவது 'வசந்தன்' என்னும் கலை வடிவம் ஆகும். ஆடல்களில் இது தனிச்சிறப்பு வாய்ந்தது. ஆலயச் சடங்குகளோடும் சித்திரை வருடப் பிறப்பு, தீபாவளி முதலாய பண்டிகைகளிலும் இக்கலை வடிவம் செல்வாக்குப் பெறுகின்றது. மட்டக்களப்பிலே வசந்தன் ஆட்டத்தை

சிறுவர்களும், இளைஞர்களும் பேணி வருகின்றனர். எட்டுப்பேர் அல்லது பத்துப்பேர் கொண்ட குழு நடனமாக இந்த வசந்தன் நடனம் அமையும்.

கிராமிய வாழ்வியல் கலைகளில் தனித்துவமானது காவடியாட்டம். இது பல்வேறு நிலைகளில் அமையும். முன்கூட்டியே பயிற்சி ஏதுமின்றி மேளவாத்தியம், உடுக்கு, நாதஸ்வரம் என்பவற்றுக்கு ஏற்றபடி ஆடும்முறை ஒன்று, கைகள், புயம், நெஞ்சு, முதுகு சிறிய வேல்களை குற்றி முதுகிலே சிறிய கொழுக்கிகளை ஏற்றி அவை அனைத்தையும் கொடியால் இணைத்து ஒருவர் இழுத்துப்பிடிக்க சுழன்று ஆடும் முறை வேறொன்று.

காவடியாட்டம் இன்றும் பல ஆலயங்களிலே ஆகமம் சார்ந்த, ஆகமம் சாராத கிராமியநெறியிலே நின்று நிலவுகின்றது. ஈழத்தின் வடபகுதியில் செல்வச்சந்நிதி, நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன், மந்திகை கண்ணகை அம்மன் போன்ற ஆலயங்களிலே இன்றும் விழாக் காலங்களில் நிகழ்த்தப்படுவதை நாம் காணமுடிகின்றது. இதுபற்றிய விரிவான செய்திகளை இத்திமரத்தாள், ஆற்றங்கரையான் என்ற நூல்களில் பேராசிரியர் அ. சண்முகதாஸ், மனோன்மணி சண்முகதாஸ் போன்றோர் தந்திருப்பது சுட்டியுரைக்கத்தக்கது.

இவ்வாறு ஈழத்திலே கிராமிய மட்டத்திலே பேணப்படும் வழிபாட்டுக் கலை மரபுகளில் நாட்டார் இலக்கியம், காவடியாட்டம், கரகாட்டம், கோலாட்டம், வில்லிசை, கூத்துக்கலை, வசந்தன் நடனம் பல்வேறு நாட்டார் கலைக் கூறுகளை இனம் காணமுடியும். மேல்நாட்டு நாகரிக தாக்கத்தினால் வழக்கொழிந்துவரும் இக்கலை வடிவங்களை உரியமுறையில் பாதுகாக்க முயற்சிகள் உடனடியாக மேற்கொள்ளப்படவேண்டும். ஈழத்தமிழரின் தனித்துவத்தை பிரதிபலிக்கும் இக்கலை வடிவங்கள் ஈழத்தின் தேசிய கலைவடிவங்களாக அமைகின்றன.

நன்றி.

**க. அருணேற்றாம்**
**கலைப்பிரிவு**

## 21ம் நூற்றாண்டிற்கான பிள்ளைகளின் தூரநோக்கு

- தர்க்கரீதியான சிந்தனைகளும், பிரச்சனை விடுவித்தலும்
- சவால்களுடைய நிலைமைகளுக்கு முகம்கொடுத்தல்
- வெற்றி தோல்விகளை ஏற்றுக்கொள்ளல்
- இயந்திரம், பொறிகள், கருவிகள், உபகரணங்களுடன் வேலை செய்தல்
- கற்றலையும் வேலையையும் நோக்கிய நேரான மனப்பாங்கு

# உலகமயமாதல்

நாகரிக விளிம்பில் ததும்பும் 21ம் நூற்றாண்டில் தொடர்பாடல் சாதனங்களின் வளர்ச்சி உலகை ஒரு கிராமமாக்கிவிட்டது. கணனித் தொடர்பாடலின் உச்சப் பயன்பாட்டை உலகிற்குத் தந்து மனித இன முன்னேற்றத்திற்கு வித்திட்டுள்ளது. பாலர் முதல் முதியோர் வரை ஆசிரியன் முதல் அரசியல்வாதி வரை தொழில்நுட்ப யுகத்திலே வாழ வழிவகுத்த தொழில்நுட்ப சாதனங்களின் வளர்ச்சியே உலகமயமாதலுக்கு அடிப்படை எனலாம். உலகளாவிய ரீதியில் நாடுகள் பல ஒருங்கே இணைந்து தத்தமது வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலே உலகமயமாதலாகும். பூகோள மயமாதல், திறந்த பொருளாதாரக் கொள்கை, திறந்த பொருளாதாரச் சந்தை என பலரினால் பல பதங்கள் கொண்டு அழைக்கப்படும் இவ் உலகமயமாதலினால் பல நாடுகள் அனுகூலங்களையும் சில நாடுகள் பிரதிகூலங்களையும் அடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பொதுவாக பொருளாதார, தொழில்நுட்ப, கலாசார, அரசியல் தொடர்புகளினூடாக உலக நாடுகளையும் அவற்றின் மக்களையும் நெருக்கமாகவும் ஒன்றில் ஒன்று தங்கியிருப்பதாகவும் ஒருங்கிணைக்கும் செயல்முறை உலகமயமாதல் ஆகும். பெரும்பாலான வளர்முக நாடுகளில் வேலையின்மை, வறுமை, வருமான சமமின்மை, பணவீக்கம் போன்ற பிரச்சினைகள் தேசியப் பொருளாதாரத்தின் விரைவான அபிவிருத்திக்கு சவாலாக அமைவதால் இப் பொருளாதார நெருக்கடிகளை நீக்கவும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் உலகமயமாக்கல் ஒரு சிறந்த தீர்வாக அமைகிறது. மிக விரைவாக தொடர்பாடல்கள், கணனி, வலைப்பின்னல், போக்குவரத்து சாதனங்கள் போன்றவற்றின் அபார வளர்ச்சிகளும் உலகரீதியான பல்தேசியக் கம்பனிகளின் ஆதிக்கமும் இவ் உலகமயமாக்கலுக்கான பிரதான காரணங்களாகும். இவை மட்டுமன்றி சர்வதேச நாணய நிதியம் (IMF), உலக வங்கி (WB), உலக வர்த்தக அமைப்பு (WTO) போன்றவையும் இச் செயற்பாட்டுக்கு துணை புரிகின்றன.

பூகோள மயமாதல் எனும் உலகளாவிய வர்த்தகத்தின் பாய்ச்சலில் அனைவரும் இணைவதனால் ஏற்படும் உற்பத்தி அதிகரிப்பினாலும் வர்த்தக நிதியியல் உயிர்ப்பூட்டலாலும் நாட்டின் வளமும் மக்கள் நலனும் வளர்கிறது. இத்தகைய நிதியியல் முதலாளித்துவத்தின் இன்றைய கூர்ப்பே கணனி, செய்மதி, தொடர்பு சாதனங்களின் அபரிதமான வளர்ச்சியின் கோளமயமாதல் ஆகும்.

இன்று ஒவ்வொரு நாடும் தத்தமது பொருளாதாரத்தை விரிவடையச் செய்வதற்கும் உலக சந்தையில் தனக்கென ஒரு சிறப்பான இடத்தை தக்கவைத்துக் கொள்வதற்கும் போராடிக் கொண்டிருக்கின்றது. இதற்காக மனிதன் தினம்தினம் பல சாதனங்களை உருவாக்கி அதனூடாக தனது வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றான். இத்தகைய வர்த்தக நடவடிக்கைகளில் நவீன

தொழில்நுட்பமும் ஐரோப்பிய அரசுகளின் இணைவும் பெரியதொரு திருப்பதை ஏற்படுத்தியுள்ளது. தேசிய சந்தைகள் அனைத்தும் வலைப்பின்னல் யுகத்தில் இணைக்கப்பட்டு பாரிய சந்தைகளாக மாற்றம் கண்டுள்ளன. ஆரம்பகாலத்தில் நாடுகளுக்கிடையே நத்தை வேகத்தில் செயற்பட்ட வர்த்தகம் இன்று வலைப்பின்னல் எனும் போர்வையில் சில மணிநேரங்களில் பரிமாற்றமடைந்து விடுகின்றன. இது உலகமயமாதலின் சிறப்பம்சமாகும்.

இவ் உலகமயமாதலின் பயன்பற்றி நோக்குமிடத்து இது அதிகளவு வெளிநாட்டு முதலீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கு சிறந்த ஊடகமாக விளங்குகின்றது. இலங்கை போன்ற சிறிய நாடுகள் பாரிய சந்தைகளை அடைவதன்மூலம் உற்பத்திகளில் பொருளாதார அளவுத்திட்ட சிக்கனங்களிலிருந்து இலாபங்களை அடைகின்றன. இவை மட்டுமன்றி அதிநவீன தொழில்நுட்ப அறிவையும், கைத்தொழில் அறிவையும் தரமான பொருட்களையும் பெறமுடிவதோடு செயற்றிறன்மிக்க பொருளாதார நடவடிக்கைகளை இனங்கண்டு கொள்ளவும் முடிகிறது. மிகக்கூடிய உற்பத்தியாற்றல் மிக்க நடவடிக்கைகளின் மூலம் அவற்றைப் பதிலீடு செய்துகொள்ளவும் முடிவதோடு வளர்முக நாடுகள் தமது சேமிப்புக்களையும் கடன்பெறும் வாய்ப்புகளையும் அதிகரிக்கமுடிகிறது. உற்பத்திகளையும் காரணிச் சந்தைகளையும் உலகளாவிய ரீதியில் ஒருங்கிணைக்கும் செயற்பாடு புதியதொன்றல்ல என்பதோடு பொருளாதார அபிவிருத்தியில் தவிர்க்கமுடியாத ஒரு பகுதியாகவும் இது மாறியுள்ளது.

தற்பொழுது இலங்கையும் வர்த்தகம் மற்றும் முதலீட்டுத் தடைகளை அகற்றி உலகமயமாக்கல் பாதையில் படிப்படியாக அடியெடுத்து வைப்பதோடு இலங்கைப் பொருளாதாரம் உலகப் பொருளாதாரத்துடன் இணைக்கப்பட்டு உலகமயமாக்கப்பட்டு வருவதனை உலக பொருளாதார வளர்ச்சி வீதத்துக்கும் இலங்கைப் பொருளாதார வளர்ச்சி வீதத்துக்குமான தொடர்பு காட்டுகின்றது.

இந்த உலகமயமாதலினால் பல நன்மைகளைப் பெறமுடிந்தாலும் கூட சில அபரிதமான அழிவுகளையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்திவிடுகின்றது. எனினும் நன்மைகள் பல வசதிபடைத்த நாடுகளுக்கு கிடைத்திருப்பதும் தீமைகள் வறிய நாடுகளுக்கு கிடைத்திருப்பதும் புள்ளிவிபர அடிப்படையில் பொருளியலாளர் கண்ட உண்மை. ஆயுத உற்பத்தி நாடுகளுக்கிடையே போரைத் தூண்டிவிடுவதாகவும், வர்த்தகப் போட்டி நாடுகளுக்கிடையே பிரச்சினைகளைத் தூண்டி விடுவதாகவும் உலகமயமாக்கல் நடவடிக்கைகள் சில அமைந்துவிடுகின்றன. இது மட்டுமன்றி தொழல்நுட்பமும் அபிவிருத்தியும் இணைவு கண்டதனால் மக்களின் நுகர்வுப் பண்பு வளர்ச்சியடைந்ததோடு அபரிமிதமான நுகர்வுக் கலாசாரமும் மனிதத் தன்மையற்ற தொழில்நுட்பமும் பாரிய மனித அவலங்களையும் அழிவுகளையும் ஏற்படுத்தியுள்ளது. தொழிலகக் கழிவுகளின் வெளியேற்றம் உருவாக்கும் அசிட் மழையும் சூழல் மாசாக்கமும் பூமியின் அழிவையும் கால எல்லையையும் வரையறை செய்துள்ளமை இதற்குச் சான்றாகும்.

இவ் உலகமயமாக்கல் நடவடிக்கையில் பொருளாதாரங்கள்

ஒன்றிலொன்று தங்கியிருப்பதனாலும் பல பலவீனங்கள் ஏற்படுகின்றன. சர்வதேச நிதிச் சந்தையின் நிச்சயமற்ற தன்மையினால் ஆபத்துக்களின் அளவு அதிகரிப்பதும் குறைந்த தரமுடைய தொழில்நுட்ப வளநாடுகள் உலக சந்தையை அடையமுடியாதிருத்தல் போன்றவை அவ்வகையின. தேசிய அரசின் முக்கியத்துவம் குறைக்கப்படுவது பல துறைகளில் அரசின் பங்குப்பணிகளைப் பாதிப்பதோடு சுதந்திர பொருளாதாரக் கொள்கைகளைப் பின்பற்றுவதற்கு மையநாடுகளின் நிபந்தனைகள் தடையாக உள்ளன. அதிகளவு குறுங்கால மூலதனப் பாய்ச்சல்களின் விளைவாக அந்நியச் செலாவணி வீதங்களில் தொடர் தளம்பல் இடம்பெறுவது உள்நாட்டுப் பொருளாதாரம், மூலவளங்களின் அசைவு மற்றும் வெளிநாட்டு வர்த்தகம் என்பவற்றைப் பாதிப்பதோடு வருமான ஏற்றத்தாழ்வும் அதிகரிக்கின்றது. இலங்கை உலகமயமாக்கலிற்கு முழுமையாக உட்படுவதற்கு இன்னும் சில படிக்கற்கள்தான் இருக்கின்றன. ஆனாலும் உலகமயமாக்கல் என்பது வளர்முக நாடுகளில் வாழும் பலரினால் வெறுக்கப்படுமொரு வார்த்தையாக மாறிவருகின்றது. உலகமயமாக்கல் தொடர்பிலான மகாநாடுகள் நடக்கும் இடங்களில் இடம்பெறும் பாரியளவு எதிர்ப்பும் கங்குன் மகாநாட்டின் தோல்வியும் இந்த வெறுப்பின் வெளிப்பாடுகளே. உலகமயமாதலினால் ஏற்படும் தீமைகளை கருத்திற்கொண்டு பல நாடுகள் உலகமயமாதலை எதிர்த்து நிற்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு பல பிரதிகூலங்கள் காணப்பட்டாலும் உலகமயமாக்கலில் நன்மைகளை அதிகமாகவும் தீங்கு பயக்கும் விளைவுகளை குறைவாகவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். அதற்கு ஒரு நாடு நிதியியல்துறை ஒழுங்கைப் பேணுவதுடன் தேவையற்ற பொருட்களைக் குவித்தலையும் கொள்ளை இலாபம் பெறும் விலையிடலைத் தடுத்தலும் இன்றியமையாதது. இவை மட்டுமன்றி உலகமயமாக்கல் செய்முறையுடன் சமூகத்தேவைகளை இணைப்பதும் ஒருங்கிணைக்கும் நம்பிக்கைக்கு எதிரான சட்டங்களைப் பேணுவதும் சுற்றுச்சூழல் மூலவளங்களின் பாதுகாப்பில் கவனம் செலுத்துவதும் இன்றியமையாதது.

இவ்வாறு உலகமயமாக்கலை பலவாறு பல கண்ணோட்டங்களில் நோக்கலாம். இது பற்றி சாயி கிருபானந்தன் போன்ற பல ஆசிரியர்கள் பல கோணங்களில் பலவாறு விளக்கியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.. உலக நாடுகள் ஒவ்வொன்றும் தத்தமது உலக மயமாக்கல் நடவடிக்கைகளை நன்கு திட்டமிட்டு திறம்பட செயற்படுத்துமாயின் அது அவற்றை உயர்ந்தநிலைக்கு இட்டுச்செல்வதோடு சர்வதேச சந்தையில் பல நாடுகள் வெற்றிநடை போட்டு ஏனைய நாடுகளை ஆதிக்கம் புரிவதற்கும் வழிவகுத்துள்ளது. அறிவின் உச்சியில் விளங்கும் பல தொழில்நுட்ப வளங்களே உலகமயமாக்கல் நடவடிக்கைகளுக்கு மூலம் என்றால் அது மிகையாகாது!

உசாத்துணை நூல்கள் :
பொருளாதார மேம்பாட்டு சிந்தனைகள்
என். ஸ்ரீரஞ்சன்.

**மோ. பிரதீபன்**
**2008 Com**

வாழிய "வழி" என்றென்றும் பொலிவுடன் மலர

வாழ்த்துகின்றோம்

# ஸ்ரீமுருகன் மருந்தகம்

பருத்தித்துறை

சகலவிதமான ஆங்கில ஆயுள்வேத

மருந்துவகைகள்

ஆலய விசேட திரவிய வகைகள்

மற்றும்

பால்மா வகைகள் போன்றவற்றைப்

பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்

# ஸ்ரீமுருகன் மருந்தகம்

258 பிரதான வீதி, பருத்தித்துறை.

## ஹாட்லியின் "வழி" வளர எமது வாழ்த்துக்கள்

புகைப்படப்பிடிப்புக் கலையின் முன்னோடிகள்
எழில் கொஞ்சும் வண்ணப் படப்பிடிப்புகள்
பல்லாண்டு கால படப்பிடிப்பின் அனுபவம்
நவீன தொழில்நுட்ப முறை





# திரு ஸ்ரூடியோ



*பிரதான வீதி,* *பருத்தித்துறை.*

---

## "வழி" என்றும் மங்களமாக ஒளிவீச வாழ்த்துக்கள்

புத்தகங்கள், கல்வெட்டுக்கள், சஞ்சிகைகள், விற்பனைச் சிட்டைகள்,
Notices போன்ற சஞ்சிகைகள் அனைத்தும் சிறந்தமுறையில்
கணனி வடிவமைப்பு செய்யப்பட்டு தரமாக ஒவ்செற் பிறிண்டிங் மூலம்
அச்சுப் பதித்துக் கொடுக்கப்படும்.
அத்துடன் தொலைத்தொடர்பு சேவை பக்ஸ் வசதி போட்டோ பிரதி
லெமினேற்றிங் போன்ற சேவைகளையும் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்

# ஐங்கரன் ஓவ்(f)செற்




*சிலையடி,* *மந்திகை.*

T.P. 021 226 3641



"வழி"க்கு வாழ்த்து தெரிவிப்பதில் மட்டற்ற
மகிழ்ச்சியடைகின்றோம்

சகலவகையான மின்னியல்ப் பொருட்கள், பிளாஸ்ரிக் பைப்
வகைகள், மின்குமிழ்கள், மின்மோட்டார்கள்,
பெயின்ற் வகைகள் போன்றவற்றை மிக நிதானமான
விலையில் உடனுக்குடன் பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய இடம்





# ஐங்கரா களஞ்சியம்



*பிரதான வீதி, பருத்தித்துறை.*

---

"வழி"என்றும் தமது பணியை முன்னெடுக்க
எமது வாழ்த்துக்கள்

டியிற்றல் வீடியோ முறையில் கமராமூலம்
கொம்பியூட்டர் மிக்சிங் முறையில் துல்லியமாக படப்பிடிப்பு
செய்யவும் குறைந்த விலையில் போட்டோப்
பிரதியாக்கம் செய்யவும் சிறந்த இடம்

# ராஜன் வீடியோ மூவிஸ் சென்ரர்





*பிரதான வீதி, பருத்தித்துறை.*

**T.P. 021 226 3607**

"வழி" சஞ்சிகை வருடம்தோறும் புகழ்பரப்ப
எமது வாழ்த்துக்களும் ஆசிகளும்

# மந்திகை மருந்தகம்

பருத்தித்துறை – யாழ்வீதி.
புலோலி தெற்கு,
புலோலி.

சகலவிதமான ஆங்கில மருந்துவகைகள்,
பால்மா வகைகள் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.

தொ.இல. : 021 226 3283

# MANTHIGAI PHARMACY

## (Near manthigai Base Hospital)

**Jaffna Road,**
**Puloly South,**
**Puloly.**

Sale of Drugs & milk foots

T.P. : 021 226 3283

"வழி" சஞ்சிகை மலர எமது வாழ்த்துக்கள்

## Prince Leather products

பாடசாலை மாணவர்களுக்கான பாதணிகள், பைகள், நங்கையர்களுக்கான நாகரீக பாதணிகள், ஆடவர் விரும்பும் அழகுமிகு பாதணிகள் கிடைக்கும்



ஒரே இடம்



## Prince Leather products

*Market, Manthikai.*

---

"வழி" வாழ எமது வாழ்த்துக்கள்

கணனி திருத்துதல் மற்றும் விற்பனை செய்தல், **Phone** திருத்துதல், விற்பனை செய்தல் போன்ற சேவைகளையும் பாடசாலை உபகரணங்கள், குளிர்களி வகைகள், அழகு சாதனப் பொருட்கள் அனைத்தையும் பெற்றுக்கொள்ள



சிறந்த இடம்



## சுகன் மலிரி கோணர்

*சாவகச்சேரி வீதி, மந்திகை.*

---

"வழி" சிறக்க எமது வாழ்த்துக்கள்

## Ranjan Photo & Video

உங்கள் மங்களகரமான வைபவங்களை டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் வீடியோ படம் பிடித்திடவும் அடையாள அட்டை பாஸ்போட் படங்களை பிடித்திடவும் படங்களைப் பெருப்பித்து கொள்ளவும் அல்பங்கள் வடிவமைத்து கொள்ளவும் நீங்கள் நாடவேண்டிய இடம்





## ரஞ்சன் போட்டோ அன் வீடியோ

*யாழ் வீதி, மந்திகை.*

T.P. 021 226 4229

---

"வழி" மாணவர்களுக்கு வழிகாட்ட வாழ்த்துக்கள்

## ஜெயரஜ் தையலகம்



கண்ணைக் கவரும் அழகூட்டும் ஆடைகளை சிறந்த முறையில் தைத்துக் கொடுக்கப்படும்.

*பிரதான வீதி, பருத்தித்துறை.*

# விக்கிரக ஆராதனை

கடவுள் என்றால் பலவகைப்பட்ட ஆன்மாக்கள் யாவற்றினதும் நிலைமை கடந்த ஒரு நிலையாகும். வண்டியை வண்டிக்காரன் கடவுதல்போல உடலினுள் இருந்து ஆன்மாவைச் செலுத்துபவர் கடவுள். இன்னொரு ஆன்மாவை இம்சிக்காத பண்பைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள் இந்துக்கள். அவர்கள் தம் இறைவனை பலப்பல வடிவங்களாக உருவமைத்து வழிபடுகின்றனர். அவ்வடிவே விக்கிரகம் என்று அழைக்கப்படும்.

"வி" என்பது மேலானது என்றும் கிரகம் என்பது வீடு அல்லது இருப்பிடம் என்றும் பொருள்படும். எனவே விக்கிரகம் என்றால் இறைவனின் மேலான இருப்பிடம் என்று கருதப்படும். விறகிற் "தீ" இருப்பது போல விக்கிரகங்களில் இறைவன் மேன்மையுடன் விளங்குகின்றான். சைவசமயக் கொள்கைகள், கிரியைகள் இருவகை நோக்குடையன. ஒன்று புறக்காட்சி மற்றையது அகக்காட்சியாக தத்துவக்கருத்தைக் கொண்டு விரிக்கிற் பெருகும்.

பண்டைய மக்கள் நடந்ததைப் போலவே உண்கிறோம், உடுக்கிறோம் ஏன் இன்று அயல்நாட்டு நாகரிகத்தைப் பின்பற்றுகின்றோம். இது ஏனென்று எவரும் கேட்பதில்லை. ஆனால், விக்கிரகம் ஏன்? ஆராதனை ஏன்? என்று கேட்கும் காலம் இது. உண்மையை அறியவும் அருள்வேண்டும். நாம் காணாததும், நம் அறிவுக்கு எட்டாதனவும் பொய்யா? புலியைக் காணாத ஒருவருக்கு புலியைப் பற்றி எப்படித்தான் விபரணம் செய்தாலும் அகக்கண்ணில் அகப்படாது. ஒரு படத்தையோ, சிலையையோ காட்டி அது போன்றதே புலி என்றால் நன்கு புரிந்துகொள்வான். அதுபோன்ற இடத்தை எடுப்பதுதான் விக்கிரகம். நாம் அன்புகொண்ட காதலியின் கடிதமோ, அல்லது அவளது நிழற்படமோ கிடைத்தபோது நாம் எத்துணை இன்பம் அடைகின்றோம். கடிதமும், படமும் இவ்வளவு இன்பத்தை அடையச் செய்யுமாயின் பலவகைப்பட்ட ஆன்ம தோற்றங்களை எல்லாம் படைக்கும் சர்வவல்லமை கொண்ட கடவுளின் படமும், விக்கிரகமும் ஏன் துன்பம்கொடா? மரத்தால் செய்த யானையை மரம் என்ற எண்ணத்தோடு பார்த்தால் மரமாகவே தோன்றும். யானை என்ற கருத்தோடு பார்த்தால் யானையாகவே தோன்றும். விக்கிரகத்தைக் கல் என்று கருதினால் கடவுளாகத் தோன்றாது. கடவுள் என்று கண்டால் கல்லாகத் தோன்றாது. ஒரு பொருள் வெவ்வேறு வர்ணக் கண்ணாடிகளினூடாக பார்க்கும்போது வெவ்வேறு வகையாகவே தோன்றும். உள்ளும் புறமும் ஒரு தன்மையான உப்புக்கட்டியைப் போன்றவர்கள் அனுபூதிச் செல்வர்கள். சிவனைக் கண்டவர்கள் சித்தர்கள். இறைவன் அடியவர்களுக்காகவே பலப்பல வடிவங்களைக் கொண்டருளினார். ஆன்மாக்கள் கண்ணை விட்டுத் தூரத்தே போகக்கூடாது என்ற கருத்துடையவர் இறைவன். சிவன் 25 மூர்த்தங்களைக் கொண்டதால் 25 வகையான விக்கிரகங்களை அமைத்து ஆராதிக்கின்றனர். "தேவன் நமது சாயல் உடையவன்" என்று கிறிஸ்தவ வேதம் கூறும்.

"பார்வையென மாக்களை முன்பற்றிப்
[பிடித்தற்காம்
போர்வையெனக் காணார் புவி"

பழக்கப்பட்ட விலங்குகளைக் கொண்டு காட்டு விலங்குகளைப் பிடித்தல் போல மனித உருவம் கொண்டே மனிதரை இறைவன் ஆட்கொள்வான்.

பல இடங்களில் இறைவன் அடியார்களுக்குக் காட்சிகொடுக்கிறான். அவர் கண்ட கோலத்தைப் பாடலாகப் பாடினார். அதை அமைத்துச் செம்பாலும், கல்லாலும் விக்கிரகம் ஆக்கினர் சிற்பக் கலைஞன். செம்பிலும் கல்லிலுமோ எம்மிறை இருப்பார் என்றால் அது முந்தையோர் கண்ட விஞ்ஞானம். மின்சக்தியை விரைவிற் பெறவும், கடத்தவும் வல்லமை கொண்டது செம்பு. அதேபோல இறை அருளைப் பெறவும் அடியார்க்கு ஈயவும் வல்லமை கொண்டது இந்த செப்பு விக்கிரகம். மூலஸ்தான விக்கிரகம் மட்டும் கல்லால் அமையவேண்டும் எனின் கவரும் சக்தி கல்லுக்குண்டு. முகிலை இழுத்து மழையாகப் பொழிகிறது மலை. இன்னும் நிலம், நீர், நெருப்பு, ஆகாயம், காற்று ஆகிய ஐம்பூதங்களையும் தம்மகத்தே அடங்கியது கல்.

ஆராதனைக்கு ஏற்ற விக்கிரகங்கள் முதுமையற்ற இளமையான கல்லில் அமையவேண்டும் என்பதும் அதுவும் ஆண்கல்லில் ஆண் விக்கிரகங்களும் பெண் கல்லில் பெண் விக்கிரகங்களும் அமைக்கவேண்டும் என்பது சிப்பிகளின் கொள்கை. அம்மியைக் கல்லாக்குவதில் புதுமை இல்லை. கல்லை எடுத்து வேண்டாதனவற்றை நீக்கி தெய்வீக ஒளி கொண்ட விக்கிரகம் ஆக்குவதே புதுமை. ஒரு கல் கால் மிதிக்கும் படி ஆகின்றது. இது பொருந்துமாறு எங்ஙனம் சாதாரண மனிதனாக விளங்கும்போது ஒருவனின் மதிப்பும், சிறப்பும் அவ்வளவு போற்றப்படுவதில்லை. ஆனால் அவனை ஒரு மந்திரியாகப் பட்டம்சூட்டி விருதுகள் வழங்கி அரசாங்கம் மதிக்கும்போது அவனது மதிப்பும் சிறப்பும் காரிய ஆற்றலும் அளவிட முடியாது. கற்பனையில் கண்ட கந்தனைக் கல்லிலே கண்டு கும்பாபிஷேகம் செய்து பிரதிஷ்டைப்படுத்தும்போது அதன் வல்லமை வலுப்பெறுகின்றது.

"கல்லுயானை கரும்பு தின்றது" மார்க்கண்டேயர் ஆராதனை செய்த சிவலிங்கம் காலனைக் காலால் உதைக்கும்படியானது, கண்ணப்பர் கண் காண சிவலிங்கத்தின் கண்ணிலிருந்து இரத்தம் வடிந்தது. இவை போன்ற பல இடங்களில் கல் விக்கிரகம் கண் விழித்துக் காரியம் செய்தது என்றால் விக்கிரக ஆராதனை விருப்பப்படத் தக்கதொன்றே. இராமபிரானும் விக்கிரம ஆராதனை செய்த சம்பவத்தை நாம் மறந்துவிடலாமா?

செய்த வினைக்கேற்ப பிறப்பை எடுத்து அல்லலுறும் ஆன்மா விக்கிரக ஆராதனையை நிந்தை செய்தால் இப்பிறப்பு முடிந்து மறுபிறப்பை அடையும்போது இதற்கான தண்டனையை அடையும்.

நாம் ஒரு பொருளைத் தேடும்போது உள்ள ஊக்கம், அது கிடைத்தபோது தொடர்ந்து நிகழ்வதில்லை. அதேபோன்று விக்கிரக ஆராதனையின் சிறப்பை ஆராய்ந்ததுபோன்று அதனைத் தொடர்ந்து ஆராதிக்கவும் முயலல் வேண்டும். படகு தண்ணீரில் இருக்கலாம். ஆனால் தண்ணீர் படகினுள் நுழைந்தால் கதி யாதாகும். உலகில் நாம் வாழலாம். உலகத்தில் நாம் வாழ்தல் என்பது சிந்தனைக்குரியதே நினைவு நல்லது வேண்டும்.

"பாடும் பணியே பணியாய் அருள்வாய்"
"கற்பனையென்றாலும் கற்சிலையென்றாலும்
கந்தனே உன்னை மறவேன்"

**ஆ. ஆகில்யன்**
**2009**

# அறிவியலும் கலையும்

அறிவியற் துறையிலே முன்னேறிச் செல்லும் இன்றைய மக்களிற்குப் பெரும் குறையொன்று ஏற்பட்டுவருகின்றது. "விஞ்ஞானமும் கலையும்" வாழ்விலே சரியான சமமான இடத்தை எடுத்துக்கொண்டால் வாழ்வு இனிமை பயப்பதாய் இருக்கும். ஆகவே விஞ்ஞானத்திற்கும் கலைக்கும் உள்ள தொடர்பையும், தொடர்பிலாமையையும் நாம் சற்று அறிந்திருத்தல் நலம்.

தமிழே மூச்சாக வாழ்ந்துவரும் பேராசிரியர் "டாக்டர்" மு. வரதராசனார் இவ்விரண்டையும் பற்றி விளக்குவதைப் படித்துப்பாருங்கள்.

"ஒரு மரத்தைப் பார்த்து இது நாற்பதடி உயரம் உள்ளது என்பது அறிவியல். இது வானளாவி உயர்ந்தது என்பது கலை". ஒரு கூட்டத்தைப் பார்த்து இது இருநூற்று நாற்பதாயிரம் மக்களைக் கொண்டது என்பது அறிவியல். எள்விழ இடமில்லாமல் கூடிய கூட்டம் என்பது கலை.

தொட்டவுடன் சுருங்கும் இலைகளை உடைய ஒரு செடியைத் "தொட்டாற்சுருங்கி" என்று குறிப்பது அறிவியல். "என்னைத் தொடாதே" (Touch me not) என்று அது கூறுவதாகக் கற்பனை செய்வது கலை.

"விண்ணை இடிக்கும் தலை இமயம்" என்பது கலை. விண் என்று ஒன்று இல்லை என்றும், இமய மலைச் சிகரம் எதுவும் அந்த விண்ணைத் தாக்கி இடிப்பதுவும் இல்லை என்றும் இமயமலை கடல் மட்டத்திற்கு மேல் இருபத்தொன்பதாயிரத்து நூற்று நாற்பத்தோரடி உயரம் என்றும் அறிவது அறிவியல்.

"ஆங்கிலக் கல்வியால் எள்ளளவும் நன்மை கண்டிலேன் இது உண்மை என்று நாற்பதினாயிரம் கோயிலில் எடுத்துச் சொல்வேன்" என்று உணர்ந்து பாடுவது கலை. "ஆங்கிலக் கல்வியால் பயன் குறைவு தாய்மொழியின் வாயிலாக நம்நாட்டு மரபிற்கு ஏற்ப கல்வி கற்பதுதான் மிக்க பயன் உடையது" என்று நிறுத்துக்கூறுவது அறிவியல்.

"என் நெஞ்சமே! நீ காதலரை நாடிச் செல்கிறாயே. உன்னுடன் இந்தக் கண்களையும் அழைத்துக்கொண்டு செல். அவரைக் காணவேண்டும் என்று இந்தக் கண்கள் என்னைத் தின்கின்றன" என்பது கலை. "என் மனம் காதலரை விரும்புகிறது. என் கண்களால் அவரைக் காண விரும்புகிறேன்" என்று உரைப்பது அறிவியல்.

**வேறுபாடுகள்**

அறிவியலிற்கும் கலைக்கும் உள்ள வேறுபாட்டைப் பின்வருமாறு எடுத்துரைக்கலாம்.

உள்ளதை உள்ளவாறு அறிவிக்க முயல்வது அறிவியல் (Science)

உள்ளதை உணர்ந்தவாறு உணர்த்துவது கலை (Art)

கருவிகளால் அளந்து வரையறை செய்து கூறுவது அறிவியல்

அளவைகளைப் பற்றி கவலைப்படாமல் உயர்ச்சியால் வாரிவழங்குவது கலை.

அறிவும் ஆராய்ச்சியும் கொண்டு வளர்வது அறிவியல். உணர்ச்சியும் கற்பனையும் கொண்டு வளர்வது கலை. ஊன்றி நின்று நடப்பது போன்றது அறிவியல். தாவிப் பறப்பது போன்றது கலை. கணக்குப்போல் எதையும் நுண்மையாக்கிக் கூறுவது அறிவியல். சிற்பம், ஓவியம் முதலியன போல் எதற்கும் உருவம் தந்து உணர்த்துவது கலை. பருப்பொருளை விளக்குவதற்கும் நுண்மை நாடுவது அறிவியல். நுண்பொருட்களாகிய கருத்துக்களிற்கும் உருவந்தந்து விளக்குவதுகலை.

த. உதயகுமார்

# அளவையியலில் உடன் அனுமானம்

## அறிமுகம்

ஓர் குறிப்பிட்ட விடயம் தொடர்பாக ஆய்வுசெய்கின்றபோது அது தொடர்பான தரவுகளிலிருந்து முடிவுகளிற்கு செல்வது அனுமானம் எனப்படும். அனுமானம் நிகழவேண்டுமாயின் தரவுகள் தரப்படுதல் வேண்டும். தரவுகளின்றி அனுமானத்தை பெற்றுக்கொள்ளமுடியாது. இவ் அனுமானம் பின்வருமாறு இரு வகைப்படும்.

1. உய்த்தறிவு அனுமானம்
2. தொகுத்தறிவு அனுமானம்

இவை பற்றி நோக்கும்போது உய்த்தறிவு அனுமானம் என்பது தரவுகளிலிருந்து நியாய வடிவத்தினை பின்பற்றி உட்கிடையாக இருக்கும் ஒன்றினை முடிவாக பெறும் அனுமானமே ஆகும்.

உதாரணம் : எல்லா படைவீரர்களும் போர் வீரர்கள் ஆவர்.
சில்வா ஓர் படைவீரன்
∴ சில்வா ஓர் போர்வீரனாவார்.

தொகுத்தறி அனுமானம் என்பது அவதானிக்கப்பட்ட தனிப்பட்ட தேர்வுகள் அதாவது நிகழ்வுகளில் இருந்து அதனடிப்படையில் பொதுவான முடிவுக்கு வருவதே ஆகும்.

உதாரணம் : x என்ற கம்பி துருப்பிடித்தல்
y என்ற கம்பி துருப்பிடித்தல்
z என்ற கம்பி துருப்பிடித்தல்
∴ கம்பி எல்லாம் துருப்பிடிக்கும்.

இங்கு தொகுத்தறி அனுமானம் இடம்பெற்றுள்ளது. அதாவது x, y, z என்ற மூன்று கம்பிகளின் இயல்பை பார்த்து ஏனைய கம்பிகளின் இயல்பை கவனத்திற் கொள்ளாது கவனத்திற் கொள்ளப்பட்ட மூன்று கம்பிகளின் இயல்பை எல்லாக் கம்பிக்கும் பொருந்தும் எனக் கூறுவதாகும்.

இவ்வாறு அமைந்த உய்த்தறி அனுமானம் பிரதானமான இரண்டு பிரிவுகளை கொண்டுள்ளது. அவையாவன,

1. உடன் அனுமானம் or நேர் அனுமானம்
2. ஊடக அனுமானம் or வழி அனுமானம் or நியாயத்தொடை

இங்கு முதலாவதாக கூறப்பட்ட உடன் அனுமானம் பற்றியும் அதன் வகைகள் பற்றியும் பின்வருமாறு நோக்கிக்கொள்ளலாம்.

## உடன் அனுமானம்

உடன் அனுமானம் என்பது ஒரு தனி எடுப்பின் உட்கிடைகளை வெளிப்படுத்தும் நெறியாகும். அதாவது தனியோர் எடுப்பிலிருந்து அதற்கென

நிர்ணயிக்கப்பட்ட விதிகளை அடிப்படையாகக் கொண்டு அவ் எடுகூற்றுக்களில் உள்ளடங்கிய ஓர் முடிவினை பெருகின்ற நெறியே ஆகும்.

இவ் உடன் அனுமானத்தில் இரண்டு முக்கிய வகைகள் உள்ளன. அவையாவன,

1. எடுப்பு முரண்பாடு
2. எடுப்பு வெளிப்பேறு என்பவையே ஆகும்.

இவை பற்றிய விளக்கத்தை பின்வருமாறு தனித்தனியே நோக்கிக்கொள்ளலாம்.

## 1. எடுப்பு முரண்பாடு


ஒரே எழுவாய், பயனிலை கொண்ட நிறை விதி எடுப்பு (A), நிறை மறை எடுப்பு (E), குறைவிதி எடுப்பு (I), குறைமறை எடுப்பு (O) என்ற நான்கு வகையான அறுதி (பதார்த்த எடுப்புகளிற்கிடையே) அளவாலோ பண்பாலோ வேறுபட்ட ஏதாவது இரு அறுதி எடுப்புக்களிற்கிடையேயான உண்மை, பொய் தொடர்பை விளக்குவதே எடுப்பு முரண்பாடாகும்.

எனவே முரண்பட்ட எடுப்புக்கள் அளவினாலோ, பண்பினாலோ அல்லது இரண்டினுமாலோ வேறுபட்டாலும் ஒரே விடயத்தையே குறிக்கின்றன. அதாவது ஒரே சூழலில் ஒரே காலத்தில் உள்ள பொருட்களையே குறிக்கின்றன.

இவ் எடுப்பு முரண்பாடு பின்வரும் நான்கு வகையான தொடர்புகளை கொண்டு காணப்படுகின்றன.

1.1 எதிர்மறைத் தொடர்பு or முரண் தொடர்பு
1.2 மறுதலைத் தொடர்பு
1.3 உபமறுதலைத் தொடர்பு
1.4 வழிப்பேறுத் தொடர்பு

இவ் எடுப்பு முரண்பாட்டு தொடர்புகளை விளக்கிக்கொள்வதற்கு பின்வரும் அரிஸ்ரோட்டிலின் முரண்பாட்டுச் சதுரம் பயன்படுத்தப்படுகிறது.



### 1.1 எதிர்மறைத் தொடர்பு

ஒரே எழுவாய் பயனிலை கொண்ட அளவாலும் பண்பாலும் வேறுபடுகின்ற எடுப்புக்களிற்கிடையிலான உண்மை, பொய் தொடர்பினை விளக்குவதே எதிர்மறைத் தொடர்பாகும். இத் தொடர்பு நிறைவிதி எடுப்பிற்கும் (A) குறைமறை எடுப்பிற்கும் (O) இடையிலும் நிறை மறை எடுப்பிற்கும் (E) குறைவிதி எடுப்பிற்கும் (I) இடையிலும் காணப்படும்.

இங்கு ஒரு எடுப்பு உண்மை எனின் மற்றையது பொய் ஆகவும் ஒரு எடுப்பு பொய் எனின் மற்றையது உண்மையாகவும் அமையும். இரு எடுப்பும் ஒரே நேரத்தில் ஒரே பெறுமானத்தை கொண்டிருக்கமுடியாது.

எடுப்பு முரண்பாட்டுத் தொடர்பில் எதிர்மறைத் தொடர்பே பூரணமானதோர் தொடர்பாக காணப்படுவதோடு நவீன அளவையியலாளர்களின் கருத்துப்படி வலிதான வடிவமும் ஆகும். ஏனெனில் இத்தொடர்பில் மட்டுமே சந்தேகம் என்ற பெறுமானத்திற்கு அதாவது உண்மையோ பொய்யோ என உறுதியாக தீர்மானிக்க முடியாத நிலைக்கு இடமளிக்கப்படவில்லை.

### 1.2 மறுதலைத் தொடர்பு

ஒரே எழுவாய், பயனிலை கொண்ட அளவில் நிறையாக உள்ள பண்பால் வேறுபடுகின்ற எடுப்புக்களிற்கிடையிலான உண்மை, பொய் தொடர்பை விளக்குவதே மறுதலைத் தொடர்பாகும்.

இத் தொடர்பு நிறை எடுப்புக்களான நிறைவிதி எடுப்பிற்கும், நிறை மறை எடுப்பிற்கும் இடையிலே மாத்திரமே அனுமானிக்கப்படும்.

இவ் முரண்பாட்டில் ஒரு எடுப்பு உண்மை எனின் மற்றையது பொய்யாகவும் ஒரு எடுப்பு பொய் எனின் மற்றையதனை தீர்மானிக்கமுடியாததாக காணப்படும். இங்கு இரு எடுப்புக்களும் உண்மையாக முடியாது. ஆனால் பொய்யாக அமையலாம்.

### 1.3 உபமறுதலைத் தொடர்பு

ஒரே எழுவாய் பயனிலை கொண்ட அளவில் குறையாக உள்ள ஆனால் பண்பால் வேறுபடுகின்ற எடுப்புக்களிற்கிடையிலான உண்மை பொய் தொடர்பினை விளக்குவதே உபமறுதலைத் தொடர்பாகும்.

இத் தொடர்பினை குறை எடுப்புக்களிற்கு இடையே மாத்திரமே அனுமானிக்கப்படும். அதாவது இத்தொடர்பு குறைவிதி எடுப்பிற்கும் (I) குறை மறை எடுப்பிற்கும் (O) இடையிலே அனுமானிக்கப்படும்.

ஒரு எடுப்பு உண்மை எனின் மற்றையது சந்தேகம். ஒரு எடுப்பு பொய் எனின் மற்றையது உண்மை. இங்கு இரண்டும் பொய்யாக இருக்கமுடியாது. ஆனால் உண்மையாக இருக்கலாம்.

## 1.4 வழிப்பேறுத் தொடர்பு or வழிப்பெறுகைத் தொடர்பு

ஒரே எழுவாய் பயனிலை கொண்ட பண்பால் ஒன்றுபட்ட ஆனால் அளவால் வேறுபடுகின்ற எடுப்புக்களிற்கு இடையேயான உண்மை பொய் தொடர்பை விளக்குவதே வழிப்பேறுத் தொடர்பாகும். இவ் அனுமானம் அளவையியல் துறையில் காணப்படும் கலைமுறை முரண்பாட்டு வகைகளில் ஒன்றென்பது குறிப்பிடத்தக்கது. இவ் அனுமானம் அனுமானிக்கப்படுகின்ற திசையை அடிப்படையாகக் கொண்டு இருவகைப்படுகிறது.

1. வழிப்படுத்தியில் இருந்து முடிவுபெறல்/ கீழ்த்திசை தொடர்பு
2. வழிப்பேறிலிருந்து முடிவுபெறல்/ மேல்த்திசைத் தொடர்பு

இவை பற்றி நோக்கும்போது ஒரே எழுவாய் பயனிலை கொண்ட பண்பினால் ஒத்த ஆனால் அளவில் நிறையாக உள்ள எடுப்புக்களின் உண்மை பொய் பெறுமானத்தை அடிப்படையாகக் கொண்டு அளவில் குறையாக உள்ள எடுப்புக்களின் உண்மை, பொய் பெறுமானத்தை அனுமானித்தலே கீழ்த்திசை தொடர்பாகும். இத் தொடர்பு நிறைவிதி எடுப்பிலிருந்து குறைவிதி எடுப்பிற்கும், நிறைமறை எடுப்பிலிருந்து குறைமறை எடுப்பிற்கும் கீழ்த்திசையாக அனுமானிக்கப்படும்.

இங்கு ஒன்று உண்மையெனின் மற்றைய எடுப்பு உண்மையாகவும் ஒன்று பொய் எனின் மற்றையது சந்தேகமாகவும் காணப்படும். இங்கு இரு எடுப்பும் உண்மையாக இருக்க அதேநேரம் இரு எடுப்பும் பொய்யாகவும் அமையலாம்.

இதேபோன்று மேல்த்திசை தொடர்பு என்பது ஒரே எழுவாய், பயனிலை கொண்ட அளவில் குறையாக உள்ள எடுப்பின் பெறுமானத்திலிருந்து அளவில் நிறையாக உள்ள எடுப்பின் உண்மை, பொய் தன்மையை தீர்மானிப்பதே ஆகும். இவ் அனுமானம் குறைவிதி எடுப்பிலிருந்து நிறைவிதி எடுப்பிற்கும், குறைமறை எடுப்பிலிருந்து நிறைமறை எடுப்பிற்கும் மேல்த்திசையாக அனுமானிக்கப்படும்.

இங்கு ஒரு எடுப்பு உண்மை எனின் மற்றையது பொய். இங்கு இரு எடுப்புக்களும் ஒரே நேரத்தில் பொய்யாக காணப்படும். இரு எடுப்பும் உண்மையாகவும் அமையலாம்.

இவ்வாறு எடுப்பு முரண்பாட்டில் எடுப்புக்களிற்கு இடையேயான தொடர்பு அனுமானிக்கப்படுகின்றபோது குறித்த வகுப்பு பெற்று வகுப்பாக காணப்படும்போது போலி ஏற்படும். இது **இருத்தல் போலி** எனப்படும். இதனை முன்வைத்தவர் ஜோர்ஜ் பூல் என்பவராவர்.

அதாவது எடுப்பு கொண்டுள்ள விடயம் அனுபவத்திற்கு அப்பாற்பட்டதாக இருக்கும்போது அதனை எடுப்பு முரண்பாட்டு அனுமானத்தில் வைத்து உண்மை, பொய் பெறுமானத்தை தீர்மானிக்கும்போது இப்போலி ஏற்படும்.

உதாரணம் : தேவர்கள் எல்லோரும் அழகானவர்கள்
தேவர்கள் சிலர் அழகானவர்கள்

இங்கு தேவர்கள் அழகானவர்கள் என்பது பௌதீக அதீத கூற்று. அதாவது அனுபவத்திற்கு அப்பாற்பட்ட விடயம். எனவே இவ்வாறான சந்தர்ப்பத்தில் போலி ஏற்படும்.

## 2. எடுப்பு வெளிப்பேறு

உடன் அனுமான வகையினுள் ஒன்றாக குறிப்பிடப்படும் எடுப்பு வெளிப்பேறு என்பது "உண்மையென்று ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு எடுப்பிலிருந்து எழுவாயால் அல்லது பயனிலையால் அல்லது இரண்டாலும் முரண்பட்ட அல்லது அவற்றை இடம்மாற்றி அதன் உண்மையிலிருந்து பிறிதோர் உண்மையை பெறும் நெறியே" ஆகும்.

எடுப்பு வெளிப்பேறில் பின்வரும் ஏழு வகையான அனுமானங்கள் உள்ளன. அவை பற்றி பின்வருமாறு தனித்தனியே நோக்கலாம்.

### 2.1 மறுமாற்றம் ($S\bar{P}$)

மூல எடுப்பின் அடிப்படைக் கருத்து மாறாத வகையில் பயனிலையினை முரணாக்குவதன்மூலம் உட்கிடையானதோர் எடுப்பினை பெறும் நெறியே மறுமாற்றம் ஆகும்.

இங்கு நால்வகை எடுப்புக்களிற்கும் பின்வருமாறு மறுமாற்றம் செய்யப்படும்.

eg: A எடுப்பு

மலர்கள் எவையும் அழகானவை ஆகும். SOP

மலர்கள் எவையும் அழகற்றவை அல்ல. $SE\bar{P}$

இவை பின்வரும் விதிகளுக்கு அமைவாகவே பெறப்படவேண்டும். இல்லையேல் போலியாக அமையும்.

1. மூல எடுப்பின் பண்பு மாற்றப்படவேண்டும்.

   உதாரணம் : மலர்கள் எவையும் அழகானவை ஆகும்.
   மலர்கள் எவையும் அழகற்றவை அல்ல.

2. அளவு மாறக்கூடாது

   அதாவது நிறை எடுப்பிலிருந்து நிறை எடுப்பையும், குறை எடுப்பிலிருந்து குறை எடுப்பை மாத்திரமே அனுமானிக்கவேண்டும்.

3. மூல எடுப்பின் பயனிலை முரணாக்கப்படவேண்டும்.

   உதாரணம் : மலர்கள் சில அழகானவை ஆகும்.
   மலர்கள் சில அழகற்றவை அல்ல.

## 2.2. எதிர்மாற்றம் (PS)

மூல எடுப்பின் அடிப்படை கருத்து மாறாதவகையில் மூல எடுப்பின் எழுவாய்ப் பதத்தையும் பயனிலைப் பதத்தையும் முறையே பெறப்படும் எடுப்பில் பயனிலைப் பதமாகவும் எழுவாய்ப் பதமாகவும் இடம்மாற்றம் செய்வதன் மூலம் உட்கிடையான எடுப்பினை பெறுகின்ற நெறியாகும்.

இதனை மேற்கொள்கின்றபோது பின்வரும் விதிகள் அனுசரிக்கப்படவேண்டும்.

1. மூல எடுப்பின் பண்பில் மாற்றம் ஏற்படக்கூடாது.
2. மூல எடுப்பில் வியாப்தி அடையாத பதம் பெறப்பட்ட எடுப்பில் வியாப்தி அடையக்கூடாது.

இவ் விதிகளிற்கு அமைய நால்வகை எடுப்புக்களிற்கு எவ்வாறு எதிர்மாற்றம் செய்யப்படும் என்பதை பின்வருமாறு நோக்கலாம்.

A எடுப்பு

உதாரணம் : பசு அனைத்தும் புல் தின்பவை ஆகும். SaP

புல் தின்பவை சில பசு ஆகும். PIS

இவ்விரு விதிக்கமையவும் நிறைமறை எடுப்பிற்கும் நிறைமறை எடுப்பாகவும் குறைவிதி எடுப்பிற்கும் குறைவிதி எடுப்பாகவும் எதிர்மாற்றம் செய்யப்படுகிறது.

ஆனால் குறைமறை எடுப்பிற்கு வலிதான முறையில் எதிர்மாற்றம் மேற்கொள்ளமுடியாது. ஏனெனில் இவ் எடுப்பிற்கு எதிர்மாற்றம் செய்யும்போது ஒரு விதியை அனுசரிக்க மற்றைய விதி மீறுவதாக உள்ளது.

உதாரணம் : பசு சில புல் தின்பவை அல்ல.

புல் தின்பவை எவையும் பசு அல்ல.

இது பண்பில் மாற்றம் ஏற்படக்கூடாது என்ற விதிக்கமைய இவ் எடுப்பு பெறப்பட்டுள்ளது. ஆனால் இது வாய்ப்பற்றது. அதாவது மூல எடுப்பில் எழுவாயாக அமைந்த "பசு" என்ற எழுவாய்ப் பதம் வியாப்தி அடையவில்லை. ஆனால் பெறப்பட்ட எடுப்பில் பயனிலையாக அமைந்து வியாப்தி அடைந்துள்ளது. இவ்வாறு வியாப்தி பற்றிய விதியை அனுசரிக்க பண்பு பற்றிய விதி மீறுவதாக காணப்படும். எனவே குறைமறை எடுப்பிற்கு எதிர்மாற்றம் செய்யமுடியாது.

## 2.3. மறுமாற்ற எதிர்மாற்றம் ($P\bar{S}$)

மூல எடுப்பின் அடிப்படைக் கருத்து மாறாதவகையில் எழுவாயின் முரண்பாட்டை பயனிலையாக கொண்ட ஓர் உட்கிடையான எடுப்பினை பெறுகின்ற நெறியே மறுமாற்ற எதிர்மாற்றமாகும்.

இவ் அனுமானத்தை மேற்கொள்ள மூல எடுப்பை முதலில் எதிர்மாற்றம் செய்து பின்னர் அதனை மறுமாற்றம் செய்தல் வேண்டும்.

A எடுப்பு

மூல எடுப்பு : பாம்புகள் அனைத்தும் ஊர்வன அல்ல. SeP

எதிர்மாற்றம் : ஊர்வன சில பாம்புகள் ஆகும். PIS

மறுமாற்றம் : ஊர்வன சில பாம்பல்லாதன அல்ல. $PO\bar{S}$

O எடுப்பு

குறைமறை எடுப்பிற்கு வலிதான முறையில் எதிர்மாற்றம் மேற்கொள்ளமுடியாது (மேலே விளக்கப்பட்டுள்ளது)

## 2.4.எதிர் வைக்கை அல்லது மறுப்பு விதி எதிர்மாற்றம் ($\bar{P}$ S)

மூல எடுப்பின் அடிப்படைக் கருத்து மாறாதவகையில் பயனிலையில் முரண்பாட்டை எழுவாயாக கொண்ட பிறிதோர் எடுப்பை உட்கிடையாக பெறுகின்ற நெறியே ஆகும்.

இவ் அனுமானத்தினை மேற்கொள்கின்றபோது மூல எடுப்பினை முதலில் மறுமாற்றம் செய்து அதனை பின்னர் எதிர்மாற்றம் செய்தல் வேண்டும்.

A எடுப்பு

மூல எடுப்பு : அநீதியான சட்டங்கள் அனைத்தும் விலக்கப்படுவன ஆகும். SaP

மறுமாற்றம் : அநீதியான சட்டம் எவையும் விலக்கப்படாதன அல்ல. Se$\bar{P}$

எதிர்மாற்றம் : விலக்கப்படாதன எவையும் அநீதியான சட்டம் அல்ல. $\bar{P}$eS

## 2.5 மறுமாற்ற எதிர்வைப்பு ($\bar{P}$ $\bar{S}$)

மூல எடுப்பின் அடிப்படைக் கருத்து மாறாதவகையில் எழுவாயின் மறுப்பை பயனிலையாகவும், பயனிலையின் மறுப்பை எழுவாயாகவும் கொண்ட உட்கிடையான எடுப்பை பெறுகின்ற நெறியே ஆகும்.

இவ் அனுமானத்தை மேற்கொள்கின்றபோது மூல எடுப்பை முதலில் மறுமாற்றம் செய்து அதனை எதிர்மாற்றம் செய்து மீண்டும் மறுமாற்றம் செய்தல்வேண்டும்.

A எடுப்பு

மூல எடுப்பு : பறவைகள் எல்லாம் பறப்பன ஆகும் SaP

மறுமாற்றம் : பறவைகள் எவையும் பறக்காதன அல்ல. Se$\bar{P}$

எதிர்மாற்றம் : பறக்காதன எவையும் பறவைகள் அல்ல. $\bar{P}$e$\bar{S}$

மறுமாற்றம் : பறக்காதன எவையும் பறவைகள் அல்லாதன அல்ல. $\bar{P}$o$\bar{S}$

I எடுப்பு

மூல எடுப்பு : பறவைகள் சில பறப்பன ஆகும் SiP

மறுமாற்றம் : பறவைகள் சில பறக்காதன அல்ல. So$\bar{P}$

எதிர்மாற்றம் : _

## 2.6 நேர்மாற்றம் ($\bar{S}$ P)

மூல எடுப்பின் எழுவாயின் எதிர்மறையை எழுவாயாக கொண்ட வேறோர் மூல எடுப்பிலிருந்து பெறுதல் நேர்மாற்றம் எனவும் அழைக்கப்படும்.

இவ் அனுமானத்தை மேற்கொள்கின்றபோது நிறைவிதி எடுப்பிற்கு மறுமாற்றத்திலிருந்து ஆரம்பித்து ஐந்து தடவைகள் மாறிமாறி மேற்கொள்ளவேண்டும். நிறைமறை எடுப்பிற்கு எதிர்மாற்றத்திலிருந்து ஆரம்பித்து மாறிமாறி மூன்று தடவைகள் மேற்கொள்ளவேண்டும்.

A எடுப்பு

மூல எடுப்பு : உணவு அனைத்தும் சுவையானவை. SaP

மறுமாற்றம் : உணவு எவையும் சுவையற்றவை அல்ல. $Se\bar{P}$

எதிர்மாற்றம் : சுவையற்றவை எவையும் உணவு அல்ல. $\bar{P}eS$

மறுமாற்றம் : சுவையற்றவை எவையும் உணவு அல்லாதவை ஆகும். $\bar{P}a\bar{S}$

எதிர்மாற்றம் : உணவு அல்லாதன சில சுவையற்றவை ஆகும். $\bar{S}i\bar{P}$

மறுமாற்றம் : உணவு இல்லாதவை சில சுவையானவை அல்ல. $\bar{S}oP$

இங்கு இரு சந்தர்ப்பங்களிலும் பெற்ற இறுதியில் உள்ள எடுப்பே நமக்கு வேண்டிய நேர்மாறு ஆகும்.

## 2.7. மறுமாற்ற நேர்மாற்றம் ($\bar{S}$ $\bar{P}$)

மூல எடுப்பின் அடிப்படைக் கருத்து மாறாதவகையில் எழுவாயின் முரண்பாட்டை எழுவாயாகவும், பயனிலையின் முரண்பாட்டை பயனிலையாகவும் கொண்ட ஓர் உட்கிடையான எடுப்பினை பெறுகின்ற நெறியாகும்.

இவ் அனுமானத்தை மேற்கொள்ள நேர்மாற்றம் செய்யப்பட்ட எடுப்பை மீள ஒரு தடவை மறுமாற்றம் செய்தல்வேண்டும்.

A எடுப்பு

மூல எடுப்பு : மனிதர் எவரும் மனிதம் உடையவர் SaP

மறுமாற்றம் : மனிதர் எவரும் மனிதமற்றவர் அல்லர் $Se\bar{P}$

எதிர்மாற்றம் : மனிதமற்றவர் எவரும் மனிதர் அல்லர் $\bar{P}eS$

மறுமாற்றம் : மனிதமற்றவர் எவரும் மனிதர் அல்லாதவர் ஆவர். $\bar{P}a\bar{S}$

எதிர்மாற்றம் : மனிதர் அல்லாதவர் சிலர் மனிதமற்றவர் ஆவர். $\bar{S}i\bar{P}$

மறுமாற்றம் : மனிதர் அல்லாதவர் சிலர் மனிதம் உடையவர் அல்லர். $\bar{S}oP$

மறுமாற்றம் : மனிதர் அல்லாதவர் சிலர் மனிதமற்றவர். $\bar{S}i\bar{P}$

இவ்வாறு எடுப்பு வெளிப்பேற்றில் பாரம்பரிய அளவையியலாளர்களால் காட்டப்பட்ட எடுப்பு வெளிப்பேறு அனுமானங்களின் சகல வடிவங்களையும் பின்வரும் அட்டவணையின்மூலம் காட்டலாம்.

| எடுப்புக்கள் | A | E | I | O |
|---|---|---|---|---|
| மறுமாற்றம் | $Se\bar{P}$ | $Sa\bar{P}$ | $So\bar{P}$ | $Si\bar{P}$ |
| எதிர்மாற்றம் | PiS | PeS | PiS | - |
| மறுமாற்ற எதிர்மாற்றம் | $Po\bar{S}$ | $Pa\bar{S}$ | $Po\bar{S}$ | - |
| எதிர்வைக்கை | $\bar{P}eS$ | $\bar{P}iS$ | - | - |
| மறுமாற்ற எதிர்வைப்பு | $\bar{P}a\bar{S}$ | $\bar{P}o\bar{S}$ | - | $\bar{P}i\bar{S}$ |
| நேர்மாற்றம் | SaP | $\bar{S}iP$ | - | - |
| மறுமாற்ற நேர்மாற்றம் | $\bar{S}i\bar{P}$ | $\bar{S}o\bar{P}$ | - | - |

பாரம்பரிய அளவையியலாளர்களால் மேற்குறித்த இருபது வெளிப்பேறு அனுமானங்கள் வலிதானதாக காட்டப்பட்டுள்ளது. ஆனால் நவீன அளவையியலாளர்களின் கருத்தின்படி கட்டமிடப்பட்டுள்ள பகுதிகளை தவிர எஞ்சியுள்ள பன்னிரண்டு வடிவங்களே வலிதானதாக உள்ளது. கட்டமிடப்பட்ட எட்டு வடிவங்களும் நவீன அளவையியலாளர்களின் கருத்துப்படி வாய்ப்பற்ற வடிவமாகும்.

- அனுமானம்
  - உய்த்தறி அனுமானம்
    - எடுப்பு முரண்பாடு
      - எதிர்மறை
      - மறுதலை
      - வழிப்பேறு
        - கீழ்த்திசைத் தொடர்பு
        - மேல்த்திசைத் தொடர்பு
      - உபமறுதலை
    - எடுப்பு வெளிப்பேறு
      - மறுமாற்றம்
      - எதிர்மாற்றம்
      - மறுமாற்ற எதிர்மாற்றம்
      - எதிர்வைக்கை
      - மறுமாற்ற எதிர்வைக்கை
      - நேர்மாற்றம்
      - மறுமாற்ற நேர் மாற்றம்
  - தொகுத்தறி அனுமானம்

நிறைவுரை

உய்த்தறி அனுமானத்தில் பிரதானமாக காணப்படும் உடன் அனுமானம் என்பது ஒரு தனியெடுப்பின் உட்கிடைகளை வெளிப்படுத்துவதாகும். இது உடனடியாக நிகழ்வதென்பதற்கு, தரப்பட்ட எடுப்பை தவிர்த்துப் பிற தரவுகள் எவையும் வேண்டியது என்பது பொருளேயன்றி இந்நெறிக்கு சிந்தனையெதுவும் வேண்டியதில்லை என்பது பொருளாகாது. எனவே உடன் அனுமானங்களை ஒன்றுக்கு மேற்பட்ட எடுப்புத் தொகுதிகளிலிருந்து முடிவு பெறப்படும் ஊடக அனுமானங்களிலிருந்து பிரித்தறியப்படுகின்றது என்ற ரீதியில் விளக்க அனுமானங்கள் எனவும் குறிப்பிடலாம்.

உடன் அனுமானங்களில் புதிய உண்மைகள் எதுவும் பெறப்படுவதில்லை என்பதால் அவற்றை அனுமானம் என கொள்ளலாமா எனும் சந்தேகம் எழுவதுண்டு. ஆனால் மூல எடுப்பில் உட்கிடைகளை இவ் அனுமானம் வெளிக்கொணர்வதால் இவ் ஐயப்பாடு பொருத்தமற்றது. எனவே இவ் உடன் அனுமானம் மூல எடுப்பின் உட்கிடையேயாகும்.

உசாத்துணை நூல்கள் :

இடைநிலை அளவையியல்

அளவையியலும் விஞ்ஞான முறையும் II

**ந. றட்ணவேணு**

**கலைப்பிரிவு**

# புதிய கம்பனிச் சட்டமும் பிரதான மாற்றங்களும்

இலங்கையில் 2007ம் ஆண்டின் 7ம் இலக்க கம்பனிகள் சட்டம் புதிய கம்பனிகள் சட்டமாக கொண்டுவரப்பட்டதனை தொடர்ந்து இதுவரை காலமும் இருந்துவந்த 1982ம் ஆண்டின் 17ம் இலக்க கம்பனிகள் சட்டம் நீக்கப்பட்டுள்ளது. இக் குறிப்பின் நோக்கம் புதிய கம்பனிச் சட்டம் பற்றியும் இச் சட்டம் கம்பனிகள் மீது ஏற்படுத்தும் மாற்றங்கள், புதிய சட்டத்தின் நன்மைகள் பற்றியும் விளக்குவதாகும்.

இலங்கையில் இன்றும் குறிப்பிட்ட சில விடயங்களுக்கு ஆங்கிலேயச் சட்டங்களை பயன்படுத்தப்படுகின்றன. (உதாரணமாக பங்குடமை கட்டளைச் சட்டம்) இதுவரை காலமும் அமுலில் இருந்த 1982ம் ஆண்டின் 17ம் இலக்க கம்பனிச் சட்டமானது 1948ம் ஆண்டின் ஆங்கிலேயச் சட்டத்தினை அடிப்படையாகக் கொண்டே தயாரிக்கப்பட்டிருந்தது. எனவே மரபுவழியான கம்பனிச் சட்டத்திற்கு பதிலாக எமது நாட்டின் தேவைக்கேற்ப புதிய கம்பனிச் சட்டமானது கொண்டுவர வேண்டுமென 1994ல் தீர்மானிக்கப்பட்டது. 1993ல் நியூசிலாந்தில் கொண்டுவரப்பட்ட புதிய கம்பனிச் சட்டமானது தற்காலத்திற்கேற்றவாறு அமைந்திருந்தது. ஐக்கிய இராச்சியம் 2000ம் ஆண்டு கனடாவின் கம்பனிச் சட்டத்தினை மாதிரியாகக் கொண்டு புதிய கம்பனிச் சட்டத்தினைக் கொண்டு வந்தது. கனடாவின் கம்பனிச் சட்டம் அமெரிக்க கம்பனிச் சட்டத்தினையும் ஆங்கிலேய கம்பனிச் சட்டத்தினையும் ஒத்திருந்தது. இவற்றை கருத்திற்கொண்டு இலங்கையிலும் வியாபார மற்றும் வர்த்தக அமைச்சினால் 2006 ஒக்டோபர் 20ல் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டது. புதிய கம்பனிச் சட்டம் 2007 மே 3 இலிருந்து அமுல்படுத்தப்பட்டது.

### புதிய கம்பனிச் சட்டத்தின் மூலம் அறிமுகம் செய்யப்பட்டுள்ள மாற்றங்கள்

1. கம்பனியின் உருவாக்கம் இலகுபடுத்தப்பட்டுள்ளது. பதிவுசெய்வதற்கு சமர்ப்பிக்கவேண்டிய ஆவணங்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது. எனவே குறைந்த செலவிலும் இலகுவிலும் உருவாக்கிக் கொள்ளமுடியும்.
2. மக்கள் கம்பனி நீக்கப்பட்டுள்ளது. இதற்கு காரணம் சிறிய பங்குதாரர்களை அதிகளவில் கம்பனியின் பங்குதாரர்களாகச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்ற மக்கள் கம்பனியின் அடிப்படை நோக்கம் தோல்வி அடைந்தமையே ஆகும். எனவே இதுவரை இயங்கிவந்த மக்கள் கம்பனிகள் புதிய சட்டத்திற்கமைய வரையறுத்த கம்பனியாகக் கருதப்படும்.
3. அமைப்பு புறவிதி என்ற ஆவணம் நீக்கப்பட்டுள்ளது. எனவே புதிய சட்டத்திற்கமைய கம்பனிகள் புறவிதி என்ற ஆவணத்தை தயாரிக்க வேண்டியதில்லை. ஏற்கனவே செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற கம்பனிகளது புறவிதிகள் அகவிதிகள் ஓர் பகுதியாகவே கருதப்படல் வேண்டும். கம்பனிப் பதிவுக்காக கம்பனிப் பதிவாளருக்கு அகவிதியை மட்டும் சமர்ப்பிக்கமுடியும்.

4. கம்பனி இலத்திரனியல் ஆவணங்களைப் பேணமுடியும்.
5. ஒற்றைப் பங்குதாரர் கம்பனி என்ற புதியவகை கம்பனி அறிமுகம் செய்யப் பட்டுள்ளது. புதிய சட்டத்திற்கமைய தனிப்பட்ட நபர், சட்ட ஆளுமையுடைய நிறுவனங்கள், திறைசேரியின் செயலாளர் ஆகிய மூன்று சாரார் ஒற்றைப் பங்குதாரராக இருக்கமுடியும்.
6. தனியார் கம்பனிகளின் கணக்குகளைக் கம்பனிகள் பதிவாளர் கோரியிருந்தால் மட்டும் சமர்ப்பிக்கவேண்டியிருத்தல்.
7. நீதிமன்றக் கட்டளையின்றி விசேட தீர்மானத்தின் மூலம் கம்பனிகளை ஒன்றிணைக்கமுடிதல்.
8. பங்குகளுக்கு முகப்பெறுமதி அல்லது பெயரளவுப் பெறுமானம் என்பது கிடையாது. கம்பனி விரும்பிய விலையில் பங்குகளை வழங்கமுடியும்.
9. இயக்குனர் கடமைகளும் பொறுப்புக்களும் தெளிவாக வரையறுத்திருத்தல்.
10. பொதுக் கம்பனியொன்றைத் தனியார் கம்பனியாக மாற்றியமைக்கக் கூடிய வசதிகளை உருவாக்கியிருத்தல்.
11. கம்பனி பங்கு வழங்கல்மூலம் பெற்றுக்கொள்ளும் தொகை "Stated capital" என அழைக்கப்படும். பழைய கம்பனிச் சட்டத்தில் காணப்பட்ட அனுமதித்த மூலதனம், வழங்கிய மூலதனம், செலுத்தப்பட்ட மூலதனம் போன்ற வகைகள் நீக்கப்பட்டுள்ளது.
12. தேசிய நலன் கருதி தனியார் கம்பனியைப் பொதுக்கம்பனியாக மாற்றுவதற்கான கம்பனிகள் பதிவாளருக்கிருந்த அதிகாரத்தை நீக்குதல்.
13. கம்பனிப் பிணக்குகள் சபை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
14. கம்பனி குறிப்பிட்ட செயற்பாடுகளை மேற்கொள்ளமுன்னர் கடன் தீர்க்கும் பரிசோதனையை மேற்கொள்ளுதல் அவசியமானது.
15. கம்பனி தமது பங்குகளை தானே கொள்வனவு செய்யமுடியும்.
16. பங்குதாரர் எண்ணிக்கை

| | 1882, 17ம் இலக்க சட்டம் (பழையது) | 2007, 7ம் இலக்க சட்டம் (புதியது) |
|---|---|---|
| சொந்தக் கம்பனி | 2 - 50 | 01 - 50 |
| பொதுக் கம்பனி | 7 - ∞ | 01 - ∞ |
| மக்கள் கம்பனி | 50 - ∞ | இல்லை |
| வரையறுக்கப்படாத கம்பனி | 7 - ∞ | 01 - ∞ |
| உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனி | 7 - ∞ | 02 - ∞ |

17. பதிவுக் கட்டணமும் பதிவுக் காரியாலயமும்

| | 1982, 17ம் இலக்க சட்டம் | 2007, 7ம் இலக்க புதிய சட்டம் |
|---|---|---|
| கட்டணம் : | அனுமதித்த மூலதனத்திற்கமைய வேறுபடும். | எல்லாக் கம்பனிகளுக்கும் 8500 ரூபா |
| பதிவுக் : காரியாலயம் | கம்பனிப் பதிவாளரிடம் அல்லது அந்தந்த மாவட்ட செயலகத்தில் | கம்பனிப் பதிவாளரிடம் அல்லது ஏதேனும் மாவட்ட செயலகத்தில் |

18. பெயருடன் சேரும் பதம்

| | 1982, 17ம் இலக்க (பழைய) சட்டம் | 2007, 7ம் இலக்க புதிய சட்டம் |
|---|---|---|
| சொந்தக் கம்பனி | PVT | PVT |
| பொதுக் கம்பனி | Ltd | Ltd |
| உத்தரவாதத்தில் வரையறுக்கப்பட்ட கம்பனி | GTE Ltd | GTE Ltd |
| விலை கூறப்பட்ட கம்பனி | Ltd | Public Ltd (PL) |

19. கூட்டங்கள்

| 1982, 17ம் இலக்க சட்டம் | 2007, 7ம் இலக்க புதிய சட்டம் |
|---|---|
| சட்டமுறைக் கூட்டம் (பொதுக்கம்பனி) | அவ்வாறு ஒன்று இல்லை. |
| ஆண்டுப் பொதுக்கூட்டம் (அனைத்துக் கம்பனிகளும்) | அவசியமில்லை. விரும்பினால் கூட்டமுடியும் |
| விசேட கூட்டம் விரும்பினால் கூட்டமுடியும். | இல்லை. |

20. தீர்மானம் எடுத்தல்

| 1982, 17ம் இலக்க (பழைய) சட்டம் | 2007, 7ம் இலக்க புதிய சட்டம் |
|---|---|
| சொந்தக் கம்பனி 14 நாள் பொதுக்கம்பனி 21 நாள் முன்னறிவித்தலுடன் விடேச தீர்மானம் எடுக்கலாம். | சொந்த, பொதுக் கம்பனிகள் இரண்டும் 14 நாள் முன்னறிவித்தலுடன் விசேட தீர்மானம் எடுக்கலாம். |

21. 2007, 7ம் இலக்க புதிய கம்பனிச் சட்டத்திற்கமைவாக ஒரு தனியாள் கம்பனிப் பதிவாளருக்கு கம்பனிப் பதிவுக்காகப் பின்வருவனவற்றை சமர்ப்பிக்கமுடியும்.
   கம்பனியின் பெயர்
   கம்பனியின் முகவரி
   இயக்குனர்களின் சம்மதம்
   கம்பனிக்குரிய காரியதரிசியின் சம்மதம்

22. அகவிதி

அகவிதியானது ஆரம்பப் பங்காளர் ஒப்பமிட்டு கம்பனிப் பதிவாளருக்கு அனுப்பிவைக்க வேண்டிய முக்கியமான ஆவணமாகும். அகவிதியில் அடங்கும் முக்கியமான அம்சங்கள்.

   கம்பனியின் நோக்கம்
   கம்பனிப் பங்குதாரருடைய உரிமைகளும் கடமைகளும்
   கம்பனி முகாமைத்துவமும் நிர்வாகவும்

2007ம் ஆண்டு, 7ம் இலக்க புதிய கம்பனிகள் சட்டத்தின்மூலம் மேற்சொன்ன மாற்றங்கள் போன்று பல மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்ட போதிலும் மேற்கூறப்பட்டவற்றை பிரதான மாற்றங்களாகக் கூறமுடியும். இப் புதிய கம்பனிச் சட்டத்தின் அடிப்படையில் தற்போது இயங்கிவரும் சகல கம்பனிகளும் புதிய கம்பனிச் சட்டம் செயற்பாட்டிற்கு வந்த திகதியிலிருந்து 12 மாத காலத்தினுள் புதிய கம்பனிச் சட்டத்தின் கீழ் மீளப்பதிவு செய்யப்படல் வேண்டும். இதன்போது புதிய உருவாக்கல் பத்திரம் வழங்கப்படும்.

# மறக்கமுடியவில்லை

வெள்ளைக் கொக்குகளாய்
நடந்து திரிந்த
கல்லூரிச்சாலை
என்றுமே
மறக்கமுடியவில்லை

பரல்கள் மீதேறி
பாடிய பாடல்கள்
என்றும்
மறக்கமுடியவில்லை

நண்பருடன்
நடமாடி
மகிழ்ந்த நாட்கள்
என்றும்
மறக்கமுடியவில்லை

அன்புடன் அரவணைக்கும்
ஆசான்களை
என்றும்
மறக்கமுடியவில்லை

என்றென்றும் - எம்
கல்லூரிக்காலம்
அதை
மறக்கமுடியவில்லை.

**ர. ரஞ்சித்**

## சந்தைப்படுத்தல் எண்ணக்கருக்கள்

| | | |
|---|---|---|
| 1. | உற்பத்திச்செயல் எண்ணக்கரு | Production concept |
| 2. | உற்பத்தி எண்ணக்கரு | Product concept |
| 3. | விற்பனை எண்ணக்கரு | Selling concept |
| 4. | சந்தைப்படுத்தல் எண்ணக்கரு | Marketing concept |
| 5. | வாடிக்கையாளர் எண்ணக்கரு | Customer concept |
| 6. | சமூகச் சந்தைப்படுத்தல் | Societal marketing concept |

# வரலாறு சொல்லும் நம் நினைவுகளை

ஓடும் நதியின் நண்பர்கள் நாங்கள்
ஓடிக் கொண்டிருப்போம்
ஒதுங்கியிருக்க மாட்டோம் - ஓயமாட்டோம்.

நிகழ்வுகளைத் திருப்பிப் பாருங்கள்
இந்த வாழ்க்கை கற்றுத்தந்ததென்ன
இந்த உலகம் நமக்கு சொன்னதுதானென்ன
ஒதுங்கியிருந்தால் நாங்கள்
ஒதுக்கப்பட்டவர்களாகிவிடுவோம் - ஓடிக்கொண்டேயிருப்போம்.

நாம் செல்லும் பாதையில் பல முட்கள் இருக்கும்
திரும்பி சென்றுவிடமாட்டோம் - அதை
கடந்து சென்றுவிடவும் மாட்டோம் - அதை
களைந்துவிட்டு கடந்து செல்வோம்
எம்வழியில் எவரும் வரலாம் தடைகள் இருக்காது
தத்துவங்கள் தான் இருக்கும்
அவைதான் நாங்கள் கற்றுக்கொண்ட பாடம்.

எமது உணர்வுகளும் உருக்குலைக்கப்படுவதாய் இருந்தது
நாங்கள் உருக்குலையவில்லை
எமது கனவுகளும் கலைக்கப்படுவதாய் இருந்தது
நாங்கள் கலங்கிவிடவில்லை
எமது சிந்தனைகள் சிதைக்கப்படுவதாய் இருந்தது
நாங்கள் சிதைந்துவிடவும் இல்லை

எல்லாம் எதற்காக
காலத்தின் தேவையறிந்து - எம்மை
கலக்கமடையச் செய்வதற்காக
புரிந்துவிட்டும் புரியாமலிருந்தோம்
எமது வாழ்க்கை நீள்தூரப் பயணத்திற்காக

தடைகள் எவ்விதம் வந்தாலும்
தகர்த்து எறிந்து செல்வோம்
சற்றுப் பொறுத்திருங்கள் - பொறுத்திருந்து
சரித்திரம் தட்டிப் பாருங்கள்
வரலாறு சொல்லும் நம்மை சித்தரித்து.

ம. அனல்றெஜி

**2008 Arts**

ஹாட்லியின் சமூக விஞ்ஞான மன்ற வெளியீடான
“வழி” சஞ்சிகைக்கு வாழ்த்துத் தெரிவிப்பதில் மிக்க
மகிழ்வடைகின்றோம்.

# கேசவன் சில்க்

சாவகச்சேரி வீதி, மந்திகை.



விலையில் மலிவு
தெரிவில் நிறைவு
தரம்மிக்க வர்ண வண்ண
ஜவுளித்துணி வகைகள்
உங்களுக்குத் தேவையான
சேட்டிங் சூட்டிங் ஸ்கேட்
பிளவுஸ் சல்வார்க்கமிஸ்
சாரம் வேட்டிகள்
மற்றும் அனைத்துவிதமான
பட்டுப்புடவை
வகைகளையும்



பெற்றுக்கொள்ள நாடவேண்டிய சிறந்த இடம்

# கேசவன் சில்க்

சாவகச்சேரி வீதி, மந்திகை.

T.P. 021 226 4442

கிளை நிறுவனம் : **கேசவன் சில்க்**

மத்திய சந்தை, நெல்லியடி.

T.P. 0776681525

“வழி” வருடம்தோறும் வழிவிட வாழ்த்துக்கள்

## New S.P.M. ஓவ்(f)செற் பிறிண்ரேர்ஸ்

திருமண விழா, பூப்புனித நீராட்டுவிழா, கோவில்
விளம்பரங்கள், ஆய்வுக் கட்டுரைகள், நினைவு மலர்கள்
போன்ற சகலவிதமான அச்சுப் பதிப்பு வேலைகளும்
நவீன முறையில் கணனி மூலம்
வடிவமைப்புச் செய்து பெற்றுக்கொள்ள





## நியூ எஸ். பி. எம். பதிப்பகம்


வி. எம். றோட், பருத்தித்துறை

**T.P. : 060 221 2675**

---

“வழி” என்றும் தனது பணியை முன்னெடுக்க
எமது நல்வாழ்த்துக்கள்

சகலவிதமான கட்டிடப் பொருட்கள்,
சீமெந்து, பெயின்ற் வகைகள், மின் உபகரணங்கள்,
எஸ்லோன் பொருட்கள், கம்பி வகைகள்
மற்றும்
பொருட்களினதும் விநியோகஸ்தர்





## குமரேஷ் விற்பனை நிலையம்

16, பஸ்நிலையம், பருத்தித்துறை.

**T.P. : 021 226 3171**

ஹாட்லிக் கல்லூரியின சமூக விஞ்ஞான மன்றத்தினரின் வெளியீடான
"வழி" சஞ்சிகைக்கு வாழ்த்துக்கள் தெரிவிப்பதில்
மகிழ்வடைகின்றோம்.

சகலவிதமான பலசரக்குப் பொருட்களையும்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய சிறந்த இடம்

# அம்பாள் ஸ்ரோர்ஸ்

பிரதான வீதி, பருத்தித்துறை.

---

ஹாட்லியின் "வழி" வருடம்தோறும் வெளிவர
இறையாசி வேண்டி நிற்கின்றோம்.

போட்டோப் பிரதியாக்கம் (கலரிங்), கொம்பியூட்டர்
பிறிண்டிங், பத்திரிகைகள், புத்தகங்கள், பாடசாலை
உபகரணங்கள், சஞ்சிகைகள் போன்றவற்றை நியாயமான
விலையிலும் உடனுக்குடன் விரைவாகப் பெறவும்
சிறந்த இடம்



# கனன் போட்டோ



பிரதான வீதி, பருத்தித்துறை.

ஹாட்லியின் "வழி"க்கு வாழ்த்து
தெரிவிப்பதில்
மனநிறைவடைகின்றோம்.
நியூ சுசில் ரெக்ஸ்
தரம்மிக்க சிறுவர் சிறுமிகளிற்கான
ஆடைகள், சாரம், வேட்டிகள்
மற்றும் சாறிவகைகள், ஸ்கேட்,
பிறவுஸ் வகைகள்
அனைத்திற்கும் நாடவேண்டிய

ஸ்தாபனம்
NEW SUSIL TEX
பிரதான வீதி, பருத்தித்துறை.

"வழி" வாழ எமது வாழ்த்துக்கள்
குறைந்த கட்டணத்தில் உள்நாட்டு,
வெளிநாட்டு, இன்ரநெற் தொலைபேசி
அழைப்புகளைப் பெறவும்
மற்றும் ஆங்கில தட்டச்சு வேலைகள்,
கணனி அச்சுப்பிரதிகள்,
படிவங்கள் நிரப்புதல், விற்பனைச்
சேவைகள் உட்பட மேலும்
உங்கள் தேவைகளிற்கு
எங்களின் ஒத்துழைப்பை பெற
நாடவேண்டிய இடம்

அருணா

தொலைத்தொடர்பகம்
ஹாட்லி விடுதி வீதி, பருத்தித்துறை.
T.P. 021 226 3795

## விலையிடல் முறைகள்

| | | |
|---|---|---|
| 1. | கிரயத்துடன் எதிர்பார்த்த இலாப அளவைச் சேர்த்துக்கொள்ளும் விலையிடல் முறை | markup pricing |
| 2. | இலக்குச் சம்பாத்தியத்திற்கான விடையிடல் முறை | Target - Return pricing |
| 3. | எதிர்பார்த்த பெறுமதி – விலையிடல் முறை | Perceived - Value pricing |
| 4. | பெறுமதிக்கு விலையிடல் முறை | Value pricing |
| 5. | நிலவும் விலை முறை | Going - Rate pricing |
| 6. | ஏல விலை முறை | Auction - Type pricing |
| 7. | சமூக விலை முறை | Group pricing |

# நாயக்கர்கால பொதுமக்கள் சார்பான இலக்கியப் போக்கு

நாயக்கர் காலத்தில் மற்றைய காலங்களிலும்பார்க்க பொதுமக்கள் சார்பான இலக்கியப் போக்கு எழுச்சிபெற்றதனை அவதானிக்கமுடிகிறது. இதற்கான காரணங்களை மேல்வருமாறு வகைப்படுத்தி நோக்கலாம். இக்கால புலவர்கள்,

1) தம்முடைய வாழ்விலே பசிக்கும் பட்டினிக்கும் அறிந்தோ அறியாமலோ காரணமாகிவிட்ட இவர்கள் அரசர்கள் மீதுள்ள கோபத்தால் தாம் பாடிய இலக்கியங்களில் சாதாரண பொதுமக்களை பாட்டுடைத் தலைவர்களாக்கினர்.
2) தாம் பசியாலும் பட்டினியாலும் வாடியபோது தமக்கு உணவும் ஆறுதலும் தந்த உழவர் குடிக்கு செலுத்துகின்ற நன்றிக்கடனாக "முக்கூடற்பள்ளு" போன்ற பள்ளுப் பிரபந்தங்களை பாடினார்கள்.
3) வாழ்வில் விரக்தியும் சலிப்பும் அடைந்திருந்தபோது வாழ்க்கைக்கு நம்பிக்கை யினை ஊட்டிய குறவர்களுக்கு செலுத்துகின்ற நன்றிக்கடனாக "திருக்குற்றாலக் குறவஞ்சி" போன்ற குறவஞ்சிப் பிரபந்தங்களை பாடினார்கள்.
4) சாதாரண அடிநிலை மக்களிடையே காணப்பட்ட மூட நம்பிக்கைகளை களைந் தெறியும் நோக்குடன் பொதுமக்கள் சார்பான இலக்கியங்களைப் படைத்தார்கள்.
5) பேதங்களை ஒழித்து எல்லோரையும் சமத்துவமாக வாழவைப்பதற்காக ஊக்கி யாக இந்த இலக்கியங்களைப் படைத்தனர்.

பொதுமக்கள் சார்பான இலக்கியம் சாதாரண அடிநிலை மக்களின் வாழ்க்கைப் பண்பையும், வாழ்வியல் நம்பிக்கைகளையும் பழக்கவழக்கங்களையும் உள்ளது உள்ளபடி இரசனை தூண்ட கூறுவதாகும். இந்தவகையில் நாயக்கர் காலத்தில் முக்கூடற்பள்ளு, திருக்குற்றாலக் குறவஞ்சி, நொண்டி நாடகம், சித்தர் பாடல்கள் தோன்றின.

1) முக்கூடற் பள்ளு

சித்திராநதி, பொருணைநதி, கோதண்டராமநதி ஆகிய நதிகளுக்கு அருகிலே உள்ள பிரதேசம் முக்கூடல் ஆகும். இங்குள்ள முக்கூடல் நாதரை பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பட்ட இலக்கியமே "முக்கூடற்பள்ளு" ஆகும். இந்த இலக்கியத்திலே "பண்ணையார், குடியானவன், மூத்த மனைவி, இளைய மனைவி" ஆகியோரே பாத்திரங்கள் ஆவார். இந்த உயிரோட்டமான பாத்திரங்களைக் கொண்ட இதன் கதைப்போக்கை பின்வருமாறு நோக்கலாம்.

பண்ணையாரின் தோட்டத்திலே குடியானவன் வேலை செய்கின்றான். இக் குடியானவனுக்கு 2 மனைவி உண்டு. ஆனால் அவன் தனது மூத்த மனைவியை விட இளைய மனைவியிலே அதிக நாட்டம் கொள்ளுகின்றான். இதனை மூத்த மனைவியானவள் பண்ணையாரிடம் முறையிடுகின்றாள். இதைக்கேட்ட பண்ணையார் குடியானவனை அழைத்து ஆலோசனை வழங்குதல். ஆனால் குடியானவனோ அதனை செவிமடுக்காது மீண்டும் இளைய மனைவி மீதே அதிக காதல்

கொள்ளுகிறான். மூத்த மனைவியோ மீண்டும் பண்ணையாரிடம் முறையிட பண்ணையார் குடியானவனை தொழுவத்திலே கட்டி துன்புறுத்துகிறார். இதைக் கண்டு மனம் இரங்கி குடியானவனை விடுவிக்கக் கோரி நிற்க பண்ணையார் குடியானவனை அவிழ்த்துவிடுதல். சிறிது நாட்களின் பின் குடியானவன் மாடுமுட்டி அவதிப்படுகின்றான். ஆனால் குடியானவன் நெல்லிலும் அதிக பங்கை கொடுக்கிறான். இதையறிந்து மூத்தமனைவி இளையமனைவியுடன் ஏச்சுப்படுதல். பின்பு இறுதியில் இருவரும் உண்மைநிலை தெரிந்து கணவனை வணங்குதல்.

முக்கூடற் பள்ளானது சிறந்த ஓசை நயம்மிக்க பாடலினால் அமைக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக,

"சேற்று நண்டு சேற்றுவளை ஏற்றடிக்குதே
மழை தேடியொரு கோடிவானம் பாடியாடுதே"

என்ற பாடலடிகளை குறிப்பிடலாம். முக்கூடற்பள்ளானது நாடகப் பண்பு, இசைநயமும், சிருங்காரத் தன்மையும் மிகுந்ததாக விளங்குவதை காணமுடிகிறது.

2) திருக்குற்றாலக் குறவஞ்சி

திருக்குற்றால நாதரை பாட்டுடைத் தலைவராகக் கொண்டு தலைவன், தலைவி, குறவன், குறத்தி ஆகியோரை பாத்திரமாக கொண்டு படைக்கப்பட்ட இலக்கியமாகும். இதன் கதைப் போக்கைப் பின்வருமாறு நோக்கலாம்.

ஆரம்பத்தில் தலைவன் வீதியுலா வருதல். இவ் வீதியுலா வரும் தலைவனைக் கண்டு தலைவியானவள் அவன்மீது காதல் கொள்ளுதல். தலைவியானவள் விரகதாபத்தால் வருந்தல். குறத்தியானவள் தலைவிக்கு குறி சொல்லுதல். குறத்தி கூறிய குறியால் மனமகிழ்ந்து தலைவியானவள் குறத்திக்கு ஆடை, அணிகலன்களை வழங்குதல். பின்னர் குறவனும் குறத்தியும் சோலையில் சந்தித்து உறவாடல். பின்னர் இருவரும் நமக்கு வாழ்வு அளித்த இறைவனை வணங்குதல்.

இத் திருக்குற்றாலக் குறவஞ்சியில் சிருங்காரச் சுவையும், இசைப் பண்பும், நகைச்சுவையும் கூடியதாக பாடப்பட்ட இலக்கியமாகும்.

3) சித்தர் பாடல்கள் :

நாயக்கர் காலத்தில் எழுந்த பொதுமக்கள் சார்பான இலக்கியங்களில் சித்தர் பாடல்களும் குறிப்பிடத்தக்கது. இலக்கிய வரலாற்று நிலை நின்று நோக்கும்போது அறிவியல் பூர்வமான சிந்தனைகள் இவர்களில் அதிகம் தொனிப்பதை அவதானிக்கமுடிகிறது. "தேரையார்" போன்ற சித்தர்கள் மருத்துவ அறிவியல் செய்திகளை தம்முடைய பாடல்களில் அதிகம் வெளிப்படுத்தியிருந்தனர். இந்த சித்தர்களுடைய பாடல்கள் இறை நம்பிக்கைக்கு எதிரான குரலினை உடையனவாக இருந்தது. எடுத்துக்காட்டாக "குதம்பைச் சித்தரின்",

"தாவாரம் இல்லை தனக்கொரு வீடு இல்லை
தேவாரம் ஏதுக்கடி - குதம்பாய்
தேவாரம் ஏதுக்கடி"

என்ற பாடல் முக்கியமானது.

சில இடங்களில் இறை நம்பிக்கையிருந்தாலும் கோயிற் பண்பாட்டினை அவர்கள் நிராகரித்தனர்.

"நட்டகல்லும் பேசுமோ நாதனுள் இருக்கையில்"

என அதை வெளிப்படுத்தினார்கள்.

மூடநம்பிக்கைகளுக்கும் சாதி வேறுபாடுகளுக்கும் எதிராகவும் குரல் ஒலித்தது. எடுத்துக்காட்டாக,

"பறைச்சியாவது ஏதடா பணத்தியாவது ஏதடா
இறைச்சிதோல் எலும்பிலும் இலக்கமிட்டுருக்குதோ"

என்ற பாடலை குறிப்பிடலாம்.

இக் காலப்பகுதியில் பொதுமக்கள் சார்பான இலக்கிய வடிவமாகவும் பள்ளு, குறவஞ்சி வடிவங்களும், செய்யுள் வடிவமாக சிந்து, கண்ணி என்பனவும் பயன்பட்டன. பொதுமக்கள் சார்பான இலக்கியங்களில் தெலுங்கு, மணிப்பிரவாளம் போன்ற பேச்சுமொழி என்பவற்றையும் காணமுடிகிறது.

*J. Thushanthan*

*2008 Arts*

**தன் வேலையை, அது எந்த வேலையாயினும் சரி மனச்சான்றுக்கேற்ப ஆற்றுபவன் ஒருவகையில் எப்பொழுதுமே ஒரு சிறந்த மனிதனாய் இருப்பான்.**

**– டைனா மரியா கிரெய்க்**

**நீ விரும்புவது போல் உன்னை நீயே திருத்தி அமைத்துக்கொள்ள இயலாவிடின் முழுதும் உன் விருப்பத்திற்கு ஏற்றபடி இருக்க வேண்டுமென்று எப்படி எதிர்பார்க்கமுடியும்?**

**– தாமஸ் ஏ கெம்பிஸ்**

**ஒவ்வோர் ஆண்டும் ஒரு தீய பழக்கத்தை வேரோடு களைவது, கீழ்த்தரமான மனிதனையும் நல்லவனாக்கும்.**

# பாடசாலைக் கல்வியின் மகத்துவம் மீண்டும் நிலைநிறுத்தப்படவேண்டும்

பாடசாலைகளும், ஆசிரியர்களும் கோயிலாகவும் கடவுளாகவும் மதிக்கப்பட்ட ஒரு காலம் இருந்தது. இப்போதுங்கூட அந்தப் பொற்காலத்தை எண்ணி "எங்கள் தாத்தாவுக்கும் ஒரு கொம்பன் யானை இருந்தது" என்று பெருமைப்பட்டுக் கொள்ளலாம். அதனால்தான் அன்று கல்வியையும் அறிவையும் "ஞானம்" என்ற உயர் மதிப்புக்கொண்ட வார்த்தையால் அழைத்தனர். கல்வியையும் ஆசிரியர்களையும் புனிதமாகப் பார்த்த அந்த நிலைமை மாறிப்போனதுடன் மனித வாழ்வு தொடர்பான அர்த்தமும் கீழிறங்கிப் போய்விட்டது.

பாடசாலைக்கல்வி இப்படி மதிப்பற்றதாகச் செய்யப்பட்டதற்கு பலரும் பல பொருத்தமான காரணிகளைக் கூறலாம். உயர் தொழில்நுட்ப வளர்ச்சி, பொருத்தமற்ற கல்வி முறை, தொழிற்சந்தையில் அதிகரித்துவரும் இடைவெளி, பாடசாலைகள் அற்ற நவீன கல்வி முறையை ஏற்படுத்துதல் என்பவை எல்லாம் இந்த நிலைமைக்குக் காரணம் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். எது எப்படி இருந்தபோது "டியூசன்" ஆசிரியரின் மதிப்பும், பணவருவாயும் மாத்திரம் அதிகரித்துக்கொண்டே போகிறது. கல்வியும் ஆசிரியத் தொழிலும் விற்பனைப் பண்டமாக்கப்படுவது, தூர நோக்கில் மாபெரும் சமூகச் சீரழிவுக்கு இட்டுச் செல்லும். முன்பெல்லாம் கலாசாரத்தையும் பண்பாட்டு விழுமியங்களையும், கலை இலக்கியங்களையும், உயர் தர்மங்களையும், மொழியையும், மனித நாகரிகத்தையும் கற்றுத்தந்த பாடசாலைகள் இன்று அவற்றையெல்லாம் புறந்தள்ளிவிட்டு பரீட்சைகளுக்கு தயார்செய்வது எப்படி? என்ற அம்சத்தில் மாத்திரம் அதிக அக்கறை செலுத்துகின்றன. அதனைக்கூட பாடசாலைகள் சரியாகச் செய்யாததால் மாணவர்கள் "ரியூசன்" பாடசாலைகளைத் தேடி ஓடுகிறார்கள்.

பாடசாலை ஆசிரியர்களுக்கு மதிப்புக் குறைந்ததற்கு முக்கிய காரணம் அத்தொழிலுக்கு வழங்கப்படும் சம்பளம் மிகக் குறைவாக இருப்பதும் அத்தொழிலுக்கு வழங்கப்படும் சம்பளம் மிகக் குறைவாக இருப்பதும். இத்தொழிலுக்கு வரும் அநேகர் கல்வித் தரம் மற்றும் ஏனைய தராதரங்களில் மிகக் குறைந்தவர்களாகவும் இருப்பதுதான். இதனால் வேறு தொழில்களுக்கு செல்லமுடியாதவர்கள் வேறு வழியின்றி ஆசிரியத் தொழிலுக்கு வருகின்றனர். இவர்கள் இத்தொழிலினால் தொழில் திருப்தியின்றிக் குறைந்தபட்ச அக்கறைகூடக் காட்டாமல் வருகின்றனர்.

இந்த நிலைமையை மாற்றி நீண்ட காலச் சமூக உயர்வை நோக்கிச் சமூகத்தை முன்னடத்திச் செல்ல வேண்டுமானால் ஆசிரியர்களையும் பாடசாலைகளையும் கல்வியையும் சமூகத்தில் உயர் மதிப்பு வாய்ந்தவனாக இருக்கச்செய்ய வேண்டும். வேறெந்த தொழிலுக்கும் கிடைக்காத வேதனம் ஆசிரியர்களுக்கும் கல்வியியலாளர்களுக்கும் வழங்கப்படவேண்டும். ஆசிரியர்களாக வருவதற்கு மிக உயர்ந்த கல்வித்தகைமையை உருவாக்கவேண்டும். பாடசாலைகளிலேயே சிறந்த மாணவர்கள் உருவாக்கப்படவேண்டுமேயன்றி "டியூசன்" பாடசாலைகளில் மாணவர்கள் தங்கியிருக்கக்கூடாது.

செ. கபிலன்
2009 கலைப்பிரிவு

# இலக்கியத்தினூடே மக்கள் வாழ்க்கை

இலக்கியம் என்ற சொல் லக்ஷியம் என்ற வடசொல்லின் திரிபு. லக்ஷியம் சொல்லுக்கு நோக்கம் எனவும் பொருளுண்டு. எனவே ஒரு நோக்கத்துடன் எழுதப்படுவதே இலக்கியம். இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சிந்துவெளியில் தோன்றிய நாகரீகம் திராவிட நாகரீகம் ஆகும். எனினும் இதற்குரிய இலக்கியங்கள் கிடைக்காவிட்டாலும் இங்குள்ள மக்கள் திராவிடர் என்றும் இவர்கள் உயரிய வாழ்க்கை வாழ்ந்தார்கள் என்றும் கூறப்படுகின்றது. இந்தவகையில் வாழ்க்கை என்ற நறுங்கனியின் தீஞ்சுவைக்காற்றே இலக்கியமெனலாம். மக்கள் மனதில் கலை உணர்வு, சால்புணர்வு, விருப்பு, வெறுப்பு ஆராய்ந்து கூறல் போன்ற செயற்பாடுகளைச் செய்கின்றன. இலக்கியங்கள் புலனுணர்ச்சியை மட்டுமன்றி அவனது அனுபவங்களையும் புலப்படுத்தும் இயல்புகொண்டது.

சங்க காலத்தில் அகத்தியர் முதல் நக்கீரர் வரையான பல புலவர்கள் வாழ்ந்தார்கள். இவர்கள் கண்ணால் கண்டு, காதால் கேட்டு, மனதால் அனுபவித்தவற்றையே பாடல்களாகப் பாடினார்கள். இலக்கியம் என்பது நோக்கம் என்ற கருத்துப்பட மக்களின் நாளாந்த வாழ்க்கையினை நோக்கமாகக் கொண்டு இலக்கியம் புனைந்தனர். மக்கள் வாழ்க்கையே செய்யுளுக்கு பொருளாக அமைந்தனர். காதலும், வீரமும் போற்றப்பட்டன. மன்னர்களும் புலவர்களும் இரண்டறக் கலந்திருந்தனர். இக்காலத்தில் எழுந்த எட்டுத் தொகை பத்துப்பாட்டு அகம் புறம் கூறுவனவாக இருந்தன. இக்காலத்தில் இன மதக் கலப்பின்றி மக்கள் தனித்துவமாக வாழ்ந்தனர். தனிநிலை செய்யுட்கள் எழுந்தன.

சங்ககாலத்தின் பின்வந்த சங்க மருவிய காலத்தை நோக்கின் மன்னராட்சி சிறப்படையுவில்லை. சமணத் துறவிகளும் பௌத்த துறவிகளும் செல்வாக்குப் பெற்றிருந்தனர். இதனால் வாழ்க்கை நிலையாமை விளக்கும் அறக் கருத்துக்கள் தமிழ் இலக்கிய மரபுக்குள் புகுந்தன. ஒழுக்கத்துடன் வாழ்ந்தால் வீடுபேறெய்தலாம் என்ற கொள்கை வலியுறுத்தப்பட்டது. அறக் கருத்துக்களைப் போற்றும் பதினெண் கீழ்க் கணக்கு நூல்கள் உதயம் பெற்றன. இவற்றுள் அறக் கருத்துக்களை மக்களுக்கு எடுத்தியம்பும் நூல்களாகத் திருக்குறள், நாலடியார் என்பன காணப்பட்டன. திருவள்ளுவரின் குறள் வையத்தில் மக்கள் வாழ்வாங்கு வாழும் முறையினை எடுத்தியம்பும் சிறந்த நூலாகும். இதனைவிட இரட்டைக் காப்பியம் எனப் போற்றப்படும் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இரு நூல்களும் இக்காலத்துக்குரியவை. சிலப்பதிகாரம் மூலம் அரசியல் பிழைத்தோற்கு அறம் கூற்றாகுமென்பதையும், ...... பத்தினிக்கு உயர்ந்தோர் ஏற்றலும் ஊழ் வினை வந்து உருத்தூட்டும் என்பனவாகிய உயர் கருத்துக்களை மக்கள் மத்தியில் ஊட்டியது.

சங்க மருவிய காலத்தை தொடர்ந்துவரும் பல்லவர் காலத்தைப் பார்ப்பின் நாயன்மார்களும், ஆழ்வார்களும் பக்தி ரசம் ததும்ப ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் மக்களை தட்டியெழுப்பி பக்தியை வளர்த்த பக்தி இலக்கியக் காலம். சங்க காலத்தில் தோன்றிய உலகியல் காதல் இக்காலத்தில் ஆன்மீக காதலாக வளர்ச்சியடைந்த காலம் மக்கள் கோயிலுக்குச் சென்று இறைவனிடம் பக்தி கொண்ட காலம். நாயன்மார்களும், ஆழ்வார்களும் இறைவனை அனுபவபூர்வமாக அனுபவித்து அதனை மக்களுக்கு எடுத்துக் காட்டினர். உதாரணமாக திருமாலின்மீது கொண்ட ஆராக் காதலினால் ஆண்டாள் இறைவனைத் தலைவனாகவும் தன்னைத் தலைவியாகவும் பாவித்துப் பாடியுள்ளார்.

சோழர் காலத்தில் நீண்ட கதைகள் கூறுவதன் மூலம் ஆன்மா இறைவனையடையும் முறையைச் சூக்கும வடிவில் புலவர்கள் அமைந்தனர். இக் காலம் காவிய உற்பத்தி உச்சக்காலம். கவிச்சக்கரவர்த்திகளான கம்பர், ஒட்டக் கூத்தர், சயங்கொண்டார் வாழ்ந்த காலம். இங்கு சைவசமயக் கருத்துக்களைச் சித்தரிப்பனவாக பெரியபுராணமும் கந்தபுராணமும் விளங்குகின்றது. வைஷ்ணவக் கருத்துக்களை வாழ்க்கைத் தத்துவமாகக் கொண்டு இராமாயணமும், பௌத்த தத்துவக் கருத்துக்களை பொதிந்தது குண்டலகேசியும், சமண தத்துவக் கருத்துக்களை எடுத்து விளக்குவதாக சிந்தாமணியும் அமைகிறது. பேரின்பக் கருத்துக்களை விளக்குவனவாகச் சோழர்கால இலக்கியம் அமைந்துள்ளது. இராமாயணம் நீண்ட காவியம். நாம் இப்புவியில் பிறந்து இறைவனையடைய இடைவிடாது தியானித்தல் வேண்டும். இடையில் பல சலனங்கள் வருமென்பதை எமக்கு எடுத்துக் காட்டுகிறது. இத்துடன் இராமன் மூலம் பெரியோருக்கு கீழ்ப்படியும் பண்பு, பரதன் மூலம் அறம் பிழையாமை, இலக்குவணன் மூலம் அன்பின் ஆழம், குகன் மூலம் தோழமையின் சிறப்பு, தசரதன் மூலம் புத்திர... என்பன மிகத் துல்லியமாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

வளமற்ற நாயக்கர் காலச் சூழ்நிலை மக்கள் மத்தியில் எரிச்சல், கோபம், ஆத்திரம் போன்ற உணர்வுகளை ஏற்படுத்தின. சோழர் காலத்தில் உலகியலைப் புகழ்ந்த காலம்போய் இக்காலத்தில் இலக்கியம் தத்துவப் பாடல்களாக மிளிர்ந்தன.

ஐரோப்பிய கால இலக்கியம் வணிக நோக்குடன் மதம் பரப்ப வந்த ஐரோப்பியர் படிப்படியாக ஆட்சியைக் கைப்பற்றினர். தனியுடமையாக இருந்த கல்வி பொதுவுடமையாக்கப்பட்டது. சமுதாய ஏற்றத்தாழ்வு ஓரளவு நீக்கப்பட்டது. அச்சியந்திர வருகையினால் நூல்கள் அச்சுவாகனமேறியது. செய்யுள் இலக்கியத்துக்குப் பதிலாக உரைநடை இலக்கியம் தோற்றம்பெற்றத. புதிய இலக்கிய வடிவமாக சிறுகதை நாவல் என்பன தோற்றம் பெற்றன. வீரமாமுனிவரின் பரமார்த்த குரு கதையுடன் சிறுகதை ஆரம்பமாகின்றது. இவை நடுத்தர மக்களின் வாழ்க்கையை

மையமாக வைத்துப் புனையப்பட்ட இலக்கியமாகும். மக்களின் பொழுது போக்குக்கும், உலகையறியவும் இவை வழிகாட்டலாயின. இது கூறும் மரபுரீதியாக வளர்ந்துவந்த தமிழ் புதிய அமைப்புக்களை உள்வாங்கி நவீனத்துவம் பெற்றது. கிறிஸ்தவ மதம் சார்புடைய தேம்பாவாணி, இஸ்லாம் சார்புடைய சீறாப்புராணம் என்பன தோன்றி அவரவர் சமயத்தையும் மக்கள் பண்பாட்டினையும் வளர்க்கத் துணை புரிந்தது.

இதனைத் தொடர்ந்து வந்த இருபதாம் நூற்றாண்டின் இலக்கியத்தை நோக்கின் இந்நூற்றாண்டில் நடைபெற்ற உலகப்போர் விஞ்ஞான வளர்ச்சி, கல்வி அபிவிருத்தி, பொருளாதார வளர்ச்சி, சாதி வித்தியாசம் அருகிவருதல், அரசியல் விடயங்களில் பொதுமக்கள் கூடிய செல்வாக்குப் பெறல், பொதுவுடமைக் கொள்கை, தொடர்பாடல் சாதனங்களின் விருத்தி என்பவற்றின் தாக்கத்தினால் இக்காலம் பொதுமக்களுக்குரிய காலமாகியது. இதனால் அவர்களின் வாழ்க்கை, குறிக்கோள், இன்பதுன்பம், முன்னேற்றத்துக்குத் தடையாக இருக்கும் சாதிக் கொடுமை, சமுதாயக் கட்டுப்பாடு போன்றவற்றைச் சித்தரிக்கும் இலக்கியங்கள் தோன்றின. இந்நிலையில் பாரதியார் தோன்றி உயிர்த் துடிப்புள்ள கண்டாரை பிணிக்கும் தகையனவான நூல்களை எழுதினார். மேலும் பெண்களுக்கு விடுதலை கொடுக்கும் நூல்கள், பாடல்கள் இயற்றினார். மக்களின் பேசும் பேச்சு வழக்குத் தமிழ் எழுத்து வழக்கில் இடம்பெறவேண்டுமென அதனையே வடிவமைத்து வெளியிட்டார். இதனால் பண்டிதன் முதல் பாமரன் வரை இலக்கியத்தின் சுவையை உணர்ந்தான். இதனைத் தொடர்ந்தும் இன்றைய எழுத்தாளர்கள் சூழலின் நிலையினையும் மக்களின் வாழ்க்கைத் தரத்தினையும், வக்கிரம் நிறைந்த உலக நடவடிக்கைகளையும் எழுதி வருங்கால சந்ததியினருக்கு நிகழ்கால வாழ்க்கையைப் பிரதிபலித்துக் காட்டும் கண்ணாடியாக விளங்கிவருகின்றார்கள்.

எனவே இலக்கியம் என்பது காலத்துக்குக் காலம் வாழ்ந்த மக்களின் வாழ்க்கையை வருங்கால மக்களுக்கு எடுத்துக்காட்டுகின்றது. இலக்கியத்தின் மூலம் ஒவ்பொரு இன மக்களின் பாரம்பரியம், கலாசாரம் என்பன போற்றி வளர்க்கப்பட்டு எதிர்கால பரம்பரையினருக்கு கையளிக்கின்றன. இந்தவகையில் இலக்கியம் எந்த இனமொழி, மத மக்களுக்கும் அழியா பொக்கிசம் என்பது கண்கூடு.

**இ. சுகிர்தன்**
கலைப்பிரிவு 2009

# சூழல் மாசடைதல்

இன்று மனிதனானவன் பல்வேறுபட்ட நோய்களுக்கு ஆளாகின்றான். அதற்கு காரணம் மனிதனே ஆவான். மனிதனானவன் தான் வாழும் சூழலுக்கு பல்வேறுபட்ட தீமைகளை செய்கின்றான். அச்சூழல் அவற்றை அவனுக்கே பின்னர் அளிக்கின்றது. அதாவது மனிதனானவன் தான் வாழும் சூழலாகிய நிலம், நீர், ஆகாயம் என்பவற்றிற்கு பல்வேறுபட்ட தீமைகளை செய்கின்றான் அவற்றை விரிவாக நோக்குவோம்.

மனிதனானவன் நிலத்திற்கு பல்வேறுபட்ட தீமைகளையும் செய்கின்றான். நிலத்தினுள் உக்காத பொருட்களை புதைக்கிறான். இதனால் நிலத்தினுள் வாழும் அங்கிகள் அழிகின்றன. அதுமட்டுமன்றி நிலத்திற்கு கிருமிநாசினியை தெளிக்கின்றான். இதனால் விவசாயிகளின் தோழனான மண்புழு அழிய நேரிடுகின்றது. மேலும் நிலத்தினுள் கழிவுப் பொருட்களை புதைக்கின்றான். இதனாலும் மனிதனே பாதிப்படைகின்றான்.

மனிதன் நீரிற்கு பல்வேறுபட்ட மாசுக்களையும் செய்கின்றான். நீரினுள் தொழிற்சாலைக் கழிவுகளையும் ஏனைய கழிவுகளையும் கொட்டுவதனால் துர்நாற்றம் வீசுவதோடு மட்டுமன்றி அதிலிருந்து நுளம்புகள் பெருகி மனிதர்களுக்கு பல்வேறுபட்ட நோய்களை உண்டாக்குகின்றது. மேலும் கடலினுள் எண்ணெய் படகுகளை பயணம் செய்யவிடுவதனால் அந்த கப்பல்களிலிருந்து வெளியேறும் எண்ணெய் நீரின்மேல் பரவுவதால் நீர்வாழ் அங்கிகளுக்கு சுவாசிக்க காற்று கிடைக்காது அவை இறந்துவிடுகின்றன. அதுமட்டுமன்றி அந்த நீரை அருந்தும் மனிதர்கள் மற்றும் ஏனைய உயிரினங்கள் தமது உயிரை விடவேண்டிய நிலை ஏற்படுகின்றது. மேலும் கடலினுள்ளிருந்து விண்ணுக்கு ஏவுகணைகள் அனுப்பப்படுவதனால் கடல்நீரானது பாதிப்புக்கு உள்ளாவதோடு பல கடல் உயிர்களும் பாதிப்புக்கு உள்ளாகின்றன.

மனிதன் ஏவுகணைகளை விண்ணுக்கு அனுப்புவதனால் சூரியஒளியிலிருந்து பூமியைப் பாதுகாக்கின்ற ஓடானது பாதிப்புக்கு உள்ளாகின்றது. இதனால் மனிதனுக்கு புற்றுநோய் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன. மேலும் மனிதன் பூமியில் பயன்படுத்தும் குளிர்சாதனப் பெட்டியிலிருந்து வெளியேறும் ஒருவகையான புகையில் பூமியின் வளி மண்டலமானது பாதிக்கப்படுகின்றது.

மனிதனானவன் தான் உயிர்வாழ அத்தியாவசியமான காற்றினை மாசுபடுத்துகின்றான். தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் புகைகள் காற்றுடன் கலப்பதனால் காற்றானது மாசுபடுகின்றது. மரங்களை வெட்டுவதனால் மனிதனுக்கு தூய்மையான வளி கிடைக்காமல் போகின்றது. இதனால் மனிதன் பல்வேறுபட்ட நோயிற்கும் ஆளாகின்றான்.

மனிதனானவன் நிலம், நீர், காற்று, ஆகாயம் போன்ற அனைத்துக்கும் செய்யும் தீங்குகளால் சூழலானது மாசடைகின்றது. இதனால் ஏற்படும் பாதிப்புக்களுக்கு மனிதனே உள்ளாகின்றான். ஆகவே மனிதனாகிய நாம் இன்றிலிருந்து சூழலை மாசுபடுத்தாது அழகாக பேணி நல்வாழ்வு வாழ்வோம்.

"சுத்தம் சுகம் தரும்"

**சி. சதீஸ்**

## என் மனம்

உப்புக்காற்றில் ஊறிய போதும்
காலக் கண்ணீரில் கலந்த போதும்
துருப்பிடிக்கவில்லை என் இரும்பு மனம்
காரணம்....
பழுக்க காய்ச்சி வைத்திருக்கிறேன்
கவலைகளை எரித்து....

## வானம் வசப்படும்

பட்டாம்பூச்சி
பரவசமாக உலவுகிறது
பறவை
பாரினைச் சுற்றிக் களிக்கிறது.
விஞ்ஞானம்
விண்ணைத் தொட்டு விந்தை
புரிகிறது.
நீ மட்டும்....
சிறகுகளை விற்றுவிட்டு
பறக்க ஆசைகொள்கிறாய்!
கனவுகளில்
காலத்தைக் கரைக்கிறாய்!!
சும்மா இருந்துகொண்டு
சுகம் வேண்டும் என்கிறாய்!!
வாழ்வென்ன அடிமையா,
உன்காலில் மண்டியிட
வா!

காற்றில் ஏறி
கனவுகளைச் சமை
தூக்கம் குறை
ஊக்கம் நிறை
நெஞ்சில்
நம்பிக்கை என்னும் ஈரம் விதை
வாழ்வென்ன,
உனக்கு
வானமும் வசப்படும்.

## பௌர்ணமி

பௌர்ணமி நாள்
உன் மௌன இருளால் இருண்டுபோன
என் இதயம் ஒளிபெற்றது.
மாசற்ற நிலவே உன்னில்
களங்கமில்லை
பார்ப்பவன் கண்ணில்தான்....
பால்மழை பொழிந்தாயே - அக
இருள் ஓடிமறைந்தது
எண்ணப் பயிர்கள் செழித்தன
நின்றுபோன மின்னொளிதான்
நிலவே உன்னை ரசிக்கவைத்தது.
சுழற்சி முறையில் 'பவர்கட்' போடும்
சுந்தரமே;
உன் அழகே அழகு
உன் மதியே மதி
உனக்கு கட்டணம் கட்டுவதென்றால்
கவிஞன் மட்டுமல்ல....
கனவானும் கடனாளிதானே!

## மனமாற்றம்

அப்போதெல்லாம்
ஒத்தைப் பூக்களை கொய்துவிடுவேன்
இப்போது....
அவ்வாறில்லை!
பூக்களை உடன்கட்டை ஏற்றுவதில்
உடன்பாடில்லை எனக்கு;
மலர்களின் இராச்சியத்தில்
குற்றவாளிக் கூண்டில்
முட்களின்மீது நின்று
காற்றை வைத்து வாதாட
தைரியமில்லை.

*க. சுதர்சன்*
*கலைப்பிரிவு 2008*

“வழி” எனும் சஞ்சிகை வருடம்தோறும் மலர எமது வாழ்த்துக்கள்

# Jeyantha Computer Park

75/22 Thumpalai Road, Sivan Kovilady,
Point Pedro.

**Microsoft Certified Professional (MCP), USA**

**தகைமையுடைய விரிவுரையாளர்களால்**
**அரசாங்க பாடத்திட்டத்திற்கமைய**
**கணனி வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன.**

- **G.C.E. (O/L) மாணவர்களிற்கான ICT**
  (Information and Communication Technology)
- **G.C.E. (A/L) மாணவர்களிற்கான GIT**
  (General Information Technology)
- **பாடசாலை மாணவர்களிற்கான** Kids Programs
- **வளர்ந்தோரிற்கான,**
  Diploma in Microsoft Office
  Diploma in Desktop Publishing
  Diploma in Hardware Technology

---

Computer Repairing
Typesetting and Printing
CD and DVD writing
Photo Scaning and Editing

**மற்றும் கணனிசார் அனைத்து சேவைகளிற்கும்....**

## ஜெயந்தா கணனிப்பூங்கா

**75/22 தும்பளை வீதி, சிவன் கோவிலடி,**
**பருத்தித்துறை.**

"வழி" என்றும் வழியாக இருக்க
எமது நல்வாழ்த்துக்கள்

ஐஸ்கிறீம் வகைகள், ஐஸ்பழம், ஐஸ்சொக்,
மிக்ஸ் புறூட், கிறீம் சர்பத்,
சர்பத், குளிர்பானங்கள், சிற்றுண்டி வகைகள்,
பிஸ்கற் வகைகள், கன்டோஸ் வகைகள்,
கேக் வகைகள்
அனைத்தையும் நாள்தோறும் நியாயமான விலையில்
சுவைத்து மகிழ்ந்திட
நாடவேண்டிய சிறந்த ஸ்தாபனம்



# நிதர்சன்



# கிறீம் ஹவுஸ்

பஸ் நிலையம், பருத்தித்துறை.

"வழி" எனும் சஞ்சிகை பிரதி வருடம்தோறும் வெளிவர தேசிய சேமிப்பு வங்கி சார்பில் வாழ்த்துகின்றோம்

NSB
National Savings Bank

**SALARY EARNER'S SAVINGS ACCOUNT (SESA)**

**ஊதியம் பெறுவோர் சேமிப்புக்கணக்கு**

அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களுக்கு தேசிய சேமிப்பு வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய விசேட சேமிப்புக் கணக்கு ஊதியம் பெறுவோர் சேமிப்புக் கணக்காகும். இது சாதாரண சேமிப்புக் கணக்கின் நன்மைகளுடன் விசேட நன்மையும் மேலதிக வருமானத்தையும் தரும் உன்னதமான சேமிப்புக் கணக்காகும். இக்கணக்கை ஆரம்பிப்பதன்மூலமாக பின்வரும் அனுகூலங்களை பெறமுடியும்.

- வைப்பு மற்றும் அதன் வட்டிக்கு முழுமையான அரசாங்க பாதுகாப்பு.
- சம்பளக் காசோலை வங்கிக்குக் கிடைத்தவுடன் உடனடியாக கணக்கில் வரவு வைக்கப்படும். அத்துடன் தேசிய சேமிப்பு வங்கியின் எந்தக்கிளையிலும் பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.
- சலுகை வட்டிவீத அடிப்படையில் சுயதேவைக்கடன் வைப்புக்கு எதிரான கடன்கள் மற்றும் சேமிப்பாளர் வீடமைப்புக்கடன் வசதிகள்.
- இக்கணக்கை வைத்திருப்பவருக்கு நகை முற்பணம் தங்கத்தின் சந்தைப்பெறுமதி அடிப்படையில் கூடுதலான அடகு முற்பணம் வழங்கப்படும்.
- முதல் மூன்று மாதகாலத்திற்குள் கணக்கை ஆரம்பிப்பவர்களுக்கு 100 ரூபா பெறுமதியான ரிதிரேகா சான்றிதழ் வழங்கப்படுவதுடன் 9 மில்லியன் பெறுமதியான பரிசு வாய்ப்புக்கள்.
- நிலையான கட்டளை வசதிகள் மற்றும் அஞ்சல் பரிமாற்ற வசதிகளும் இலவசமாக வழங்கப்படும்.
- இலவசமான NSB NET CARD (ATM) பெறமுடியும். அத்துடன் ஒரே நேரத்தில் நெற் அட்டை மூலமாகப் பத்துக் கணக்குகளை ஒன்றிணைத்து செயற்படுத்தமுடியும். அத்துடன் NSB NET CARD மூலமாக பணத்தை வைப்பு செய்வதுடன் மீதியினை உடன் அறிந்துகொள்ளலாம்.
- இக்கணக்கினை ஆரம்பிப்பவரின் பிள்ளைகளுக்கு புஞ்சிக்கப்பன் கணக்கு 100 ரூபா அல்லது கிரிகெற்றி புஞ்சிக்கப்பன் கணக்கு 200 ரூபா வரவு வைக்கப்படும்.
- கணக்கு உரிமையாளர்களுக்கு ரூபா 1000000 ரூபா வரையிலான உபகாரக் கொடுப்பனவுகள்.

"வழி" என்றும் மலர்ந்து ஒளிதர எமது வாழ்த்துக்கள்

சஞ்சிகைகள், நாவல்கள், அலுவலக உபகரணங்கள்,

பஞ்சாங்கங்கள், வாழ்த்துமடல்கள்,

அன்பளிப்புப் பொருட்கள்,

நாளாந்த, வாராந்த பத்திரிகைகள்





கிடைக்குமிடம்

**நாவலர் புத்தகசாலை**

தென்புலோலி, பருத்தித்துறை.

*ஹாட்லியின் "வழி" வளர எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்*



# KUGAN STUDIO & COLOUR LAB



# குகன் ஸ்ரூடியோ கலர் லாப்

**Point Pedro** பருத்தித்துறை

*1936 இலிருந்து சிறந்த சேவையில் தெளிவான விரைவான நவீன தொழில்நுட்ப முறையிலான புகைப்படச் சேவையில் அனுபவம் மிக்கவர்களான*

## குகன் ஸ்ரூடியோ நிறுவனத்தினர்

**021 226 3218**

---

*ஹாட்லியின் "வழி" வருடந்தோறும் வெளிவர எமது வாழ்த்துக்கள்*

சகலவிதமன பலசரக்குப் பொருட்கள் மற்றும் வெற்றிலை, பாக்கு, ஆலயப் பொருட்களிற்கு நாடவேண்டிய சிறந்த இடம்






# கே. கே. ரட்ணம்

மக்கள் சந்தை, பருத்தித்துறை.

# சிந்தையிலிருந்து வாழ்வின் படியே

மனம்போல வாழ்வு என்கிறார்கள். ஆம் மனம்தான் எமது வாழ்வை நிர்ணயித்துவிடுகிறது. எம் மனதில் இருவேறு எதிர்ச் சக்திகள் தொழிற்படுகின்றன. ஒன்று ஆக்க சக்தி. அதாவது பக்தி, மற்றையது அழித்தற் சக்தி. அதாவது பயம். ஆக்க சக்தியாகிய பக்தி எமது ஆன்மாவை மென்மேலும் உயரச் செய்கின்றது. அழித்தற் சக்தியாகிய பயம் எம் ஆன்மாவை மென்மேலும் இழிநிலை அடையச் செய்கின்றது.

நாம் பக்தி என்று எதனைச் சொல்லுகின்றோம். ஒரு மாணவன் தன் குருவினிடம் செலுத்துவது பக்தி. ஒரு ஆன்மா இறைவனிடம் செலுத்துவது பக்தி. இவ்வாறு பக்தி செலுத்தப்படும் போது உயர்வு கிட்டுகின்றது. ஆசிரியரைக் கண்டு மாணவன் பயம் கொள்வானாயின் அல்லது இறைவன் என்ன செய்வாரோ என ஆன்மா பயம் கொள்ளுமாயின் இழிநிலையே உண்டாகும். அதாவது பக்தி, பயம் இவை இரண்டும் இருவேறுபட்ட எதிரெதிரான துருவங்கள்.

சிலர் இறைவன் தம்மை தண்டித்து விடுவார் என்ற பயத்தினாலேயே சில காரியங்களை செய்கின்றனர். ஆனால் இக்காரியங்கள் சமய பண்பாட்டுக்கு முரணானவையாகக் காணப்படுகின்றன. இன்னும் சிலர் பிரதிபலனை எதிர்பார்த்து இறைவனை வேண்டி காரியங்களை செய்கின்றனர். இது உண்மையான பக்தி அல்ல. உண்மையான பக்தி செய்பவன் "பிரதி உபகாரத்தை எதிர்பார்க்கமாட்டான். பிற உயிருக்கு தீங்குவரா வண்ணம் நடந்துகொள்வான்" என்று எமது வகுப்பாசிரியர் கூறுவது நினைவுக்கு வருகின்றது. ஆயினும் அவன் செய்யும் பக்தியே அவனை உயர்நிலைக்கு இட்டுச்செல்லும்.

மனிதனின் மிகவும் குறைந்த பட்சத் தேவை நிம்மதி. நிம்மதியை பற்றி பழைய சினிமா பாடலில்
"எங்கே நிம்மதி எங்கே நிம்மதி
அங்கே எனக்கோர் இடம்வேண்டும்"
என்று கருத்துநிலையை புலப்படுத்துகின்றது. இந் நிம்மதியை தெய்வத்திடமிருந்து பெற்றுக்கொள்பவன் தான் இந்து. பக்தி செய்வதற்கு சிறந்த இடம் கோயில். நெஞ்சுக்கு நிம்மதி அதுவே ஆண்டவன் சந்நிதி. "கடவுளே இல்லை" என்று வாதாடியவன் எவனும் "எனக்கு மரணமே இல்லை" என்று வாதாடமுடியவில்லையே. நாம் பல்வேறுபட்ட அனுபவங்களின்மூலம் பல விடயங்களை கண்டுகொண்டு அதற்கேற்ப நடந்துகொள்கின்றோம். இதேபோல மனிதன் பக்தி செலுத்துதல் மூலம் இறை வசப்பட்டுவிட்டால் அவன் தெய்வத்தை காண்பது உறுதி.

பிரம்மாவை குறித்து நித்திய வரம் வேண்டி கடும்தவம் புரிந்த கும்பகர்ணன் சரஸ்வதி தேவியின் திருச்செயலால் நித்திரை வரம் பெற்றான் அன்றோ! ஆகவே மனத்தை நிலைநிறுத்தப் பயின்றுகொள்வோமாயின் நினைத்தன யாவும் பெற்றுவிடுதல் சாலும்.

நாம் கண்டவாறு ஆசை கொள்ளாமல் நமக்கு கீழேயும் பலர் உள்ளனர் என்று நினைத்து ஆண்டவன் இவ்வாறாவது எம்மை இருக்கவிட்டுள்ளான் என்று திருப்திப்படவேண்டும். இதனை கவிஞர் கண்ணதாசன் பின்வருமாறு அழகாக கூறுகிறார்.

"உனக்கு கீழே உள்ளவர் கோடி
நினைத்துப்பார்த்து நிம்மதி நாடு"

கோவிலில் உள்ள சிலையை வணங்குவதில் என்ன பயன் என்று கடவுள் நம்பிக்கை அற்றவர்கள் கேட்கிறார்கள். இது அவரவர் மனதினைப் பொறுத்து

"தெய்வம் என்றால் அது தெய்வம் - வெறும்
சிலை என்றால் அது சிலைதான்"

கல்லில் செதுக்கப்பட்ட ஓர் நாய் உருவத்தை நாய் என்று நினைத்து பார்ப்பவர்களுக்கு அக்கல் தெரிவதில்லை. இதேபோல் கல் என்று நினைத்து பார்ப்பவர்களுக்கு நாய் உருவம் தெரிவதில்லை. இதனையே பின்வருமாறு கூறப்படுகின்றது.

"நாயைக் கண்டால் கல்லைக் காணோம்
கல்லைக் கண்டால் நாயைக் காணோம்"

எனவே எமது மனத்தை ஒருநிலைப்படுத்த பழகிக்கொள்ளவேண்டும்.

விரதம், தவம், தியானம் ஆகியன யாவும் மனத்தை அடக்குவதற்கான உபாயங்களே ஆகும். மனத்தை எவ்வழி அலையவிடுகின்றோமோ அவ்வழி நாமும் அவ்வடிவினைப் பெற்றுவிடுகின்றோம் என இராமாயணமும் காட்டிநிற்கின்றது.

மனிதன் தெய்வமாகின்றான். மனிதன் பேரின்பநிலைக்கு ஆளாகின்றான். இவையெல்லாம் மன அடக்கத்தால் விளைபவையே ஆகும். ஆகவே மனத்தை அடக்குவோம். மகிழ் வாழ்வு பெறுவோம்.

ஆ. மணிமாறன்
கலைப்பிரிவு 2009

# அறிந்துகொள்ள வேண்டியவை

## அ. சிறப்புப் பெயர்கள்

1) தெற்கின் பிரித்தானியா - நியூசிலாந்து
2) நள்ளிரவில் சூரியன் தெரியும் நாடு - நோர்வே
3) சூரியன் உதிக்கும் நாடு - ஜப்பான்
4) நைல்நதியின் கொடை - எகிப்து
5) ஆயிரம் ஏரிகள் உள்ள நாடு - பின்லாந்து
6) உலகத்தின் தடுக்கப்பட்ட இடம் - திபெத்
7) ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம் - சுவிஸ்சலாந்து
8) ஐரோப்பாவின் காப்பகம் - பெல்ஜியம்
9) ஐரோப்பாவின் நோயாளி - துருக்கி
10) புனித நாடு - பாலஸ்தீனம்

## ஆ. உலகநாடுகளின் தேசிய சின்னங்கள்

1) அமெரிக்கா - தங்கத்தடி
2) அவுஸ்திரேலியா - கங்காரு
3) அயர்லாந்து - ஹப்ரக் மலர்
4) இந்தியா - சிங்கத்தலை
5) ஈரான் - ரோஜா மலர்
6) ஈராக் - சிவப்பு மலர்
7) எகிப்து - தாமரைப்பூ
8) கனடா - வெண்மை மலர் (அல்லி)
9) சீனா - திராட்சை மலர்
10) சுவிற்சலாந்து - இடல்விஸ் மலர்
11) பாகிஸ்தான் - பிறை
12) பெல்ஜியம் - அசலியா மலர்
13) போலந்து - சோலி மலர்
14) பிரான்ஸ் - அல்லி மலர்
15) பிரித்தானியா - ரோஜா மலர்
16) யப்பான் - கூட்டுப்புழு
17) ரூமேனியா - பூவரசம்பூ
18) ஜேர்மனி - கான்பூ
19) ஸ்பெயின் - கருடன்
20) டென்மார்க் - கடற்கரைச் செடி

**M. மணிமாறன்**
கலைப்பிரிவு 2009

# திறனாய்வாளரின் பார்வையில் இன்றைய கல்வி

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்று பார் போற்றும் பொது அறநூல் தந்த செந்நாப்போதர் வள்ளுவப் பெருந்தகை திருவாய் மலர்ந்தது ஒரு காலம். அதைக் கருத்திற்கொண்டு கல்வியை கருப்பொருளாய் வைத்து அறம் வளர்ந்தது ஒரு காலம். இன்று நிற்கும் நிலை அறிந்து செய்யும் செயல் அறிந்து நன்மை தீமைகளை ஆராய்ந்து அதற்கேற்ற வகையில் கல்வியைத் தொடர்வது புதுக்கோலம். காலத்திற்கேற்ப கோலங்கள் மாறும் என்பர். ஆனால் இன்று தான் செய்கின்ற கோலங்களுக்கு ஏற்ப காலத்தை மாற்ற முனைகின்றான் மனிதன். கல்வி என்பது களங்கத்தை உண்டுபண்ணவோ இல்லை. கலக்கத்தை உண்டு பண்ணவோ அல்ல. நல்லதொரு கழகத்தை உண்டுபண்ணவே ஆகும். பகுத்தறிவற்ற மிருகநிலையிலிருந்து வேறுபடவே நர் கல்வியைக் கற்கின்றோம். கற்ற கல்வியை பகுத்தறிந்து நோக்கவே மனிதன் ஆறறிவு கொண்டிருக்கிறான். கல்லாதாருக்கும் கருணைகாட்டவே நாம் கற்கும் கல்வி முனைய வேண்டும். அதைவிடுத்து கற்கின்றோம் என்ற மமதைகொண்டு மற்றவர்களைத் தூற்றுவதற்கு அல்ல.

"குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும் மஞ்சள் அழகும் அழகல்ல" நாம் கற்கின்ற கல்வியே நமக்கு உண்மையான அழகாகும் என்று முன்னோர் உரைத்தது இன்று முற்றிலும் உண்மையாகின்றது. இன்றைய சமூகத்தில் மனிதன் அழகைவிட அறிவிற்கு முக்கியத்துவம் அளிப்பது அதிகமாகிவருகின்றது. "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் என்று ஔவையார் கண்களுக்கு ஒப்பிட்ட கல்வி இன்று கணனிக்கு ஒப்பிடப்படுகிறது. ஒருவன் கற்ற கல்வியானது அவனது ஏழ் பிறப்பிலும் அவனைத் தொடர்ந்துவரும் என்பதைவிட எடுத்திருக்கின்ற இப்பிறவியிலே நல்லதொரு வாழ்க்கையை அமைத்துக்கொள்ள மனிதன் முற்படுகின்றான். அதற்காகவே கல்வியை ஆராய்ந்து நோக்குகின்றான்.

ஒருவன் கற்கக் கற்க உயர்வடைகின்றான், ஒழுக்கமுடையவன் ஆகின்றான் என்று சிந்திப்பதோடு அந்தக் கல்விமூலம் பயனடைகின்றானா? என சிந்திப்பதும் முக்கியமானதே. அதை இன்றைய மனிதன் சிந்திக்கத் தொடங்கிவிட்டான். அதனாலேயே கல்வியை ஒரு புதியநோக்கில் உன்னதமான ஆய்வில் நோக்குகின்றான். அக்காலத்திலிருந்து கல்வியைக் கற்கவேண்டும். அதன்படி வாழ வழிசெய்துகொள்ள வேண்டுமென்பது தொன்று தொட்டு வந்த மரபாகும். ஆனால் இன்று வாழவழி செய்கின்ற கல்வியை தேர்ந்தெடுக்க சமூகம் சொல்லித் தருகின்றது. அன்றைய சமூகம் நம் கல்விக்கேற்ப உருவாகியது. "கற்றார்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு" என்ற வார்த்தை உண்மையாகியிருந்து வந்திருக்கின்றது.

ஆனால் இன்று சமூகத்திற்கு ஏற்றவாறு நாம் வாழவேண்டியிருக்கின்றது. அதற்கேற்ப புதிய திறனாய்வில் இன்றைய கல்வியை நோக்க வேண்டியுள்ளது. கற்றவர் கடமை புரிகின்றாரா என்றுதான் செல்கின்ற இடமெல்லாம் கேட்கப்படுகிறது. உலகமே, உலகத்தை வடிவமைக்கின்ற செயற்பாடுகள் எல்லாம் மாறிக் கொண்டிருக்கின்ற இக்காலகட்டத்தில் புதிய திறனாய்வுகளின் மூலம் கல்வி சீர்திருத்தப்படுவது ஒன்றும் ஆச்சரியமானதல்ல.

இன்று உலகின் தெற்காசிய நாடுகளைத் தவிர ஏனைய நாடுகள் குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில்கூட ஒரு பிள்ளையின் ஆரம்பக்கல்வியானது பாலர் பிரிவிலேயே அந்தப் பிள்ளையிடம் இருக்கின்ற திறமையை வெளிக்கெண்டு வருவதை மையமாக வைத்து கல்வி புகட்டப்படுவதை நாம் அறிந்த ஒன்றாகும். அந்த அளவில் அந்த நாடுகள் முன்னேற்றம் கண்டுள்ளன. இத்தகைய நாட்டினைப் பின்பற்றி தெற்காசிய நாடுகள் முன்னேறுவதற்கு முனைந்தாலும் இந்நாடுகளின் வறுமை, போஷாக்கின்மை, வளக் குறைபாடுகள் போன்ற இன்னோரன்ன பிரச்சனைகளுக்கு சிறுவயதிலேயே முகம்கொடுக்க நேருகின்றமையினால் பிள்ளைகளுக்கு கல்வி கற்கவோ அதைத் தொடரவோ முடியாமல் போகின்றது. வேறுவிதமாக நோக்கினால் குறிப்பிட்ட ஒரு வயதெல்லைவரை கல்விகற்ற பின்னர் தாம் கற்ற கல்விக்கு தகுதியான வேலையினை தேடித்திரிகின்ற வேலையில்லாப் பிரச்சனைகளும், இப்பிரச்சினைகளை தீர்க்கவேண்டும், கல்வியைப் பற்றிய நல்லதொரு எண்ணம் சிறுவர்களின் மனதிலே உருவாகவேண்டும். அவனது கல்வி எதிர்கால செயற்பாடுகட்கு உறுதுணையாக அமையவேண்டும் என்ற உயர்நோக்கில் இன்றைய கல்வி நோக்கப்படுகின்றது.

வெறுமனே தான் தெரிவுசெய்த பாடநூல்களை மாத்திரம் கற்று மனப்பாடம் செய்து பரீட்சையில் சிறந்த பெறுபேற்றையும் பெற்றபின் வேலைதேடி மனமுடைகின்ற இளைஞரின் பரிதாபமான நிலையை போக்கவே திறனாய்வு செயற்பாடுகள் உதவுகின்றன. இதனால்தான் கற்கின்ற பாடங்களை ஆராய்வது மட்டுமன்றி அந்தப் படவிதானம் மூலம் செய்து முடிக்கக்கூடிய செயற்பாட்டினை இன்றைய கல்வி கொண்டுள்ளது.

வெறும் புத்தகப் பூச்சியாய் இருக்காது பல்வேறுவிதமான விடயங்களை ஆராய்ந்து அதன்மூலம் பெறக்கூடிய நன்மை பற்றி கூறுவதே இதன் நோக்கமாகும். ஒரு மாணவன் வீட்டிற்கு எவ்விதத்தில் உதவவேண்டும், சமூகத்தோடு எவ்வாறு இணைந்து செயற்படவேண்டும். தனது கருமங்களை தானே எவ்வாறு ஏற்றுக்கொள்ள வேண்டும்? எவ்வாறு பிரச்சனைகளை எதிர்நோக்க வேண்டும். அந்த மனப்பக்குவத்தை உண்டாக்கக்கூடிய வகையில் இன்றைய கல்வி அமைகின்றது. நம்மால் இது முடியும். இதைச்செய்யலாம், இது இலகுவானது என்று தன்னிடத்தே உள்ள திறமையைக் கண்டறிந்து அதனூடாக கல்வியை மேற்கொள்ளும்போது அவன் வாழ்க்கையின் சவால்களை ஏற்கும் பொதுத்தன்மையை அடைகின்றான்.

"கண்டது கற்கும் பண்டிதன் ஆவான்" என்பதற்கேற்ப மாணவர்களை பல கோணங்களில் பலவிதமாக சிந்திக்கத்தூண்டுவது திறனாய்வாளனின் பார்வையில் கல்வி நோக்கப்படுவதால் ஏற்படுகின்றது. வீட்டில் சமையலறைக் கல்வியை இன்றைய புதிய கல்விச் சீர் திருத்தம் புகட்டுகின்றது. பொருளாதாரம் சம்பந்தமாக ஏற்படக்கூடிய உணவுப் பிரச்சனையை, உடைப் பிரச்சனையை சமூகத்தில் ஏற்படக்கூடிய பல பிரச்சனைகளை தீர்க்கின்ற முறையில் திறனாய்வு கொண்டு கல்வி இன்றைய காலகட்டத்தில் புகட்டப்படுகின்றது. அதேவேளை திறனாய்வாளன் கல்வியை இன்று எத்தகைய பார்வையால் நோக்குகின்றான் என்று மறுபுரம் பார்ப்போமேயானால் தான் மேற்கொள்கின்ற கல்வியால் நோக்குகின்றான் என்று மறுபுறம் பார்ப்போமேயானால் தான் மேற்கொள்கின்ற கல்வியில் ஒரு மையக் கருத்தை நோக்குகின்றான். அந்தக் கல்விமூலம் பெறக்கூடிய ஒரு நன்மையை எதிர்பார்க்கின்றான். இன்றைய நாட்டு மற்றும் சமூக பொருளாதாரப் பிரச்சனைகளுக்கு மத்தியிலும் அவன் கல்வியை மேற்கொள்கின்றான் என்றால் அதன்மூலம் ஒரு பயனைப் பெறலாம். அதன்மூலம் தனது திறமையை வளர்த்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையில்தான் அவன் எதை நோக்கினாலும் ஒரு உள் அர்த்தத்தை கொண்டதாக இருக்கவேண்டும். அவ்வாறு இருக்கின்றபோது இந்தக் கல்விமுறையில் மாணவர்களுக்கு பற்று உண்டாகும் என்பதில் ஐயமில்லை. அவ்வாறு கல்வி ஒரு புதிய சீர்திருத்த முறையில் மாணவர்களை ஊக்குவிக்கக்கூடியவகையில் அவர்களின் ஆற்றலை, உட்திறனைத் தூண்டுகின்ற வகையில் அமையும். அதனால் நாடும் வீடும் நற்பிரஜைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். அது மாத்திரமின்றி உலக நாடுகளிடையே நற்பெயரையும் பெறும். கல்வியில் சிறந்த நற்பயனைப் பெற்றுக்கொடுக்கும் நாடாக விளங்கும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை என்றே கூறலாம். இவற்றிற்கெல்லாம் இன, மத, மொழிகளைக் கடந்த செயற்பாடுகளும், பொருளாதாரப் பொலிவும், வறுமையற்ற நிலையும், பொதுப்படையான அறிவும், ஆக்கத்திறன்மிக்க ஆசிரிய வழிகாட்டலும், சிந்தனாவளமிக்க சமூகமும், அரசியல் சித்தாங்களைக் கடந்த புரட்சிமிகு நாட்டுத் தலைவனும் அவசியமென்பதை உணர்ந்து அனைவரும் செயற்படுவோமாக....

**S. தேவகருணன்**
$13^D$

# Air pollution

Air pollution is one of the most serious problems that has drawn the attention of the environmentalists all over the world. If you live in a large city, you might be particularly concernes about the pollution, because you can feel it. It can burn your eyes, nose and throat on the worst days. The problem is worse during the warm season with wind blowing through out the day. The day becomes not and humid and the air gets dirty as the dry air penetrates every nook end corner. Every available space is filled with dust and dirt. It may even make the days darker in a literal sense. Air pollution, for example frequently cuts by 40 percent the amount of sunlight reaching the earth. A stone statue standing ina park or in the center of a city gets dirtier and deteriorates much faster than a statue standing in the desert for hundreds of years.

The greatest source of air pollution in the world is the automobile. However, fuel burned in stationary sources, such as in heating units for building, and industrial furnaces, is also largely responsible for our foul air, as are cigarettes and cleaning slovents on some days, breathing the air out side can cause vomiting, giddiness and headaches. Air pollutions are invisible monsters. They make the air poisonous.

Air pollution is not just the problem of cities, nor is it restricted to industrialized countries. It has become a globel problem and a health hazard. Metoorologists have found in the industrialized countries, where it is particularly concentrated and hang over large cities like a thick cloud of dust under certain conditions the concentration of air pollutants in cities and be magnified to a starting degree. And we have now become aware that certain air pollutants are destroying the protective ozone in the upper atmosphere, and others may be dangerously warming the earth.

Under certain conditions, the polluted air of cities can be amplified by temperature decreases with altitude, but whan a layer of warm air moves above the cooled air, it limits the mormal upward flow of the air from below. As a result, polluted air nearer the grounded is not allowed to escape into the upper atmosphere. This means the foul air is trapped and the unfortunats

people below must breaths their own pollutions insteat of releasing them into the air for other citizens of breathe. When temperature inversions occur over cities, the number of deathe from respiratory ailments often rises sharfly.

Polluted air contains dangarous gases and chemicals some of them are given below with their dangerous effects to show the extent of damage that they can cause to life on earth.

Pollutants and their effects
Carbonmonoxide reduces blood's oxygen carrying ability, streses heart; causes headcheeses, dizziness and nausea.

Nitrogen oxidescauses visible leaf damage, retards plants growth, irritaies langs, eyes and nose with nydrocarbons produces photo chemical smong, cordes metals; damages materias.

Sulphur oxides causes shortand long term leaf damage; damages many types of trees destroys plant photo synhnic pirments; irritates eyes, nose and langri crodes statues, corrodes metals, dameges febris; leather and paper.

Hydrocarbons slows plant growth; causes abnormal leaf and bud development; may cause cancer.

Particulate mater aqqravates lung and neart condition; corrodes metals; froms grime on objects in environment, obscures vision.

***T. Thuvarakan***
*Arts 12E*



# இன்றைய பணம்

நாம் பல்வேறு கொடுக்கல் வாங்கல்களுக்கு பணத்தைப் பயன்படுத்துகின்றோம். பணத்தைப் பெற்றுக்கொள்ள, அதை வைத்துக்கொள்ள, செலவு செய்ய நாம் விரும்புகின்றோம். இன்றும் நாம் பயன்படுத்தும் பணம்தான் நாணயங்களையும், உலோக நாணயங்களையும் உள்ளடக்கியுள்ளது. அவற்றில் பௌதீகத் தன்மை அதாவது பொருள்களுக்கான பெறுமதி இல்லை. அதன் பெறுமதி பொருள் சேவைகளைக் கொள்வனவு செய்யவுள்ள ஆற்றலிலேயே தங்கியுள்ளது.

முன்னைய காலங்களில் பணம் எனப்படுவது பண்டமாற்று ஊடகமாக (medium of Exahange) மட்டுமே தொழிற்பட்டது. ஆனால் தற்போது பெறுமதியை அளவிடும் அளவுகோல் (Standard of value), பெறுமானத்திரட்டு (Store of value), பிற்பட்ட கொடுப்பனவுகளின் நியமம் (Standard of future payment) என்னும் பணிகளும் பணத்திற்குண்டு. மற்றும் இன்றைய பணமாகிய உலோகத்தாள் நாணயங்கள் நிதி அதிகாரிகளால் வெளியிடப்படுவதுடன் அவை புழக்கப்பணம் எனவும் அழைக்கப்படுகின்றன. இப்புழக்கப் பணத்தின் அலகு ரூபாவாகும். ஒவ்வொரு நாட்டிலும் வெவ்வேறு பெயர்களிலான புழக்கப் பண அலகுகள் பாவனையில் உள்ளன. மற்றும் இப்புழக்கப் பணமானது சட்ட அதிகாரம் கொண்டதாகவும் காணப்படுகின்றது.

இன்றைய பணத்தினை பல்வேறு வகையாக வகைப்படுத்தமுடியும். அவையாவன அங்கிகாரப் பணம், வங்கிப் பணம், கிட்டிய பணம், பொருட்பணம், நியமப்பணம், அடையாளப் பணம், இலத்திரனியல் பணம் (E-Cash - E - Money) என பல்வேறு வகைப்படுத்தப்படுகின்றது. இவற்றுள் அங்கிகாரப் பணத்தினை எடுத்துக்கொண்டால் இது இரு வகைப்படுத்தப்படுகின்றது. அவையாவன, வரையறுத்த சட்ட நாணயம் (Limited legal tender), வரையறுக்கப்படாத சட்ட விதி நாணயம் (UN Limited legal tender) என்பதாகும். இவற்றுள் எமது நாட்டில் ஒரு ரூபாவுக்கு குறைந்த பெறுமதி கொண்ட 1, 2, 5, 10, 25, 50 சத நாணயங்கள் வரையறுத்த சட்டவிதி நாணயமாகக் கருதப்படும். 1 - 2 - 5 சத நாணயங்களில் ஒரே தடவையில் ஒரு ரூபாவுக்கு உட்பட்ட கொடுப்பனவுகளைச் செலுத்தவே சட்ட அதிகாரம் உண்டு. ஒரு ரூபாவும் அதற்கு மேற்பட்ட பெறுமதியும் உடைய நாணயமும், நாணயத் தாள்களும் வரையறுக்கப்படாத சட்டப் பண வகையுடன் அடங்கும். மேலும் பணமானது தற்போது பல்வேறு வளர்ச்சியைக் கண்டுவருகின்றது. அதில் சிறப்பான எடுத்துக்காட்டாக இலத்திரனியல் பணத்தினை (E-Money) எடுத்துக்கொண்டால்,

கொடுக்கல் வாங்கலில் பயன்படுத்தப்படும் கடனட்டை (Credit card), வரவுத்தாள் (Debit card) போன்ற பிளாஸ்டிக் அட்டைகள் இலத்திரனியல் பணமாக அழைக்கப்படுகின்றது. இவை பதிலீட்டுப் பணம் எனவும் அழைக்கப்படும். இப்பொழுதுள்ள தகவல் தொழில்நுட்பம், டிஜிட்டல் தொழில்நுட்ப முன்னேற்றங்களுடன் உள்நாட்டு சர்வதேச கொடுக்கல் வாங்கல்களில் இலத்திரனியல்

பணம் பெருமளவு பயன்படுத்தப்படுகின்றது. இலத்திரனியல் பணப்பை (E - Purse) இப்பொழுதுள்ள புதிய அம்சமாகும்.

இதில் கடனட்டையை (Credit cards) எடுத்துக்கொண்டால் இது இன்று பிரபல்யமடைந்து காணப்படுகின்றது. இதில் Visa card, Master card, AMEX என்பவற்றில் ஏதாவது ஒன்றை நமது வாடிக்கையாளர்களுக்கு நிதி நிறுவனங்கள் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளன. பல்வேறு வசதிகளின் ஊடாகவும், வட்டி விகிதங்களுடனும் வழங்கப்படும் கடனட்டை தொடர்பான உயர்ந்த கேள்வி காணப்படுகின்றது. விசேடமாக சிறப்புச்சந்தை, எரிபொருள் நிரப்பு நிலையம், உணவுச்சாலைகள், வைத்தியசாலைகள் போன்ற வணிகங்களின் வளர்ச்சி காரணமாக கடனட்டை உபயோகம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

உண்மையில் பல வியாபார நிறுவனங்கள் இப்போது Visa card, Master card, American Express card போன்ற பிரதான வகைக் கடனட்டைகள் மூலமாக கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதில் விருப்பம் காட்டுகின்றன.

மற்றும் நேர்வரவு ஒப்படைப்பு (Direct Credit Transfers) வணிக வங்கிகளின் வாடிக்கையாளர் தாம் செலுத்தவேண்டிய கொடுப்பனவுகளை அதாவது தொலைபேசி, மின்சாரம், காப்புறுதிக் கட்டணங்களை இலத்திரனியல் ஊடகங்கள் மூலமாகக் கொடுத்துத் தீர்த்தல்.

மற்றும் செலவுத்தாளானது (Debit Cards) தன்னிச்சையாக இயங்கும். டெல்லர் அல்லது வணிக நிறுவனங்கள் கொடுப்பனவு செய்யும் இலத்திரனியல் வலையமைப்பு ஊடாக பணத்தை மீளப்பெற வணிக வங்கிகளின் கணக்கு உரிமையாளருக்கு இந்த அட்டைகள் வழங்கப்படுகின்றன. மற்றும் பணம் முன்கூட்டியே செலுத்தப்பட்ட அட்டையானது (Pre paid card) பல தொலைபேசிக் கம்பனிகள் முன் பணம் செலுத்தப்பட்ட அட்டைகளை வழங்கியுள்ளன. அவற்றைப் பயன்படுத்தி தெருக்களில் அமைக்கப்பட்டுள்ள பொறி மூலமாக தொலைபேசிச் சேவையைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

மேலும் பணத்தின் கொடுப்பனவு அட்டை அடிக்கட்டமைப்பு வசதிகள் காணப்படுகின்றன. அவையாவன, தன்னியக்க டெல்லர் இயந்திரம் ATM, இலத்திரனியல் ஒப்படை வலையமைப்பு (Electronic Fund Transfer at Point Of Sale (DFTPOS), டெலிவங்கி வசதி (Tele Banking), இன்டர்நெட் வங்கி வசதி (Internet Banking) போன்ற வசதிகள் மேலும் பணத்தின் உச்சகட்ட வளர்ச்சிக் கட்டங்களை எடுத்துக்காட்டுகின்றது.

இன்றைய காலகட்டத்தில் பணத்தின் கொள்வனவு ஆற்றல் மிகவேகமாக வீழ்ச்சியடைகின்றது. அதாவது ஒரு அலகு பணத்திற்கு கொள்வனவு செய்யக்கூடிய பொருள், சேவைகளின் அளவு குறையும். அத்துடன் சேமிப்பவர்களுக்கு பணவீக்கப் பாதகமானது பணவீக்க காலத்திற்குள் சேமிக்கும் பணத்தின் பெறுமதி அல்லது பெறுமானத் திரட்டு மூலமாகப் பயன்படுத்துதல் விவேகமான செயலாக அமையாது. அதுமட்டுமல்லாது இப்பணவீக்கமானது கடன் வழங்குனர்களிற்கும் நிதி நிறுவனங்களிற்கும் இது பாதகமாகவே அமைகின்றது.

# வலியோடு வா (வலி தாண்டி வா)

தூரம் அதிகமில்லை
கூப்பிடு தூரம் வரையில்தான்
இலக்கு.

நெஞ்சிலே வலி....
எட்டி நடக்கும் பாதங்களிலும் வலி....
கண்களிலே தூக்கம்....
கைகளிலே சோர்வு....

இன்னும் சொற்ப தூரம்தான்
வலியோடு விரைந்து வா....

தாயின் கருப்பையின் வலி
மழலையின் பிறப்புக்குத்தான்

வித்தின் வெடிப்பு
நாற்றின் வளர்ச்சிக்குத்தான்

ஏழையின் உழைப்பிலே வலி
ஒரு வேளை கஞ்சிக்குத்தான்

குயிலின் குரலில் வலி
விடியலின் செய்திக்காகத்தான்

செடியின் மொட்டிலே வலி
பூவொன்றின் மலர்வுக்குத்தான்

இடி மின்னலாய்
மோதும் முகிலுக்கு வலி
மண்ணில் மழைக்குத்தான்

தோழனே!
வலி என்பது உனக்கு மட்டுமல்ல

இயற்கைக்கும் வலிகள் உண்டு
பூமியும் இதைத் தாங்குகிறது
அதனால் தான்
அடிக்கடி சீற்றம் கொள்கிறது
வலிகளைத் தாங்குபவனுக்கே
இந்த வையகம் சொந்தம்

இன்னும் இன்னும்
சிந்தனைகளோடு அடைகாக்காதே
சிந்தனை உணர்வுக்கு
உருக்கொடு!
வலிகளைத் தாங்கி வா
வாசல் திறந்து வானத்தில் ஏறலாம்.

**யோ. சிவராம்**
**கலைப்பிரிவு 2009**

## மாணவர்கள் செய்யவேண்டியவை

இறை நம்பிக்கையை வளர்க்கவேண்டும்.
வயதானவர்களுக்கும் பலவீனமானவர்களுக்கும் உதவி செய்யும் மனப்பாங்கை வளர்க்கவேண்டும்.
மனச்சாட்சிக்கு ஏற்ப கடமையுணர்வுடன் செயற்படவேண்டும்.
மற்றவர்களுக்கு கஷ்டம் கொடுக்காது நமது கடமைகளைச் சரியாகச் செய்யவேண்டும்.

# பங்குச்சந்தையின் தோற்றமும் வளர்ச்சியும்

- 1896 (COLOMBO SHARE MARKET)
  (கொழும்பு பங்குச்சந்தை)
- The Share Broker's Association
  (பங்குத்தரகர் சங்கம்)
- Colombo Broker's Association - 1904
- 1948 செலாவணி கட்டுப்பாட்டு விதி அறிமுகம் செய்யப்பட்டது.
  140 கம்பனிகள் பட்டியலிடப்பட்டது (120) பெருந்தோட்டக் கம்பனிகள்)
- 1948 - 1977 வளர்ச்சியடைந்திருக்கவில்லை.
- 1975 காணிச் சீர்திருத்தச் சட்டம் (90 க்கும் அதிகமான பெருந்தோட்டக் கம்பனிகள் கைமாற்றம் செய்யப்படவில்லை அரச மயமாக்கப்பட்டது)
- 1976 பட்டியலிடப்பட்ட கம்பனி 76 ஆக வீழ்ச்சி
- 1977 திறந்த பொருளாதார கொள்கை அறிமுகம்
  a) திறந்த பொருளாதார வளர்ச்சி
  b) தனியார்துறை வளர்ச்சி
- 1984.07.02 - Trading Floor (Mackinnon's Building)
- 1985 - ASPI அனைத்து பங்கு விலைச்சுட்டெண் அறிமுகம் அடிப்படைப்புள்ளி - 100
  2550(30.09.2007)
- 1985

கொழும்பு தரகர் சங்கம் ↓     பங்குத் தரகர் சங்கம் ↓

கொழும்பு பங்குச் சந்தை
(Colombo Stock Exchange)
Secondary Market
இரண்டாந்தரச் சந்தை
↓
திறந்த கத்தல் முறை
(Open Outcry System)

- 1986 சர்வதேச பங்கு பரிவர்த்தனை சம்மேளனத்தின் அங்கத்துவம்.
- 1990 வெளிநாட்டு முதலீடு
- 1991 நம்பிக்கை அலகு பொறுப்பாட்சிகளின் தோற்றம் (Unit Trust)
- 1992 CDS மத்திய வைப்புத் திட்டம் அறிமுகம்
- 1996
  - OTC
  - Main Board (முதலாம்தரப் பட்டியல்)
    Second Board (இரண்டாம்தரப் பட்டியல்)

- 1997 ATS (Automated Trading System)
  (தன்னியக்க வியாபார முறை) பங்குப் பத்திரமின்றி கைமாற்றல்
- 1998.12.31 - SPI (உணர்திறன் விலைச்சுட்டி) - 30 கம்பனிகள் நீக்கப்பட்டது.
- 1999.01.01 - மீலங்கா விலைச்சுட்டி அறிமுகம் (Milanka Price Index)
  MPI - கம்பனி - 25
  அடிப்படை - 1000 புள்ளி 3460 (30.09.2007)
  காலாண்டுக்கு ஒருமுறை 25 கம்பனிகள் தெரிவுசெய்யப்படும்.

- பங்குச் சந்தையின் கிளை திறப்பு
  1999 - மாத்தறை (Matara)
  2003 - கண்டி (Kandy)
  2005 - குருநாகல் (Kurunagal)
  2007 - நீர்கொழும்பு (Negombo)

## பங்குகளின் விலை ஏற்ற இறக்கத்துக்கான காரணிகள்

- ஊக வியாபாரம் (Speculation)
- பொருளாதாரக் காரணிகள் (Economic Factors)
- அரசியல் உறுதித்தன்மை (Political Stability)
- யுத்தம் (War)
- வட்டி வீதம் (Interest Rate)
- பண வீக்கம் (Infation)
- வெளிநாட்டுச் செலாவணி வீதம் (Exchange Rates)
- அரச வரிக் கொள்கைகள் (Tax)
- நாணயக் கொள்கைகள் (Monetary)
- மின்வெட்டு (Power cut)
- வரட்சி (Drought)
- அயல்நாட்டு போட்டி/ யுத்தம்
- வெளிநாட்டு முதலீடு/ விற்பனை
- ஊடகச் செய்திகள்
- குறிப்பிட்ட கம்பனியில் பங்கு வாங்குதல்/ விற்றல்
- வரவு செலவுத் திட்டம் (Budget)
- பங்கின் உழைப்பு
- கம்பனிச் செயற்பாடு (Company Act)
- அறிக்கைகளின் வெளிப்பாடுகள்
- திரவத்தன்மை

## பங்குச்சந்தையின் உறுப்புரிமையும் நிருவாகமும்

FINANCE MINISTRY
(நிதியமைச்சு)

(SEC)
(பிணைகள் பரிவர்த்தனை ஆணைக்குழு)

Unit Trist
நம்பிக்கை அலகு பொறுப்பாட்சி

CSE (SECONDARY MARKET)
கொழும்புப் பங்கு பரிவர்த்தன நிலையம்

CDS-CENTRAL DEPOSITARY SYSTEM
மத்திய வைப்புத் திட்டம்

தரகு நிறுவனங்கள்
(20வது தரகு நிறுவன கம்பனிகள்)

## பங்குச்சந்தையில் பட்டியலிடும் தகைமை

- முதலாந்தரப் பட்டியல் (Main Board)
- இரண்டாம்தரப் பட்டியல் (Second Board)
- OTC பட்டியல்
- ODD LOT BOARD (100 இலும் குறைந்த பங்குகள்)

முதலாந்தரப் பட்டியல்

a) 75 மில்லியன்

b) குறைந்தது 3 வருட ஆண்டறிக்கை திருப்திபடுத்தல் வேண்டும்.

இரண்டாம்தரப் பட்டியல்

a) 5 மில்லியன்

b) அறிமுகம் - 1996

OTC - பட்டியல் படுத்தப்படாத கம்பனிகள்.

DEFAULT BOARD - Main (முதலாம்) அல்லது Second Board (இரண்டாம்) இல் பட்டியலிடப்பட்ட கம்பனி குறிப்பிட்ட காலத்தில் காலாண்டு அல்லது ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்படாத பட்சத்தில் Default Board இற்கு தற்காலிகமாக மாற்றப்படும்.

## தரகு நிறுவனம் ஒன்றின் கட்டமைப்பு

1. Trading
2. Research
3. Account

1. **Trading Dept** *முதலீட்டாளர்கள் கட்டளைகளிற்கு (ORDER) ஏற்ப கணனி மூலம் பதிவுசெய்து வாங்கிவிற்றல்.

*Orders — Day Order / GTC Order / Market Order

Day Orger - நாள் கட்டளை
GTC Order - 5 நாள் கட்டளை
Market Order - சந்தை விலை கட்டளை

விலை எல்லை : ரூபா 5 வரைக்கும் 10 சத வித்தியாசமாகவும் அதன்பின் 5/25 லிருந்து 25 சத வித்தியாசமான கட்டளைகள் பதியலாம்.

Crossing : ஒரு குறிப்பிட்ட கம்பனியில் சந்தைப் பெறுமதி 10 million ரூபாவைவிட கூடுதலாக இருப்பின் சிறு பங்குகளை சந்தையில் வாங்காமல் Crossing செய்யலாம். பங்குகளை வாங்கிவிற்கும்போது விலை குறித்தல், இறுதிவிலையிலிருந்து 50% ஆகும். பங்குகள் கிடைப்பதற்கான முதல் சந்தர்ப்பம் விலை இரண்டாவது நேரம்.

TRADING HOURS 9:00 - 9:30 - PRE OPEN TIME

ஆரம்பத்தில் 9.30 முதல் 12.30 மணிவரை வியாபாரம் நடைபெற்றது.
28.06.2004 - 9.30 முதல் 1.30 மணிவரைக்கும் மாற்றப்பட்டது.
03.05.2005 - 9.30 முதல் 2.30 மணியாக்கப்பட்டது.

2. **Research Dept :** தரகு நிறுவனத்தில் ஒரு பிரிவு ஆய்வு பிரிவாகும். இங்கு ஆண்டறிக்கை, காலாண்டு அறிக்கை மற்றும் கம்பனிகள் சம்பந்தமான அறிக்கைகள் பற்றி தெரிந்துகொள்ளலாம்.

3. **Accounts Dept :** முதலீட்டாளர்களின் கொடுக்கல் வாங்கல், அறிக்கைகள் Statement.

## பங்குச்சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ளவை

- சாதாரண பங்குகள் - Ordinary Shares
- முன்னுரிமைப் பங்குகள் - Primary Shares
- பங்கு ஆணைப் பத்திரம் - Warrants
- வாக்குரிமை அற்ற பங்குகள் - Non Voting Shares
- தொதிக்கடன்கள் - Debentures
- கடன் பத்திரங்கள் - Bonds
- அரசாங்க பிணைகள் - Government Bonds

## பங்கு முதலீட்டு வருவாய்

- பங்கிலாபம் (Dividends)
- மூலதன இலாபம் (Capital Gain)
- மொத்த வருவாய் (Total Returns)
- உபகார பங்கு வழங்கல் (Bonus Issues)
- உரிமை பங்கு வழங்கல் (Right Issues)

## சட்டத்திற்கு முரணான முதலீடு

Insider Dealing - உள்ளுரைபவரின் கொடுக்கல்∴ வாங்கல்
Front Running - முன்னோடுதல்
Manipulation - விலை ஆளுகை

## பங்குகள் வாங்குவதற்கான எல்லை

12% மேற்பட்ட பங்குகளை குறிப்பிட்ட ஒரு கம்பனியில் தனிநபர் அல்லது நிறுவனம் வாங்கும் பட்சத்தில்,

அவர் CSE இற்கும் மற்றைய பங்குதாரருக்கும் 2 சந்தை நாட்களுக்குள் அறிவித்தல் வேண்டும்.

30% அல்லது அதற்கு மேல் பங்குகள் ஓர் குறிப்பிட்ட நிறுவனத்தில் வாங்குவாராயின் அவர் கடந்த 12 மாதங்களில் அந்த பங்கு சந்தையில் வாங்கிய அதிகூடிய விலையை மற்றைய பங்குதாரர்களுக்கு offer பண்ணவேண்டும்.

குறிப்பு : இது வாக்குரிமை பங்குகளிற்கு மட்டும்தான்.


## பங்குகளை வாங்குவதற்கு தகுதியுடையோர்

- 18 வயதுக்கு மேற்பட்டவர் (தனிநபர்)
- 18 வயதுக்கு மேற்பட்டவர் (கூட்டு - Joint)
- தனியார் நிறுவனம்
- பட்டியலிடப்பட்ட கம்பனிகள்
- நம்பிக்கை அலகு பொறுப்பு நிதியங்கள் (UNIT TRUST)
- ஊழியர் சேமலாப நிதியம் (EPF)
- ஊழியர் நம்பிக்கை நிதியம் (ETF)
- காப்புறுதி நிறுவனங்கள் (Insurance)
- தனியார் வங்கிகள் அல்லது அரச வங்கிகள்
- வெளிநாட்டுக் கம்பனிகள்
- வெளிநாட்டு தனிநபர்

"வழி" மாணவர்களிற்கு வழிகாட்ட எமது வாழ்த்துக்கள்



சகலவிதமான எலக்றிக் பொருட்களை
நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள
பருத்தித்துறையில் நாடவேண்டிய நம்பிக்கையான
ஸ்தாபனம்





# சிவராஜ் ரேடிங் கோ

**பிரதான வீதி, பருத்தித்துறை.**

---

ஹாட்லியின் "வழி" க்கு வாழ்த்துத் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றோம்.

சகலவிதமான றேடியோ, **TV, Deak, CD,**
**VCD, DVD** மற்றும் **Dish** அன்ரனாக்கள் கிறைண்டர்கள்,
றைஸ் குக்கர்கள் ஆகியவற்றை நிதானமான விலையில்
பெற்றுக்கொள்ள





# "கிங் மரட்"

**இல. 195, பஸ் நிலையம் முன்பாக, பருத்தித்துறை.**

ஹாட்லியின் "வழி" என்றும் வாழ
எமது வாழ்த்துக்கள்

சகலவிதமான மீன்பிடி
உபகரணங்கள் மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள நீங்கள்
நாடவேண்டிய இடம்

# பிரான்சிஸ்
# ரேடேஸ்

பிரதான வீதி, பருத்தித்துறை.

"வழி" என்றும் புதுப்பொலிவுடன்
திகழ எமது வாழ்த்துக்கள்

சகலவிதமான
சாறி வேக்கிங் வகை, சில்வர்,
பரிசுப்பொருட்கள் மற்றும் படம்
பிறேம், றேடியோ, கிரைண்டர்கள்
போன்றவற்றைப் பெற்றுக்கொள்ள
சிறந்த இடம்




# மோகன் பான்சி
# ஹவுஸ்

பிரதான வீதி, பருத்தித்துறை.

"வழி" மாணவர்களுக்கு வழிகாட்ட
எமது வாழ்த்துக்கள்

சகலவிதமான பலசரக்குப் பொருட்கள்
பாடசாலை உபகரணங்கள் அழகுசாதன
அன்பளிப்புப் பொருட்கள் மற்றும் உள்ளூர்
வெளியூர் தொலைத்தொடர்பு
சேவைகளிற்கும் நாடவேண்டிய இடம்

# ரோகிணி
பல்பொருள் வாணிபம்
தொலைத்தொடர்பகம்

கல்லூரி வீதி, பருத்தித்துறை.



Tel. : 021-2263708
021-2264217

"வழி" எனும் சஞ்சிகை மலர
மனப்பூர்வமான வாழ்த்துக்கள்

# ஜதுஸ் தையல் நிலையம்

கண்ணைக்கவரும்
அழகூட்டும் ஆடைகளை
சிறந்த முறையில் தைத்துப்
பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்



ஜதுஸ் தையல்
நிலையம்

பிரதான வீதி, பருத்தித்துறை.

# செயலாளரின் நன்றியுரை

யா/ ஹாட்லிக் கல்லூரியின் "வழி" என்ற கொடியின் 05வது இதழ் இன்று மலர்ந்து உங்கள் கைகளில் மணம்வீசிக் கொண்டிருப்பதையிட்டு மனம் பூரிப்படைகின்றேன். கல்லூரியின் கலை வர்த்தகப் பிரிவு மாணவர்களின் கூட்டு முயற்சியால் இம்மலர் வெளியிடப்பட்டிருப்பது மேலும் இதற்கு மெருகூட்டுவதாக அமைந்துள்ளது.

நவீன கல்வி சீர்திருத்தங்களிற்கேற்ப மாணவர்களாகிய நாம் சுயகற்றல், சுயசிந்தனைகளை வளர்க்கவும் தேடிக் கற்பதைத் தூண்டவும் இவ் "வழி" பல வழிகளிலும் வழிவிடுவதால் தொடர்ந்தும் வழி தனது பணியை முன்னெடுக்க எமது அடுத்துவரும் மாணவ சமூகம் தமது பூரண ஒத்துழைப்பை வழங்குவார்கள் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

மேலும் இவ் சஞ்சிகை சிறப்புற வெளிவர உதவிய கல்லூரி முதல்வர், ஆசிரிய சமூகத்தினர், மாணவ சகோதரர்கள், மற்றும் நிதி உதவி வழங்கிய வர்த்தக சமூகத்தினர், வாழ்த்து செய்தி வழங்கிய கல்விக் காரியாலய உத்தியோகஸ்தர்கள் என்றும் பாராட்டப்பட வேண்டியவர்களாவர்.

மேலும், சஞ்சிகை சிறப்புற ஆக்கங்களை தந்துதவிய படைப்பாளிகளிற்கும், குறுகிய காலத்தில் அச்சுப்பதிப்பு செய்து உதவிய அச்சக சமூகத்தினருக்கும், வெளியீட்டு விழாவிற்கு வேண்டிய மண்டப உதவியை நல்கிய மெதடிஸ்த திருச்சபையினருக்கும், மற்றும் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய அன்பர்கள் அனைவர்க்கும் நன்றிகளை தெரிவிப்பதுடன் "வழி" இன் எதிர்காலம் சிறப்படைய அடுத்துவரும் மாணவ சமூகம் பூரண ஒத்துழைப்பை வழங்குவர் என்ற நம்பிக்கையுடன் வழியினை வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

செயலாளர்,

**சா. அ. ரதீஸ்கரன்**



# கல்லூரிக் கீதம்

ஹாட்லி நின் மக்கள் நாம்
நின் கீர்த்திக்கே என்றும்
வளர்ந்து கற்ற நாம் – என்றும்
நின் வழி நிற்போம்

நின் ஜோதியால் எம் ஒளியே
எங்கும் வீசுடுவோம்
நாட்டுக்குச் சேவை மெய் – நேர்மை
நின் வாசல் ஈயுமே

ஹாட்லி என்றுமே எம் சுலோகம்
எம் இலக்கென்றும் அழியா
ஹாட்லி என்றுமே அது எம் சுலோகம்
ஒளி வீசட்டும்

ஹாட்லியீர் எழுமின்
எம் மாதா அழைக்கின்றார்
அவர் பீடம் கற்றோரை
விற்பன்னர் வீரர் தாம்

நீரவர் வழி நின்று
அவர் லட்சியம் கொண்டு
உம்வீர உறுதி கொள்ளுவீர்
எப்புயலும் போகும்

ஹாட்லி என்றுமே எம் சுலோகம்
எம் இலக்கென்றும் அழியா
ஹாட்லி என்றுமே அது எம் சுலோகம்
ஒளி வீசட்டும்

## With Best Wishes from ........ Best wishes for "VALI




18-35 வயதிற்கிடைப்பட்ட இளைஞர் / யுவதிகளுக்கென பிரத்தியேக அனுகூலங்களையும் நன்மைகளையும் உடைய சேமிப்புக் கணக்கு

ரன்கெகுளு கணக்கு வைத்திருப்பவர்கள் 18 வயதைப் பூர்த்தி செய்ததும் இக்கணக்குள் அவர்களது விருப்பப்படி 18+ இளைஞர் சேமிப்புக் கணக்குக்கு மாற்றப்படும்.

18-25 வயதுகிடைப்பட்ட இளைஞர்/யுவதிகள் ஆகக் குறைந்த வைப்புத்தொகை ரூ 100/- ஐ வைப்பிலிட்டு புதிதாக 18+ கணக்கை ஆரம்பித்து அதன் நன்மைகளை 35 வயதையடையும் வரை அனுபவிக்கலாம்.

சாதாரண சேமிப்பு கணக்குகளுக்குரிய வட்டி வீதத்தை விட 0.5% கூடிய வட்டி வழங்கப்படும்.

விசேட அனுகூலங்கள்:-
காப்புறுதி
திருமணப்பரிசாக தங்கப்பவுண்
முதல் குழந்தைக்கு வங்கிக் கணக்கொன்று
புலமைப்பரிசில்
கடன்அட்டை (Credit Card)
ATM (Card) அட்டை
கடன் வசதிகள்

BOC

தமிழ்ப்பூங்கா நெல்லியடி 021 226 4014